விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 22 ஞாயிற்றுக்கிழமை (05.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 137

## ஊடக சுதந்திரத்தில் இலங்கை 162ஆவது இடம்

(கொழும்பு)

பத்திரிகை சுதந்திர தினம் ஒவ்வொரு ஆண்டும் மே 3-ம் திகதி கொண்டாடப்பட்டுகிறது. இந்நிலையில் பத்திரிகை சுதந்திர அட்டவணை ஒன்றை "ரிபோர்டர்ஸ் வித் அவுட் பார்டர்ஸ்" என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. அதன் பிரகாரம் பத்திரிகை சுதந்திரத்தில் இலங்கை 162-வது இடத்தில் இருக்கிறது.

பத்திரிகை சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதத்தில் இந்தத் தினம் கொண்டாடப்படுகிறது.


இந்த ஆண்டுக்கான அட்டவணையில் இந்தியாவுக்கு 140-வது இடம் கிடைத்துள்ளது. இந்தியாவில் கடந்த 2012-ம் ஆண்டு மட்டும் பத்திரிகையாளர் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த அட்டவணையில் பின்லாந்து முதல் இடத்தைப் பெற்றுள்ளது. அட்டவணையில் இங்கிலாந்து 29-வது இடத்திலும், அமெரிக்கா 32-வது இடத்திலும் இருக்கின்றன. ரஷ்யா 148-வது இடத்தைப் பிடித்துள்ளது. சீனா 173-வது இடத்திலும், பாகிஸ்தான் 159 இடத்திலும் உள்ளன. (எ-11)

# வடக்கு தேர்தலுக்கு எதிராக வழக்கு!

## அல்லே குணவன்ச தேரர் எச்சரிக்கை


*(கொழும்பு)*, வடக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என தேசத்தைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார்.



வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட 21 ஆயிரம் சிங்களவர்களை மீள்குடியேற்றாது தேர்தல் நடத்தப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு சிங்களவர்கள் மீள்குடியேற்றப்படாது தேர்தல் நடத்தப்பட்டால் அது உரிமை மீறலாகும்.

அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும். 1977-ம் ஆண்டு சிங்களவர்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டதன் பின்னர் அவர்கள் *(23ஆம் பக்கம் பார்க்க)*

## விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தின் பாகங்கள் கடற்படையால் மீட்பு



தமிழீழ விடுதலைப்புலிகளால் 15 வருடங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப்பட்டதாக கூறப்படும் லயன் எயார் -அன்டனோவ் 24 ரக விமானத்தின் நொறுங்கிய பகுதிகளில் சில நேற்று மீட்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரணைதீவு கடற்பகுதியில் விமானத்தின் பாகங்களைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்படுவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் *(24ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையில் அடுத்த வருடம் ஆட்சி மாற்றம் ஏற்படும்!

### ரணில் தெரிவிப்பு

இலங்கையில் அடுத்த ஆண்டில் ஆட்சி மாறும். இலங்கை ஊடகவியலாளர்கள் அரசாங்கத்தின் சட்டைப்பைக்குள் இருக்கிறார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் 40வது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய தேசிய சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் திலக் மாரப்பன, இலங்கைக்கான சிறந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே எனக் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச நாடுகளுடன் நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வு கொண்ட தலைவராகவும் ரணில் இருப்பதாக திலக் மாரப்பன குறிப்பிட்டுள்ளார்

சிறந்த அனுபவம், ஆளுமை கொண்ட எதிர்க் கட்சித் தலைவர் ஊழல், பொய் அற்றவராகவும் *(02ஆம் பக்ம் பார்க்க)*

## காலநிலையில் திடீர் மாற்றம்

(கொழும்பு)

இலங்கையின் கால நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக வளிமண்டவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கைக்கு அருகாமையில் இடை வெப்ப வலயம் தென்படுவதால் இத்தினங்களில் கால நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யுமெனவும் இடி மின்னல் தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாப்பதில் மக்கள் *(23ஆம் பக்கம் பார்க்க)*

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க தமிழ் கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசாங்கம் காணிகளை கையகப்படுத்தும் நடவடிக்கையை தடுத்து, இடம் பெயர்ந்துள்ள மக்களை முழுமையாக மீள்குடியேற்றம் செய்வதற்கு இலங்கை அரசுக்கு அவுஸ்திரேலியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருக்கின்றது.

வாழ்வாதாரம் உட்பட அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணமாகவே மக்கள் படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியிருக்கின்றது.

மூன்று நாள் விஜயமாக வியாழனன்று கொழும்பு வந்துள்ள அவுஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் குடியுரிமை விவகார அமைச்சர் பிரண்டன் ஓ கான்னரை சந்தித்த போதே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

பொதுநலவாய நாடுகளின் மாநாடு இலங்கையில் நடப்பதென்பது இலங்கை அரசாங்கத்தை மனித உரிமைகள் விவகாரத்தில் *(02ஆம் பக்கம் பார்க்க)*

## அரசு–முஸ்லிம் காங்கிரஸ் உறவில் விரிசல் நிலை!

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிக்கும் இடையிலான உறவுகளில் விரிசல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கக் கூட்டணியில் நீடிப்பதா இல்லையா என்பது குறித்து விரைவில் தீர்மானிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் 7ஆம் திகதி இது குறித்த இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட உள்ளன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர் பீடத்தினர் கூடி இறுதித் தீர்மானம் எடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியை நடத்த அரசாங்கத்திற்கு ஆதரவளித்த போதிலும் மாகாண முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளுக்கு அரசாங்கம் தீர்வு *(23ஆம் பக்கம் பார்க்க)*

## பொதுநலவாய மாநாட்டில் பிரி.பிரதமர் கலந்துகொள்வார்

(லண்டன்)



இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்பார் என பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பல்வேறு அமைப்புக்களும் நாடுகளும் குரல் எழுப்பி வருகின்றன.

எனவே இலங்கையில் இடம்பெறும் பொதுநலவாய மாநாட்டை பிரித்தானியா *(23ஆம் பக்கம் பார்க்க)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**






## விற்பனைக்கு

நியூ பேனார்ட் (NEW BERNARD) NO.1 புறொயிலர் இன கோழி குஞ்சுகள் எம்மிடம் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம்.

"ஒவ்வொரு புதன்கிழமையும் கோழிக் குஞ்சுகள்" விநியோகிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
செல்வறெட்ணம்
70/II, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
0778448295, 0776176370 (சி-3205)


## மரண அறிவித்தல்

### இளையதம்பி முத்துலிங்கம் (செட்டியார்)



ஊர்காவற்றுறை பருத்தியடைப்பை வதிவிடமாகக் கொண்ட இளையதம்பி முத்துலிங்கம் (செட்டியார்) 04.05.2013 நேற்று காலமானார். அன்னார் இளையதம்பி மாரிமுத்து ஆகியோரின் அன்புப் புதல்வரும், ரூபா, புனிதலிங்கம் (புனிதன்), லேகா, யோகேஸ்வரன் (உடையான்), ஜீதா, புவனேந்திரன் (அண்ணாவி), லக்ஷ்மணன், ரூபராஜ் (குட்டான்), கல்பனா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற கருணா நிர்மலா தேவி, அன்ரனிதாஸ் (அமுதம்), மேனகா, சிவரஞ்சன், டவீந்திரராணி, நிஷாந்தினி, லோஜினி, ரூபிகாந்தன் ஆகியோரின் மாமனாரும், பானுஜா, டிஷிகேஷன், புருஷோத்மன், லோஜிதா, தேஷிகன், தேவசிங், விதுர்ஷன், கீர்த்தன், தமிழிதன், சேதா, சிரன், மணியரசன், ஈகைநிலவன், கதிர், விதுஷா, ஐஸ்வர்யா, கருணி, நிலவெழில், கிருஷா, கனிபன், மருதினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஊர்காவற்றுறை ஊறுண்டி இந்து மயானத்திற்கு ஈமக்கிரியைகளுக்கு மாலை 2.00 மணியளவில் எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்
பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை. (சி-3229) குடும்பத்தினர்.


# வல்வெட்டித்துறையில் உதயமாகியுள்ளது

## மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த வைத்திய நிபுணர்களை ஒன்றிணைத்த தினசரி வைத்தியசேவை.

- வருகை தரும் வைத்திய நிபுணர்கள்
- குழந்தை வைத்திய நிபுணர்கள்
- சத்திர சிகிச்சை நிபுணர்கள்
- தோல் வைத்திய நிபுணர்கள்
- கண் வைத்திய நிபுணர்கள்
- காது, மூக்கு, தொண்டை நிபுணர்கள்
- உளநல வைத்திய ஆலோசனை
- பொது வைத்திய நிபுணர்கள்
- மகபேற்றியல் நிபுணர்கள்
- இதய சிகிச்சை நிபுணர்கள்



First to Care

ECG
ஸ்கான்
இரத்தப் பரிசோதனை



(2540)

Mathujan Medical Consulting Center
மாதுஜன் மருத்துவ ஆலோசனை நிலையம்
மருதடி, வல்வெட்டி, யாழ்.வீதி, வல்வெட்டித்துறை.


### அரசுக்கு...

முன்னேற்றமுள்ள நாடாக மாற்றுவதற்கு எவ்வளவு தூரம் உதவிபுரியும் என்பதை அவுஸ்திரேலியா தான் சிந்திக்க வேண்டும் என்று பிரண்டன் ஓ கானரிடம் தாங்கள் கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இதற்கிடையில் வடமாகாண சபைக்கான தேர்தல் நடக்குமேயானால், அது பற்றிய அறிவித்தல் வெளியாகும் தினத்தில் இருந்து சர்வதேச கண்காணிப் பாளர்களை பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வடக்கில் நிலைகொண்டு அரசாங்கத்திற்கு ஆதரவாக அரசியல் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பதனால் அங்கு நேர்மையான முறையில் தேர்தல் நடத்தப் படுமா என்பது சந்தேகமாக இருப்பதன் காரணமாகவே இந்தக் கோரிக்கை விடுவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடமாகாண சபைக்கான தேர்தல் பற்றி தமக்கு இன்னும் அறிவித்தல் வழங்கப்படவில்லை என்றும் தேர்தல் ஆணையாளர் அரசியல் கட்சிகளின் செயலாளர் களுடனான இந்தச் சந்திப்பின் போது தம்மிடம் தெரிவித்ததாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (எ-11)

### இலங்...

காணப்படுகிறார்.

எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு நல்ல துணைவியார் நல்ல மனநிலை இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே இலங்கைக்கான சிறந்த தலைவராக இருக்க முடியும் என தேசிய சட்டத் தரணிகள் சங்கத் தலைவர் தெரிவித்தார். (எ-11)


## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு தாதிகள் (NURSES) தேவை.

தேர்வுகள் 07.05.2013 இடம்பெறும்.

இடம்:- GLOBAL MEDICALS
இல.769, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். Tel.No.077 3179062
(2528)



கணபதி துணை

## ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில் மஹோற்சவம் - 2013

05.05.2013 ஞாயிற்றுக்கிழமை




நண்பகல் 12.00 மணி
தினமும் நண்பகல் அன்னதானம் இடம்பெறும்
www.inuvilinfo.com இணுவில்

அனுசரனை : யோகா புடைவையகம். சனா பாதணியும் அழகு மாடம். கே.கே.எஸ்.வீதி, உப்புமடசந்தி, கோண்டாவில்.


## மரண அறிவித்தல்

### திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரத திணைக்களம்)

இளவாலையைப் பிறப்பிடமாகவும் நெல்லியடி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம் அவர்கள் 04.05.2013 சனிக்கிழமையன்று காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை திருச்செல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திரேசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மகனும் நெல்லியடி கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மனுவேற்பிள்ளை இசபெல்லா தம்பதிகளின் அன்பு மருமகனும் சுகிர்தம் மரியநாயகியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற யேசுரட்ணம் (Subt.Small industries Atchuvely), மங்களநாதன் (ஓய்வு பெற்ற ஆசிரியர், St.Hentry's College), மதுரநாயகி தவப்பிரகாசம் (ஓய்வு பெற்ற ஆசிரியை, அவுஸ்திரேலியா), Rev.Fr. தேவராஜன் (ராஜன்), லண்டன், தர்மபாலன் (லண்டன்), அமிர்தராணி, அலோசியஸ் (இளைப்பாறிய ஆசிரியை - புத்தளம்), T.X. தேவமனோகரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற Dr. மங்களநாயகம் (சுவீடன்), மதுரநாயகம் (பிரான்ஸ்), தேவநாயகம் (USA) முன்னாள் செயின்ஸ் கல்வி நிலைய இயக்குநர், மன்மதநாயகம் (மன்னண்ணா) சமாதான நீதவான் நெல்லியடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ம.ம.மன்மதநாயகம் (மைத்துனர்)

1 ஆம் குறுக்குத் தெரு,
நெல்லியடி, கரவெட்டி. (சி-3222)

தொடர்புகளுக்கு : 0770267711

## மரண அறிவித்தல்

அமரர்

### திருமதி நாகரெட்ணாம்பாள் தியாகராசா (கிளி அக்கா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி நாகரெட்ணாம்பாள் தியாகராசா (கிளி அக்கா) 04.05.2013 காலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோ.தியாகராசா (பொருளாளர் AROD) அவர்களின் அன்பு மனைவியும் தி.ஜெகநாதன் (UK), தி.குகதாசன் (South Korea) தி.ஜெயக்குமாரன் (France), எஸ்.ஜெயராணி, ஜெ.ஜெயசோதி ஆகியோரின் அன்புத் தாயாரும் க.சின்னையா (ஓய்வுபெற்ற ஊழியர்-சீமெந்து கூட்டுத்தாபனம்), ப.ஜெயக்குமார் (ஆசிரியர்-புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

25, புது வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.இல.021 222 6896 (2541)

தகவல்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கல்

புனர்வாழ்வு அளிக்கப்பட்டுசமூகத்தில் இணைக்கப்பட்ட நிலையில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஊடாக பயிற்சி பெற்ற முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளன.

இது தொடர்பான நிகழ்வுகள் முல்லைத்தீவு ஜயபுரம், மல்லாவி ஆகிய இடங்களில் இன்று ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகள்400 இற்கும் அதிகமானவர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

இவர்களில் பலர் ஏற்கனவே முன்பள்ளி ஆசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர்.

இந்த நிலையில் பயிற்சிகளைப் பெற்ற ஒரு தொகுதி முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்றைய தினம் நடைபெறவிருக்கும் நிகழ்வில் நாமல் ராஜபக்ச எம்.பி நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கவிருப்பதுடன் ஜயபுரம் மற்றும் மல்லாவி ஆகிய இடங்களில் முன்பள்ளிகளையும் திறந்து வைக்கவுள்ளார்.

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் இணைக்கப்பட்ட மாதாந்த சம்பளம் பெற்றுக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்களாகவும் விவசாயத் தொழிலும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# யாழ். அக்கரைப்பற்று போக்குவரத்து சேவை

இலங்கை போக்குவரத்து சபையினால் யாழ்ப்பாணம்- அக்கரைப்பற்று போக்குவரத்து சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை பிரதான பிராந்திய முகாமையாளர் செ.அ. அஸ்கர் தெரிவித்துள்ளார். நாளையதினம் திங்கள் முதல் ஆரம்பிக்கப்படும் இச் சேவை யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பிற்பகல் 4 மணிக்கும், அக்கரைப்பற்று பேருந்து நிலையத்திலிருந்து மதியம் 12 மணிக்கும் மேற்கொள்ளப்படவுள்ளது. குறித்த வழி பேருந்து பயணத்திற்கான ஆசனப் பதிவுகளை யாழ். மத்திய பேருந்து நிலையத்திலும் அக்கரைப்பற்று பேருந்து நிலையத்திலும் மேற்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# இயந்திர உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச் சின் கீழ் அமைந்துள்ள வடகடல் நிறுவனத்தின் அபிவிருத்தி மற்றும் விரிவுபடுத்தல் செயற்திட்டத்தின் கீழ் குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி தொழிற்சாலையின் ஆற்றல் மற்றும் விரிவுபடுத்தல் செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டு அவை தொடர்பான உபகரணங்களை கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சோதி தெரிவித்தார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில இடம் பெறும் இவ் உபகரண கையளிப்பு நிகழ்வில் இந்திய உயர் ஸ்தானிகர் அசோக் கே. காந்தா, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி மற்றும் ஏனைய முக்கிய பல பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள் ளனர்.

குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனமானது யுத்த சூழ்நிலை காரணமாக சேதமடைந்து காணப்பட்டது. பின்னர் 2006 ஆம் ஆண்டு மீண்டும் இதன் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனத்தின் உபகரணங்களுக்கென இந்திய அரசாங்கம் 166 மில்லியன் ரூபா நிதியினை சிறு அபிவிருத்தி நன்கொடை திட்டத்தின் கீழ் வழங்கியிருந்தது. இதில் மீன்பிடி வலை தயாரிப்பிற்கான உபகரணங்கள் அகல இழுவை இயந்திரம், நீள இழுவை இயந்திரம், கொதிகலன், சாயமிடும் இயந்திரம், நைலோன் நாருரி இழை நூல் என்பன உள்ளடங்குகின்றன. மேலும் இத்திட்டத்திற்காக அரசாங்கம் 22 மில்லியன் ரூபா நிதியினை வழங்கியிருந்தது. குருநகர் மீன்பிடி வலை உற்பத்தி நிறுவனம் மீண்டும் புனரமைக்கப்பட்டமை வடமாகாணத்தில் பொருளாதார, வாழ்வாதார மேம்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முக்கியமான செயற்பாடாகவும் மகிந்த சிந்தனை எதிர்கால தொலை நோக்கில் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான அம்சமாகவும் நோக்கப்படுகின்றது என்றார். (அ)

# வாரம் ஒரு தகவல்

## அந்த பத்து நாட்கள்...

ஒரு மன நோய் மருத்துவமனையில் பல நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்தனர்.

அவர்களில் ஒருவன் பத்தாண்டு காலமாக அவ் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்தான்.

அவன் ஒருநாள் மருத்துவர் அறைக்குச் சென்று மருத்துவரிடம் "டாக்டர்... நான் குணமடைந்து விட்டதாக உணர்கின்றேன். என்னை நீங்கள் வீட்டிற்கு செல்ல அனுமதிக்கலாமே" என்றான்.

இதைக் கேட்டதும் அவ்வைத்தியர் "அப்படியா... மிகவும் நல்லது... ஒரு பத்து நாட்கள் வரை அமைதியாக இரு... அனுப்பி விடுகிறேன்" என்றார்.

அதற்கு அவன் "அது... ஏன்... பத்து நாட்கள்...?" என வினவ "நீ தெளிவடைந்து விட்டதாக சொல்வது சரிதானா என்கிற தெளிவு எனக்கு ஏற்பட வேண்டும்... அதனால் இன்னும் பத்து நாட்கள் இங்கே தங்கியிரு. சில சோதனைகள் செய்து பார்த்து விட்டு வீடு செல்ல அனுமதிக்கின்றேன்" என்றார் வைத்தியர்.

ஆதலால் அவன் சில நாட்கள் அங்கு தங்கியிருந்தான். வைத்தியரும் அனைத்து பரிசோதனைகளையும் செய்து பார்த்ததில் அவனது மனநோய் குணமடைந்தது உறுதியானது.

இதையடுத்து பத்தாவது நாள் வைத்தியர் அவனை அழைத்து "நீ... பரிபூரண குணமடைந்து விட்டாய் என்பதை நானும் புரிந்து கொண்டேன் சென்றுவா" என்றார்.

அவனும் வைத்தியருக்கு நன்றி தெரிவித்து விட்டு வெளியே வந்தான். வெளியே வந்ததும் அவனுக்காக காத்திருந்த நண்பர்கள் அவனை அழைத்து சென்றனர்.

செல்லும் வழியில் அவனின் நண்பர்கள் அவனிடம் "வைத்தியசாலை வாழ்க்கை எப்படி இருந்தது..." எனக் கேட்டனர்.

அதற்கு அவன் "அதை ஏன் கேட்கிறீர்கள்... பத்து நாட்களாக படாதபாடு பட்டுவிட்டேன்...!" என்றான்.

நண்பர்கள் வியப்புடன் "பத்து நாட்களா?" என வினவினர்.

அதற்கு அவன் "ஆமாம் பத்து ஆண்டு காலமாக நான் இருந்தது உண்மை... பைத்தியங்களோடு பைத்தியமாக நான் வாழ்ந்தது சுகமான வாழ்க்கை. பைத்தியங்கள் மத்தியில் சித்தம் தெளிந்தவனாக பத்து நாட்கள் வாழ்ந்ததுதான். நரக வாழ்க்கை..." "அந்த பத்தாண்டுகள் பத்து நொடிகளாக கழிந்தன. இந்தப் பத்துநாட்களும் பத்து யுகங்களாக நகர்ந்தன" என பதில்ளித்தான்.

அப்போது தான் நண்பர்களுக்கு இந்த உலகத்தில் நல்லவர்கள் ஏன் சங்கடப்படுகிறார்கள் என்பது புரிந்தது.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

05.05.2013

(சித்திரை 22, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

ஏகாதசி முன்னிரவு 4.39 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 4.14 மணிவரை

இராகுகாலம் 4.26-5.56 மணிவரை

சுபநேரம் 8.56-10.26 மணிவரை

**மேடம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**இடபம்** வாழ்க்கை தரம் உயர வழிவகை செய்து கொள்வீர்கள், மகிழ்வான தகவல்கள் வந்து சேரலாம், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, புதிய திட்டங்கள் கைகூடும்.

**மிதுனம்** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பார்கள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், திடீர் பயணங்கள் தித்திக்க வைக்கும்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்து செல்வது நல்லது, உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** சொந்தபந்தங்களின் ஒத்துழைப்பால் உள்ளம் மகிழும் நாள், புதிய திட்டங்கள் கைகூடும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப் பெறுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், எதிரிகள் உதிரியாகும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**துலாம்** பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், எதிர்பார்ப்புக்கள் கைகூடும் வாய்ப்புண்டு, செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், கண்ணன் வழிபாடு காரிய வெற்றி தரும், புதிய சொத்து வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், குடும்பத்தில் குதுகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலை உயரும், சுவாரஸ்யமான நாள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** காணாமல் போன பொருளொன்று மீண்டும் கைக்கு கிடைக்கலாம், தொலை பேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு.

**மீனம்** உறவினர் விவகாரத்தில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், தூரதேசச் செய்திகள் ஆச்சரியப்பட வைக்கும், சஞ்சலங்கள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 100 |
| தக்காளி | 60 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 60 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 60 |
| புடோல் | 40 | 80 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 120-160 | 120 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | -- |
| பயற்றங்காய் | 80 | 60 | 80 |
| லீக்ஸ் | 160 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 600 |
| போஞ்சி | 100 | 120 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 60 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40-45 |
| இராசவள்ளி | 100 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்வெட்டித்துறை வியாபாரிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம்

(கரவெட்டி)


வல்வெட்டித்துறை பொதுச் சந்தையில் மீன், மரக்கறி விற்பன்ன செய்யும் வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று மீன் மற்றும் மரக்கறிகளை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு தடை விதிக்க வேண்டுமென கூறி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளதுடன் பேரணியாக சென்று வல்வெட்டித்துறை நகரசபை நகரபிதா ந.அனந்தராஜிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

அம் மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் துவிச்சக்கர வண்டிகளில் மீன் வியாபாரிகள் மற்றும் மரக்கறி வியாபாரிகள் வீடு வீடாகச் சென்று வியாபாரம் மேற்கொண்டு வருவதால் தமது சந்தை வியாபாரம் பாதிக்கப்பட்டு வருகிறது.

எனவே இதனைத் தடை செய்ய வேண்டும் எனவும் வல்வெட்டித்துறை நகர சபையின் சட்ட திட்டங்களை மீறி இவ் வியாபாரச் செயற்பாடு நடைபெற்று வருகின்றது எனவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட வியாபாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்குப் பதிலளித்த நகரசபை நகரபிதா, இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததாக வியாபாரிகள் தெரிவித்தனர். (அ-3-24)




நன்றி: ஐலண்ட்

## பாதுகாப்புக்குழுக் கூட்டம்

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கான பொதுமக்கள் பாதுகாப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மேற்குறித்த பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (அ-3-19)

## தேர்த்திருவிழா

(புன்னாலைக்கட்டுவன்)

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் கோவில் தேர்த்திருவிழா எதிர்வரும் 8-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (அ-5-78)




# இழுவைப்படகுத் தொழிலை நிறுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இழுவைப்படகுத் தொழிலை நிறுத்தி விட்டு வேறு தொழிலை மேற்கொள்ளுமாறு யாழ்.மீனவ சமூகத்திடம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

எனினும் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சின் இத் திடீர் கோரிக்கையை ஏற்க மறுத்த மீனவ சமூகத்தினர் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை தலைமைக் காரியாலய உதவிப் பணிப்பாளர் தலைமையிலான நீரியல் வளத்துறை குழுவினருக்கும் குருநகர் மீனவர் சங்கத்திற்கு மிடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை யாழ்.மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்திணைக்களத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது முக்கியமாக கடல் வளம் அழிவடைதல் என்பதனைக் காரணம் காட்டி இழுவைப்படகுகள் மூலம் மீன்பிடித் தொழில் செய்வோர் அதனை தாமாக நிறுத்தி விட்டு வேறு தொழிலில் ஈடுபடுமாறு அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும் தமது பரம்பரைத் தொழிலான மீன்பிடித் தொழிலைக் கைவிட முடியாது என அதிகாரிகளிற்கு மீனவர்கள், மீனவ சங்கப் பிரதிநிதிகள் அழுத்தமாக கூறியிருந்தனர்.

பின்னர் தாம் ஏனைய மீனவர்களுடனும் கலந்துரையாடிய பின்னர் தான் மேற்கொண்டு முடிவை எடுக்க முடியும் எனக் கூறி கலந்துரையாடல் முடிவடைவதற்கு முன்னதாகவே அலுவலகத்தை விட்டு வெளியேறி விட்டனர்.

இழுவைப் படகினால் கடல் வளம் பாதிக்கப்படுவது உண்மைதான். அதற்காக அவர்களை வேறு தொழில் செய்யுமாறு பணிப்பது மிகத் தவறாகும். எனினும் இதற்கு ஏதாவது மாற்று வழிகள் அதிகாரிகளால் மேற்கொள்ளப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

## வீதி அகலிக்கப்படுகிறது

(தும்பளை)

சீன அரசின் நிதியுதவியுடன் பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள பிரதான வீதி அகலிப்புப் பணி இடம் பெற்று வருகின்றது.

மேற்குறித்த வீதி அகலிப்பு பணியானது கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் வீதி அகலிப்புக்காக அப்பகுதியில் உள்ள வீடொன்றின் மதில் உடைக்கப்பட்டு பருத்தித்துறை பிரதேச செயலர், பொலிஸார் ஆகியோரின் மேற்பார்வையில் வீதி அகலிப்பு பணி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-3-19)

## வணிகர் மன்றத்தின் பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 34 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நடப்பாண்டுக்கான நிர்வாக சபை தெரிவு இடம்பெறவுள்ளது.

அத்துடன் மன்றத்தினால் வழங்கப்படும் மாணவர்களுக்கான ஊக்குவிப்பு நிதி, விதவை நிதி, ஊனமுற்றோர் நிதி வழங்கப்படுவதுடன் மன்ற அங்கத்தவர்களின் சேமிப்பு திட்டத்தில் முன்னிலையில் நிற்பவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (அ-3-29)

## கலை இலக்கியப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் இவ்வருடத்திற்கான கலை இலக்கியப் போட்டிகள் பாடசாலை மட்டத்திலும் திறந்த பிரிவிலும் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகளுக்கு தென்மராட்சி பிரதேச மட்டத்தில் விண்ணப்பிக்கவுள்ள போட்டியாளர்களுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கலாசாரப் பிரிவு, பிரதேச செயலகம், தென்மராட்சி என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தேசிய கலை இலக்கியப் போட்டிகள் 2013 எனக் குறிப்பிட்டு அனுப்புமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# சிறுமியை திருமணம் செய்த இளைஞருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பதினான்கு வயதுச் சிறுமியுடன் குடும்பம் நடத்தி வந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இளவாலைப் பகுதியில் 14 வயதுடைய சிறுமியொருவருடன் கடந்த 7 மாதங்களாக 24 வயதுடைய இளைஞர் குடும்பம் நடத்தி வந்துள்ளார்.

குறித்த இளைஞர் சிறுமியின் சம்மதத்துடன் வாழ்ந்து வருகின்ற போதிலும் 18 வயது பூர்த்தியடையாத சிறுமியை அவளின் சம்மதத்துடனோ அல்லது சம்மதமின்றியோ திருமணம் செய்தல் சிறுவர் உரிமை மீறல் ஆகும்.

அதனடிப்படையில் இவ் இளங் குடும்பத்தைக் கைது செய்த இளவாலைப் பொலிஸார் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

அதன்படி சிறுமியோடு வாழ்ந்த இளைஞரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைத்துள்ளதாகவும் சிறுமி சிறுவர் இல்லத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

நீரோடும் கண்களோடு

31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண் மகிழ 17 . 01 . 1944



கண் நெகிழ 05 . 04 . 2013

அமரர்

சிதம்பரப்பிள்ளை கந்தையா

காப்பாற்று என்று நாங்கள் கையெடுத்த
தெய்வங்கள் கண்மூடிக்கை விரிக்க
நொடியுழைத்த வைத்தியர் கரங்கள்
பதற பூப்போட்டு நாம் வணங்கும்
தெய்வமாய் எம் தந்தையே போய் விட்டீர்கள்.
ஆறாய்ப் பெருகும் எங்கள் கண்ணீரைத்துடைப்பார்
யாரையா?

05.05.2013 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்வு மற்றும் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை என்பவற்றில் கலந்து கொண்டு தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அழைப்பிதழ் தர தவறியவர்கள் இதை தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஆண்டாவளவு, கொற்றாவத்தை. (சி-3210)

குழந்தையின்மையா? ஆண்மைக்குறைவா? கவலை வேண்டாம்

உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு

முழுமையாக குணமடைய உலகிலேயே No:1 வைத்தியம்



குழந்தையின்மை: குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

பெண்களுக்கு ஏற்படும் குழந்தையின்மை மற்றும் சகல பிரச்சனைகளிற்கும் டொக்டர்.டி.தேவி அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம் (பெண்கள் மட்டும்). 0091 9600336009

செல்: 0091 9842457673

இலங்கைச் செல்: 0754154364

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமாபுரம், சென்னை-89, இந்தியா.

E-mail: sridevisiddha@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீனவர்கள் பதினான்கு பேர் கைது

இலங்கை மீனவர்கள் இந்திய கரையோர பொலிஸாரால் கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்ட மையைத் தொடர்ந்து மேலும் 14 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டுள் ளனரென இந்திய ஆந்திர மாநில ராஜ்முந்திரி பொலிஸார் தகவல் தெரிவித்துள்ளனர்.

மூன்று கண்ணாடி இழைப் படகுகளில் வந்து இந்திய கடலில் மீன்பிடித்த 14 பேரே நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள் ளதாக பொலி ஸாரால் குறிப்பிட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து ஆயிரத்து 500 கிலோ மீன்களும் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5)

# அசாத்தை வைத்தியசாலையில் பார்வையிட குடும்பத்தினருக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)

குற்றப்புலனாய்வுப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தற்போது கொழும்பு தேசிய வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலியைப் பார்வையிட அவரது மனைவி, மகள் உள்ளிட்ட அனைவருக்கும் அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு நேற்று முன்தினமிரவு மனைவி, மகள் உள் ளிட்ட அவரது குடும்பத்தினர் சென்றபோது பாதுகாப்பு தரப்பினர் அசாத் சாலியை பார்க்க அனுமதிக்காத நிலையில் அவர்கள் வைத் தியசாலையில் காத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு வருகை தந்த பாராளுமன்ற உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, டாக்டர் ஜயலத் ஜெயவர் த்தன மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் பராளுமன்ற உறுப்பி னர் ஹுனைஸ் பாரூக் ஆகியோருக்கும் அனுமதி மறுக் கப்பட்டது.

அத்துடன் அசாத் சாலி அனும திக்கப்பட்டுள்ள தேசிய வைத்தியசா லையின் 55 ஆம் இலக்க விடுதிப் பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந் தமை குறிப்பிடத்தக் கது.

நீரிழிவு நோயா ளியான நான் உணவு உண்ண மாட்டேன் என அசாத் உண்ணா நோன்பு மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகி றார்.

இந்நிலையில் அசாத் சாலியின் சட்டத்தரணியிடம் நிலைமை தன் அதி காரத்திற்கு அப்பா ற்பட்டது என சட்டமா அ தி ப தெரிவித்திருப்பதாக தகவல் தெரிவிக்கி ன்றது.

அவரைக் கைது செய்து தேவையற்ற சிக்கலை ஏற்படுத்த அரசு தலைமைக்கு பெரியளவில் ஆர் வம் இல்லை. எனினும் இப்படிச் செய்தாவது அவரது வாயை மூடச் செய்யு ங்கள் என அரசில் உள்ள முஸ்லிம் அர சியல்வாதிகள்தான் அரசு தலை மையி டம் பெரிதும் வலி யுறுத்தி உள்ளதா கவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

(அ-2)


**கல்வி நிலையம் இடமாற்றம்**

*01.05.2013 இல் இருந்து நெல்லியடியில் கிறிஸ்ரல் கல்வி நிறுவனத்தில் கல்வி கற்றுவந்தவர்கள், கற்க விரும்புபவர்கள், கற்பித்த ஆசிரியர்க்ள் O/L Day, A/L Day 2013, 2014, 2015 English Class ஏனைய விசேட வகுப்பு மாணவர்கள்*

**கொடிகாமம் வீதி, நெல்லியடி.**

**நியூ சயன்ஸ் அக்கடமி நிறுவனத்தில்**

சகல வகுப்புகளும் ஆரம்பமாகிவிட்டது.

**உடன் தொடர்புகளுக்கு : நிர்வாகி 0779222916**

(சி-3223)



*ஜெய் குருதேவ்!*

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின்**

**வாழும் கலைப் பயிற்சி (பாகம்–I)**



ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும், வாழ்வதற்கு குருஜியின் "சுதர்சன கிரியா"

நடைபெறும் இடங்கள்
1.மகேஸ்வரன் மணி மண்டபம், நல்லூர். (077 6397929)
2.சாவகச்சேரி:- இந்துக் கல்லூரி பிரதான மண்டபம். (075 4303380)

அறிமுக உரை
May 6th மாலை 05 மணி திங்கட்கிழமை
பயிற்சி நாட்கள்:-
May 7th முதல் May 12 வரை
நேரம்:-மாலை 05 மணி முதல் 07.30 வரை

(2526)



**பெற்றோர்களே உங்கள் பிள்ளைகளின் உயர்தரமான பட்டப்படிப்பினை இன்றே உறுதி செய்யுங்கள்**

**LL.B (UK) கற்கை நெறி**

யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்

Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)

**Batch 5 இற்கான பதிவுகள் நடைபெறுகின்றன**



- உலகத் தரம் வாய்ந்த கற்கை நெறி.
- இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
- யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
- இலகு தவணை கொடுப்பனவு முறை.
- இலவசமான ஆங்கிலம் மற்றும் தகவல் தொழில்நுட்ப கற்கை திட்டங்கள்

(C 3218)

UNIVERSITY OF WOLVERHAMPTON | EDhat INTERNATIONAL | bucks new university United Kingdom

**PRINCE CITY CAMPUS**

இல. 275, மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம். தொ.பே. :- 0214923855 Hotline : 0775949272



**சவுதி அரேபியா விமான நிலையத்தில்**






**GROUND SERVICES**
**உடனடி தொழில் வாய்ப்பு**

**GENERAL WORKERS**
**பொது வேலையாட்கள்**

சம்பளம் - SR 750/- + உணவு
(1 SR = Rs. 35/- )

வயது: 21 -38

**Terms & Conditions:**

- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து, விமான பயண டிக்கட் இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: **077 310 3100**

**QP Employment (pvt) Ltd,**
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/06/13



**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1967 இந்து (V)<br>நட்சத்திரம்:சதயம் 3<br>உயரம்:5'4"<br>கி.பா: 44, 1இல் செவ்.<br>தகைமை/தொழில்: Computer Engineering Course முடித்துள்ளார். இந்தியாவில் (Restaurant Owner)<br>தொ.இ: B -1749 | பிறப்பு: 1968 இந்து (V)<br>நட்சத்திரம்:புனர்பூசம் 4<br>உயரம்:5'4"<br>கி.பா: 15.5, 2 இல் செவ்.<br>தகைமை/தொழில்: BA நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்<br>தொ.இ: G -1771 |
| பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்: 5'6"<br>கி.பா: 36.25, 1இல் செவ்<br>தகைமை/ தொழில்:O/L இத்தாலி PR<br>தொ.இ: B -1752 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>உயரம் : 5'3"<br>கி.பா: 56<br>தகைமை/ தொழில்: BSc, Physiotheraphy<br>தொ.இ: G-1772 |
| பிறப்பு: 1982 இந்து (V)<br>நட்சத்திரம்: ரோகிணி, 8இல் செவ்<br>உயரம்: 180 cm<br>தகைமை/ தொழில்: A/L- Italy work permit<br>தொ.இ: B -1761 | பிறப்பு: 1989 இந்து (V)<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்: 165 cm<br>கி.பா: 14, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: A/L, Senior Banking Assistant<br>தொ.இ: G -1775 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 17.5 இல் செவ்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: A/L Swiss not PR<br>தொ.இ: B -1762 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்:திருவோணம் 2<br>உயரம்: 5'5"<br>கி.பா: 51.25<br>தகைமை/ தொழில்: MBBS<br>தொ.இ: G -1780 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி



உபஹார இன்டர்நெட்
அரச சேவைக்காக

இந்த புதுவருட காலத்தில் அரச சேவையிலுள்ள மொபிடெல் உபஹார பாவனையாளர்களான உங்களுக்கு

**5GB தரவுப் பொதி டொங்கல் இலவசம்**

மாதாந்தம் ரூ. 299/- மட்டுமே



TRC/M/Promo/12/26

(சி3329)

தொலைத் தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சு | Sri Lanka Telecom Mobitel | வாடிக்கையாளர் சேவை இலக்கம்: 1717

அனைத்து கட்டணங்களும் அரச வரிகள் மற்றும் தீர்வைகளுக்கு உட்பட்டது. நிபந்தனைகளுக்குட்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய வேலைத் திட்டங்களுக்கு பொதுநலவாயம் ஒத்துழைக்கும்

**இலங்கை மக்களின் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவால் முன்னெடுக்கப்படும் தேசிய வேலைத்திட்டங்களுக்கு பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஒத்துழைப்பு வழங்கும் என பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா தெரிவித்துள்ளார்.**

இலண்டன் சென்றுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே கமலேஷ் சர்மா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் நீதவான் பிரியந்த ஆர். பி.பெரேரா, ஆணையாளர் பிரதீபா மஹாநாமஹேவா, மனித உரிமைகள் ஆணைக் குழுவின் பிராந்திய இணைப்பாளர்களான தங்கவேல் கனகராஜா, எம்.ரோஹித்த பிரியதர்ஷன, அப்துல் கரீம், அப்துல் அசீஸ் உள்ளிட்ட குழுவினர் இலண்டன் சென்றுள்ளனர்.

பொதுநலவாய மதிப்புக்களுக்கு அமைய இலங்கை மக்கள் அனைவரும் அமைதியாக வாழ்வதற்கும் சமமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்படும் தேசிய ரீதியான வேலைத் திட்டங்களுக்கும் முயற்சிகளுக்கும் பொதுநலவாய அமைப்பு ஒத்துழைப்பு வழங்கும் என அவர் கூறியுள்ளார்.

தனது இலங்கை விஜயத்தின் போது மனித உரிமைகள் குறித்துச் சுட்டிக்காட்டிய விடயங்கள் பற்றி கமலேஷ் சர்மா இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினருடனான சந்திப்பில் விரிவாக ஆராய்ந்துள் ளார்.

எதிர் வரும் ஆறுமாதங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய முக்கியமான இரண்டு அம்சங்கள் குறித்து இச் சந்திப்பில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

மனித உரிமை பாதுகாப்பு மற்றும் தேசிய நல்லிணக்கம் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இங்கு விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலண்டன் சென்றிருக்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் அங்கு நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் நல்லிணக்கம் தொடர்பான வட்ட மேசை மாநாட்டிலும் கலந்து கொண்டுள்ளனர். (அ-2)

## வவுனியாவில் இடியுடன் கூடிய கடும் மழை

(குருமன்காடு)

வவுனியாவில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்துள்ளது.

நேற்று காலை முதல் நாட்டின் பல பாகங்களிலும் தொடர்ந்து மழை பெய்துள்ளது.

நேற்று மதியம் வரை கட்டுநாயக்காவில் அதிக மழை வீழ்ச்சியாக 216 மி.மீற்றர் பதிவாகியுள்ளது. அடுத்த கட்டமாக வவுனியாவில் 59.4 மி.மீற்றர் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (அ-2-250)

## எல்லைதாண்டி மீன்பிடித்தால் 15 இலட்சம் ரூபா அபராதம்

### மீன்பிடித்துறை அமைச்சு தெரிவிப்பு

எல்லைதாண்டி மீன்பிடியில் ஈடுபட்டால் 15 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான புதிய சட்டங்கள் விரைவில் அறிமுகம் செய்யப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக மேற்குலக நாடுகளின் கடற்பரப்பிற்குள் இலங்கை மீனவர்கள் பிரவேசித்து மீன்பிடித்தால் 15 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்படும் என மீன்பிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அங்கிகாரமும் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவிருக்கிறது.

வேறு நாட்டு கடற்பரப்பிற்குள் மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்படும் இலங்கை மீனவர்களுக்கு இலங்கையில் 15 இலட்சம் ரூபா அபராதம் விதிக்கக் கூடிய வகையில் சட்டத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

இதேவேளை இலங்கை சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதனால் இலங்கை மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்வது தொடர்பில் மீள் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளதாக அண்மையில் ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

## இனத்துவேசக் கருத்து தொடர்பில் அரசாங்கத்திற்கு விளக்கமில்லை

### மனோகணேசன் தெரிவிப்பு

ஹலால் உணவு வேண்டும் என்றால் பாகிஸ்தானுக்கு சென்று வாழ வேண்டும் என்றும் வடக்கில் அரசியல் உரிமைகள் கேட்டால் கொழும்பில் வாழும் தமிழருக்கு ஆபத்து என்றும் கருத்துகள் தெரிவிப்பது இனத்துவேஷம் இல்லையா? இந்த கருத்துக்களை சொல்லி வருபவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் இல்லை. ஆனால் அதிகாரத்தை பகிர்ந்து சிங்கள, தமிழ்,முஸ்லிம் மக்கள் ஐக்கியமாக வாழும் நாட்டை கட்டி எழுப்ப எம்முடன் இணைந்து செயற்படும் அசாத் சாலியை பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்திருப்பது என்ன நியாயம்? என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய ஐக்கிய முன்னணி செலாளர் அசாத் சாலி கைது செய்யப்பட்டுள்ளதை எதிர்த்து கொழும்பு பெரிய பள்ளி வாசல் பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மனோ கணேசன் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அசாத் சாலி ஒரு காலத்தில் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து அங்கே இருந்தவர். ஆனால் அந்த நம்பிக்கை தகர்ந்து போன பின் அவர் எம்முடன் எதிரணியில் வந்து இணைந்து கொண்டுள்ளார். அவர் மீது பயங்கரவாத குற்றச் சாட்டுகள் என்ன? புதிதாக அவர் மீது குற்றம் சுமத்தும் கோவைகள் கிடைத்துள்ளனவா? அரசாங்கத்தில் இருக்கும் வரை கிடைக்காத கோவைகள் இப்போதுதான் கிடைத்தனவா? அப்படியானால் இன்று அரசாங்கத்தில் இருப்பவர்களுக்கு அத்தகைய கோவைகள் இருக்கின்றனவா?

அவர் தலைமறைவு அரசியல் செய்யவில்லை. எம்முடன் இணைந்து அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தில் பகிரங்கமாக செயற்படுகிறார். முஸ்லிம் மக்கள் தொடர்பாக அரசாங்கம் முன்னெடுக்கும் கொள்கைகளை அவர் கடுமையாக விமர்சனம் செய்கிறார். எனவே இவரது கைது திட்டவட்டமான அரசியல் பழிவாங்கல் என்பது உண்மை.

யாழ்ப்பாணத்தில் அரசியல் உரிமை கேட்டால் கொழும்பில் தமிழருக்கு ஆபத்து என்றும் ஹலால் உணவு சாப்பிட வேண்டுமானால் பாகிஸ்தானில் சென்று வாழுங்கள் என்றும் சொன்னவர்கள் இங்கே பகிரங்கமாக வாழுகிறார்கள். இவர்களைப் பிடித்து உள்ளே போடாமல் உள்ளதை உள்ளபடி பேசுபவரைத் தூக்கி உள்ளே வைப்பதன் மூலம் இந்த அரசாங்கம் தனக்கு தானே குழி வெட்டி கொள்கிறது.

அசாத் சாலியின் மீது குற்றம் இருந்தால் அதை சட்டத்தின்படி நீதிமன்றுக்கு கொண்டு வாருங்கள். அதற்கு முன்னர் அவர் விடுவிக்கப்பட வேண்டும். அவரது ஜனநாயக அரசியல் முன்னெடுக்க சுதந்திரம் உறுதியாக வேண்டும் இவ்வாறு அவர் தன்து உரையில் தெரிவித்தார். (அ-2)

## வருடாந்த பொதுக்கூட்டம்

வடமாகாண வங்கி ஓய்வூதியர் நலன் புரிச் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத் தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தில் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ-5)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கினிக்கத்தேனையில் வைத்து கஞ்சா போதைப் பொருளுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அட்டன் குற்றத் தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலையடுத்து நேற்று முன்தினம் பகல் கஞ்சாவைக் கொள்வனவு செய்பவர்கள் போல் மாறு வேடத்தில் சென்ற பொலிஸார் கண்டியில் இருந்து அட்டன் நோக்கி பயணித்த பேரூந்தில் கொண்டு வரப்பட்ட போதை பொருளை கினித்தேனையில் வைத்து கைப்பற்றியுள்ளதுடன் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

இது சுமார் ஒரு கிலோ கிராம் நிறையுடையதென பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக கண்டி பகுதியில் இருந்து அட்டன் பகுதிகளுக்கு இவர் கஞ்சா போதைப் பொருளை விநியோகம் செய்து வந்துள்ளதாகவும் இவருக்கு இதை பெற்றுக் கொடுப்பவர்கள் தொடர்பாக தாம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்த அட்டன் குற்றத் தடுப்பு புலனாய்வு பொலிஸார் இவரை அட்டன் நீதவான் நீதிமன்ற நீதி



பதியின் முன்னால் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ-2)




இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் யாழ்ப்பாணக் கிளைக்காரியாலயம் நேற்றுமுன்தினம் யாழ்.புகையிரத வீதியில் (வீரகேசரி அலுவலகத்தில் ) திறந்து வைக்கப்பட்டபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கணபதி முத்துராசா, கட்டைக்காடு*

அன்பின் வியாசர் சேர்!

குழந்தைகள் பல பெற்றும் குமரிகள் போல் உடை உடுத்தும் பெண்களைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

*''குழந்தை இல்லா வீட்டில் கிழவி துள்ளி விளையாடுகிறாராம்'' எனும் பழமொழியை நினைத்துப்பாரும். மருந்தடித்த பழம் பழுப்பதும் வேகம். அழகிப் போவதும் வேகம்தான்.*

*சு. ஜெயரூபன், பருத்தித்துறை*

அன்பின் வியாசர் சேர்!

இக்கால ஆண்கள் தமது மனைவி இறந்தால் அவளின் தங்கைக்கு மாலை சூடுகிறார்களே... அதன் காரணம் என்ன?

*மனைவியின் ஆத்மா சாந்தியடைவதற்காய் என கூறுவார்கள். யாருக்குமே தெரியாது மனைவியின் தங்கையின் ஆத்மாவும் சாந்தியடையப் போகின்றதென.*

*கா. சஞ்ஜெய், தும்பளை*

அன்பின் வியாசர் அண்ணாவிற்கு!

பாடசாலை செல்வது சரிதான். ஆனால், ரியூசன் செல்வது சரியா? தவறா? சொல்லுங்கள் அண்ணா?

*இலவசத்திற்கு எம் நாட்டில் மதிப்பில்லையப்பா. பணம் கொடுத்துத்தான் படிக்க வேண்டும் எனும் பாரம்பரியம் வந்துவிட்டதே! இனி எப்படித் திருத்துவது நம் சமூகத்தை.*

*பாணு, கொற்றையூர்*

அன்பின் வியாசரே!

இன்றைய உலகில் கலாசாரம் சீரழிந்து செல்வதற்கு அதிக காரணம் ஆண்களா? பெண்களா?

*ஊசி இடம் கொடுக்காமல் நூல் நுளையாது. இதற்காய் ஊசியில் தப்பா, நூலில் தப்பா என்பதற்கப்பால் ஒரு தவறை இருவர் சேர்ந்து செய்தால் அந்த இருவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான்.*

## இக்கால ஆண்கள் தமது மனைவி இறந் தால் அவளின் தங்கைக்கு மாலை சூடுகி றார்களே... அதன் காரணம் என்ன?

*வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி*

அன்பின் வியாசர் அண்ணா!

கண்ணீருக்கும் காதலுக்கும் என்ன தொடர்பு?

*ஒருவன் காதலிக்கிறானா? நிச்சயமாய் கண்ணீர் உண்டு. ஒருவன் கண்ணீர் விடுகிறானா? நிச்சயமாய் அது காதலால்தான். இரண்டையும் ஒன்றை ஒன்று பிரித்து விட முடியாது.*

*செனா, பருத்தித்துறை*

அன்பின் வியாசர் அண்ணா!

நட்பு வைத்து துரோகம் செய்யும் நண்பிகளுக்கு நீங்கள் கொடுக்கும் தண்டனை?

*நட்பின் மகிமை அறியாதவர்களுக்கு தண்டனை கொடுத்தால் அந்தத் தண்டனைக்கே மதிப்பில்லாமல் போய் விடும்.*

## பள்ளிக்காலத்தில் நீர் செய்த குறும்பு சாகஜம் பற்றிச் சொல்லுங்களேன்?

*இளவரசி, பருத்தித்துறை*

அன்பின் வியாசர் அண்ணா!

பள்ளிக்காலத்தில் நீர் செய்த குறும்பு சாகஜம் பற்றிச் சொல்லுங்களேன்?

*முப்பாய்ச்சல் போட்டியில் நான் மட்டும் பங்குபற்றி முதலாமிடம் பெற்றது நான் செய்த சாகசங்களில் முக்கியமானது. நாவற்பழ மரத்தில் ஏறி விட்டு இறங்கத் தெரியாமல் கத்திக் குளறி கூப்பாடு போட்டது இதையெல்லாம் மறக்க முடியாதது.*




*தேவி, அச்சுவேலி*

அன்பின் வியாசர் அண்ணா!

தர்மம் தலைகாக்கும் என்கிறார்களே... அதற்கு உதாரணம்?

*தலைக்கவசம் அணிந்து கொண்டு போகும் போது பொலிஸ் தொல்லை இல்லையே அதுதான்.*

*எஸ். மிதுஷா, தம்பசிட்டி*

வியாசர் அண்ணா!

உங்களுக்கு எப்படி நகைச் சுவையாக விடையளிக்க முடிகிறது?

*உங்களால் இவ்வாறு நகைச் சுவையாக கேள்வி கேட்க முடிகிறதென்றால் என்னால் ஏன் நகைச்சுவையாக பதிலளிக்க முடியாது? எல்லாம் ஒரு உள்ஞானம்தான்.*

### வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்....

மன்னன் அரண்மனைக்கு அலறியபடி ஓடி வந்தான். அங்கு மூச்சு வாங்கிக் கொண்டிருந்த போர் வீரர்களை கோபமாக பார்க்கிறான்.

மந்திரி: மன்னா தாங்கள் போர்க்களத்தில் இருந்து ஓடிவர இவ்வளவு தாமதம் ஏன் மன்னா?

மன்னன்: (கோபமாக) ஏன் தாமதமா? நன்றி கெட்ட போர்வீரர்கள் ஓடுவதாக என்னிடம் சொல்லியிருந்தால் சேர்ந்து ஓடியிருக் கலாம். என்னை விட்டு விட்டல்லவா ஓடிவிட்டார்கள்.

ஓடிய ஓட்டத்தில் எனது உடைவாள் கழன்று விழுந்ததே தெரியாது.

மந்திரி: வாள் போனால் போகட்டும் மன்னா உயிர் தான் மிஞ்சி விட்டதே!

### அன்பு வாசகர்களே....!

உங்கள் கேள்விகளை


ஆசிரியர், வியாசர் பதில்கள்

இல.3, 2 ஆம் ஒழுங்கை,

பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற

முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

# மனித நலன் நாடும் மார்க்ஸிச கோட்பாடு



## இன்று கார்ல் மார்க்சின் பிறந்ததினம் (1818–1883)

1818 ஆம் ஆண்டு ஜேர்மனிய வழக்கறிஞரான ஹென்ரிஹ் மார்க்ஸிற்கும் ஹென்ரியேட்டா பிரைஸ்பார்கிற்கும் மகனாக கார்ள் மாக்ஸ் பிறந்தார். இளமை முதற்கொண்டே கல்வியில் ஆர்வமுடையவராக விளங்கிய மார்க்ஸ் 1836 இல் பேர்லின் பல்கலைக்கழகத்தில் சட்டவியலைத் தொடர்ந்தார்.

பின்னர் சட்டம், தொன்மை, வரலாறு, மெய்யியல், கலை, இலக்கியம், அழகியல் போன்ற துறைகளில் விரிவான வாசிப்புக்களின் பயனாக சென்னை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

மார்க்ஸ் அரசியல், பொருளாதாரம் போன்ற துறைகளில் புரட்சிகரமான நூல்களைப் படைத்தார். அவற்றுள் பிரதானமானவையாக தத்துவத்தின் வறுமை, அரசியல் பொருளாதார ஆய்வு, மூலதனம் போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

கார்ள் மாக்சினாலும் அவரது நண்பர் ஏங்கிள்சினாலும் முன்வைக்கப்பட்ட கோட்பாடே மார்க்ஸிசம் என அழைக்கப்படுகிறது. நண்பர் ஏங்கிள்சும் மார்க்சின் மனைவி சென்னியும் மார்க்ஸிசத்துக்கு கிடைத்த இரு நற்பேறுகளாகும்.

கருத்தியல் மாளிகைக்குள்ளும் கற்பனைக்கோட்டைகளுக்குள்ளும் உண்டு களித்து உல்லாசமாக உலாவந்து கொண்டிருந்த தத்துவத்தினை கோட்டைக்கு வெளியே இருந்த தெருவோர மக்களைப் பற்றி எண்ணத் தொடங்க வைத்ததோர் கோட்பாடாக மார்க்ஸிசம் விளங்குகிறது.

மார்க்ஸிசம் என்பது மனிதநலம் நாடும் ஒரு கோட்பாடாகும். மனிதனின் உள்ளார்ந்த திறன்களை முழுமையாக மலரச் செய்வதே அதன் நோக்கமாகும். மார்க்ஸிசம் மனிதனை ஒரு வெறுமையானவனாக அல்லாமல் சமூக உறவுகளால் பிணைக்கப்பட்ட ஒருவனாகவும் உயிர்வாழ்வதற்கு உற்பத்தியில் ஈடுபட வேண்டிய ஒருவனாகவும் காண்கிறது. மார்க்சினது கவலை மனிதனைப் பற்றியதாகவே இருந்தது. பொருளாதார ஈடுபாடுகளின் ஆதிக்கத்திலிருந்து மனிதனை விடுவிப்பது, அவனைச்சுற்றி அமைக்கப்பட்டிருந்த சிறையிலிருந்தும் அவனை விடுதலை செய்வது மார்க்சின் நோக்கமாகும்.

1840களில் மார்க்ஸ் Rheinische Zeitung, Neve Rheinische போன்ற பத்திரிகைகளின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1848 இல் மார்க்ஸ், பிரான்ஸ், ஜேர்மனிய புரட்சிகளோடு தொடர்புடையவர் என்பதனால் பிரான்ஸ் அரசு அவரை நாடு கடத்தியது.

இதனால் மார்க்ஸ் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கு அவர் லண்டன் நூலகத்தில் பல மணிநேரம் மூழ்கிக்கிடந்தார். பலநூல்களையும் ஆயிரக்கணக்கான ஆவணங்களையும் தொடர்ச்சியாக பல இரவுகள் கண்விழித்துப் படித்து பொருளாதாரத்தில் தேர்ச்சியினைப் பெற்றார்.

குடும்பத்தின் பொருளாதார சுமைகளைக் கருதாது நூலகத்தில் மூழ்கிக்கிடந்த தனது கணவரிடம் சென்னி ஒருபோதும் முகம் சுழிக்கவில்லை. உழைக்கும் மக்களின் வறுமையை போக்க பொருளாதார திட்டம் தீட்டிய பேரறிஞர் வறுமையில் வாடினார். பொருள்வசதியின்மையால் குழந்தைகள் நோய்க்கு இரையாகியபோதும் கலங்காதிருந்தார். மக்களின் அன்றாட வாழ்வில் பின்னிக் கிடந்த பிரச்சினைகளைப்பற்றி மார்க்ஸ் ஆராய்ந்தார்.

தத்துவ அறிஞர்களின் தத்துவார்த்த பிரச்சினைகளில் மார்க்ஸ் ஈடுபாடு காட்டவில்லை. வறுமையில் வாடும் மக்களின் வாழ்வை உயர்த்த பயன்படாத விளக்கங்களில் மார்க்சுக்கு ஈடுபாடில்லை. அறிவியல் சார்ந்த பிரச்சினைக்கு மார்க்ஸ் முதன்மையிடம் கொடுத்தார். விஞ்ஞானத்தை இழிவுபடுத்தும் கோட்பாடுகளையும் கொச்சைப்படுத்துபவற்றையும் மார்க்ஸ் வன்மையாகக் கண்டித்தார். மதக்கோட்பாடுகளையும் மூட நம்பிக்கைகளையும் அறியாமை என்றார்.

ஹெகல் என்னும் அறிஞர் தனது இயக்கவியல் முறையினூடாக எல்லாம் ஆன்மாவின் வெளிப்பாடுகள் என்றார். ஆனால், மார்க்ஸ் இதனை மறுத்து பொருளே யாவற்றுக்கும் முதன்மையானது என்றார். நடைமுறைக்குப் பயன்படாத தத்துவத்தினை மார்க்ஸ் நிராகரித்தார். சிந்தனை என்பது மக்களின் புரட்சிகர உணர்வினைத் தூண்டக்கூடியதாக இருக்கவேண்டும் என்றார். மக்களை மயக்கி உறங்க வைக்கும் சிந்தனையைச் புறம் தள்ளினார்.

மார்க்ஸ் சமயத்தை விமர்சித்தார். அறிவும் அறிவியலும் வளராத இருண்ட காலத்தில் புனையப்பட்ட கதைகளை அறிவொளி பரப்பும் இன்றைய நாளில் சொல்லிக் கொண்டிருப்பது அறியாமை என்றார். கடவுள் என்பதும் அருளாட்சி என்பதும் பாவங்கள் தண்டிக்கப்படுகின்றன, புண்ணியங்களுக்குப் பரிசளிக்கப்படுகின்றன என்பன யாவும் அறியாத பாமர மக்களை சுரண்டி வாழ நினைத்த சுயநலக்காரர்களின் கோட்பாட்டு விளக்கங்கள் என்றார்.

வறுமையில் வாடும் மக்கள் தங்கள் வறுமையை நினைத்து ஆலயங்களுக்குச் சென்று அழுது புலம்புவதைவிட அரசியல் போராட்டம் செய்து புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

வர்க்கப் போராட்டங்கள் மூலமே வரலாறு உருவாகிறது என்றார் மார்க்ஸ். அதில் ஆள்வோர்- ஆளப்படுவோர், சுரண்டுவோர்- சுரண்டப்படுவோர் என்பவர்களுக்கிடையிலான போராட்டங்கள் மூலமே சமூகம் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று பரிணமித்தது. இவ்வடிப்படையில் மார்க்ஸ் சமூகத்தின் 5 வகையான சமூக மாற்றங்களைக் குறிப்பிடுகிறார்.

புராதன கொம்யூனிசம், ஆண்டான்- அடிமை சமூகம், நிலமானிய சமூகம், முதலாளித்துவ சமூகம், கம்யூனிஸ சமூகம் இவ்வாறு முதலாளித்துவ வர்க்கத்தின் சுரண்டல் பலாத்காரத்தை கொண்ட அடக்குமுறைக்கு எதிராக பாட்டாளி மக்களின் போராட்டத்தினால் கம்யூனிஸ சமுதாயம் உருவாகும் என கம்யூனிஸ சமூகத்தை எதிர்வுகூறியவராக மார்க்ஸ் விளங்கினார். பொருளுற்பத்தி என்னும் பொருளாதாரமே இம்மாற்றம் அனைத்திற்கும் முதன்மையான காரணம் என மார்க்ஸ் குறிப்பிடுவதோடு சமூக மாற்றம் என்பது பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது என்பதனை தெளிவாக எடுத்துரைத்தார்.

இவ்வாறான காலத்தில் 1881 இல் அவரது மனைவி சென்னி காலமானார். பின்னர் 1883 மார்ச் 14 இல் மார்க்ஸும் மரணித்தார். அவரது உடல் லண்டனில் ஹைறகேட் மைதானத்தில் , அடக்கம் செய்யப்பட்டது. இவர் இறந்த நாளான மார்ச் 14 இவரது நினைவுநாளாக தொழிலாளர் உலகினால் இன்றும் கொண்டாடப்படுகின்றது.

*பொ. பூலோகநாதன்*
*மெய்யியல்துறை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

446

## நிழலை விற்றான்




ஒரு கிராமத்தில் ஒரு குடியானவன் வீட்டு முன்னால் ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் குளிர்ந்த நிழலில் உட்கார்ந்து சிரமபரிகாரம் செய்து கொள்வது அவன் பழக்கம்.

ஒரு தடவை அவன் ஒரு கோடையின் போது சாப்பிட்டு விட்டு மரத்தடியே உட்கார வந்தான். அப்போது வேறொருவன் அந்த இடத்தில் உட்கார்ந்திருப்பது கண்டு ஏய்? நீ எப்படி இங்கே வந்து உட்காரலாம்? உம். எழுந்திரு என்றான்.

அதற்கு அவன் ஐயா வெயில் சற்றுக் கடுமையாக இருந்ததால் இங்கு நிழலில் உட்கார்ந்து கொண்டேன் என்றான். ஆனால் குடியானவன் அதெல்லாம் முடியாது நான்தான் இந்த மரத்திற்குப் பல வருடங்களாக நீர்பாய்ச்சி பாதுகாத்து வருகிறேன். எனவே அம்மரம் என்னுடையது. அதனுடைய நிழலும் எனக்கே சொந்தம் என்றான்.

அதுகேட்டு அந்த மனிதன் அப்படியா சங்கதி? அப்போது இதன் நிழலை எனக்கு விற்றுவிடுங்கள். நீங்கள் கேட்கும் பணம் கொடுக்கிறேன் என்றான். பணம் என்ற பேச்சைக் கேட்டதுமே குடியானவனுக்கு மனதில் பணத்தின்மீது ஆசை ஏற்பட்டது. கடைசியில் பேச்சுவார்த்தை முடிந்து விலையும் குதிர்ந்தது. மூன்று பேர் சாட்சிகளாக இருக்க அந்த மனிதன் அதன் நிழலை விலைக்கு வாங்கிக் கொண்டான். அன்று முதல் அவன் அந்த மரத்தின் நிழலிலே வந்து தினமும் உட்காரலானான். அது மட்டுமல்ல வழியில் போவோரை எல்லாம் கூப்பிட்டு உட்காரவைத்து இளைப்பாறச் சொல்வான். அது மட்டுமல்ல அம்மரத்தின் நிழல் எங்கெல்லாம் விழுமோ அங்கு எல்லாம் அவன் செல்வான். சில சமயங்களில் அம்மரத்தின் நிழல் அந்தக் குடியானவன் வீட்டுத் திண்ணையிலும் நடையிலும் படுக்கையறையிலும் விழும். அங்கெல்லாம் அவன் சற்றும் தயங்காது போய் உட்கார்ந்து கொண்டு விடுவான். இதைக்கண்டு அந்தக் குடியானவனுக்கு மிகவும் கோபம் வந்தது.

அவனிடம் குடியானவன் ஏய் என்வீட்டுத் திண்ணையிலும் நடையிலும் படுக்கையறையிலும் வந்து உட்கார உனக்கு உரிமை ஏது? எனக் கேட்டான். அதற்கு அவன் ஐயா உமது மரத்தின் நிழலை நான் விலை கொடுத்து வாங்கியிருக்கிறேன்.



எனவே அந்த நிழல் விழும் இடத்திலெல்லாம் உட்கார்ந்து கொள்ள எனக்குப் பூரண உரிமை உண்டு என்றான். அது கேட்டு அவன் திடுக்கிட்டான்.

ஒருநாள் அக்குடியானவன் வீட்டில் ஏதோ ஒரு விசேட நாள் வர அவன் தன் உறவினர்களையெல்லாம் சாப்பிட அழைத் திருந்தான். அவர்கள் விருந்துண்ண உட்கார்ந்தனர். அந்த இடத்தில் மரத்தின் நிழல் விழவே நிழலை வாங்கிய மனிதன் அங்கு வந்து உட்கார்ந்து கொண்டான்.


அங்கு வந்தவர்களுக்கு அவனது செய்கை ஆச்சரியத்தை விளைவித்தது. அழையா வீட்டில் நுழையும் விருந்தாளி போலிருக்கிறானே எனத் தமக்குள் அவர்கள் பேசிக் கொள்ளலாயினர். அப்போது அவன் அவர்களிடம் தான் அக்குடியானவனிடமிருந்து மரத்தின் நிழல் வர்ங்கியதை விபரமாகச் சொன்னான். அது கேட்டு எல்லோரும் கொல்லென்று சிரித்தனர். அக்குடியானவனுக்கு ஒரே அவமானமாகப் போய்விட்டது. மறுநாளே அவன் அந்த வீட்டை விட்டு வேறு எங்கோ போய் விட்டான்.

### அம்புலிமாமா கதைகள்

## குட்டு வெளிப்பட்டது

ஒருநாள் விவசாயி தங்கராசாவுக்கு உடல்நலம் சரியில்லாமல் போக அவன் தன் பிள்ளைகளான ஜெகன், பாலன் இருவரையும் வயலுக்கு வேலை செய்ய அனுப்பினான். இயல்பிலேயே உழைப்பாளியான ஜெகன் வயலில் இறங்கிக் கடுமையாக உழைக்க சோம்பேறியான அவன் தம்பி பாலன் மரத்தடியில் படுத்து சுகமாய் நாள் முழுவதும் தூங்கினான். மாலை மங்கியதும் இருவரும் வீடு திரும்பினர். பாலன் சாமர்த்தியமாக சிறிது சேற்றை எடுத்து தன் கை, கால்கள், உடைகளில் அப்பிக்கொண்டு அண்ணனுடன் வீடு திரும்பினான்.

வீட்டுக்கு வந்ததும் பாலன், அம்மாவிடம் பாரும்மா! நான் நாள் முழுவதும் வயலில் கடுமையாக வேலை செய்தேன். அண்ணன் ஒன்றுமே செய்யாமல் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கினான் என்று அண்டப் புளுகு புளுகினான். பாலன் சொன்னதை உண்மை என்று நம்பிய அப்பாவி அம்மா ஜெகனைக் கடிந்து கொண்டாள். ஆனால் தன் தம்பியைக் காட்டிக்கொடுக்க விரும்பாமல் மௌனமாக இருந்துவிட்டான். இரவு உணவருந்திய பின் இருவரும் உறங்கச் சென்றனர். ஜெகன் உடனே உறங்கிப்போக பாலன் தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுத்தான்.



அவனை உற்றுக் கவனித்த அவன் தந்தை தங்கராசு பாலா உன் அண்ணன் நாள் முழுவதும் கடுமையாக வேலை செய்த களைப்பில் இப்போது அயர்ந்து தூங்குகிறான். ஆனால் நீயோ வேலை செய்யாமல் நாள் முழுவதும்வெட்டியாய் தூங்கியிருக்கிறாய் என்பது நன்றாகத் தெரிகிறது. அதனால்தான் இப்போது நீ தூக்கம் வராமல் தவிக்கிறாய். உன் அண்ணன் அப்படியும் உன்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. நீயும் இருக்கிறாயே! சே என்று இகழ்ந்தான். குட்டு வெளிப்பட்டதைக் கண்டு பாலன் கூனிக்குறுகினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யுத்தத்தின் பின்னரான மாணவர்களின் கல்விநிலை வியப்பை ஏற்படுத்தியுள்ளது

## சந்திரகுமார் எம்.பி தெரிவிப்பு

**(யாழ்ப்பாணம்)**

**கொடிய யுத்தத்திற்குப் பின்பு வன்னி மாவட்டங்களில் மரநிழல்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட கல்விச் செயற்பாடுகள் தற்போது சகல பௌதீக வளங்களும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் உள்ளதோடு மாணவர்களின் பெறுபேறுகளும் வியப்பை ஏற்படுத்தியுள்ளன என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**







யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியில் நேற்று முன்தினம் வடமாகாணத்திலுள்ள 12 வலயங்கள்ள சேர்ந்த 66 பாடசாலைகளுக்கு தொலைக்காட்சிகள் வழங்கும் நிகழ்வு' இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்குஅவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கான நெனச திட்டத்தின் கீழ் தொலைக் காட்சி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டுள்ளோம். உண்மையிலேயே யுத்தத்திற்கு பின்பு தான் அதிகளவான நன்மைகளை எமது பிரதேசம் அனுபவிக்க முடிந்தது. இன்று யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு உருவாகியுள்ள ஒரு சுமுகமான இயல்பு நிலைமையில் எங்களது கல்வியை நாங்கள் வளர்த்தெடுக்க வேண்டும்.

வடமாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டம் கல்வியில் தலைசிறந்த மாவட்டமாக இருந்தது. ஆனால் யுத்தம் அதன் உயர் நிலையை பின் நோக்கி தள்ளிவிட்டது. இன்று அதாவது யுத்த த்திற்கு பின்பு உருவாகியுள்ள சூழலால் நாம் முன்பிருந்தநிலையைதக்கவைப்பதற்காக கடினமாக உழைத்துக் கொண்டிருக்கின் றோம். வடமாகாண கல்வியமைச்சு, பாடசாலை அதிபர்கள் ,ஆசிரியர் சமூகம், கல்வியாளர்கள் எம்முடன் சேர்ந்து இழந்த கல்வியை மீள பெறுவதோடு இருக்கின்ற கல்வி நிலையை முன்நோக்கி கொண்டு செல்ல வேண்டும்.

எனவே இதுபோன்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கல்வியிலும் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவதிலும் நாங்கள் இன்னும் சில காலங்களுக்கு கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது.

யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு குறு கிய காலத்திற்குள் குறிப்பாக வன்னி மாவட்டங்களிலுள்ள பாடசாலை மாணவர்களின் கல்வி மிக வேகமாக வளர்ச்சியை கண்டிருக்கின்றது.

கடந்த கல்வி பொது (சா/த) பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டம் 12 சதவீதமான வளர்ச்சி கண்டு இலங்கையிலேயே முதலாவது இடத்தை பிடித்துக் கொண்டிருக்கின்றது. அது பெருமைக்குரிய விடயம் தான்.

யாழ். மாவட்டம் 5 சதவீத வளர்ச்சி கண்டு இருக்கின்றது. வன்னி மாவட்ட பாடசாலைகள் எல்லாவற்றிலும் சகல பௌதீக வளங்களும் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டன. இதற்காக கோடிக் கணக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செலவு செய்யப்பட்டுள்ளது. மிகவும் குறுகிய காலத்திற்குள் கிடைத்த சந்தர்ப்பத்தை வன்னி மாவட்ட பாடசாலை மாணவர்களும் பாடசாலை சமூகமும் சரியாகப் பயன்படுத்தி முன்னேற்றத்தை நோக்கி சென்று கொண் டிருக்கிறார்கள். கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் வளம் எங்களிடம் இல்லை. அத்தோடு தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது.

வன்னி மாவட்ட ஆசிரியர் பற்றாக்குறை 1338 ஆக தற்போது அதிகரித்துவிட்டது.

இருப்பினும் வடமாகாண கல்வி அமைச்சு புதிய ஆசிரியர்களை உள்வாங்குதற்கான விண்ணப்பங்களைக் கோரியிருக்கின்றது.

விண்ணப்பம் பூர்த்தியாக்கப்பட்ட பின்பு வெகு விரைவில் அதாவது ஜுன் முதலாம் திகதி அளவில் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனக்கூறப்பட்டுள்ளது.

வடமாகாணத்தில் கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய மூன்று பாடங்களுக்கான ஆசிரியர்களை உள்வாங்குவதற்கானதகைமை உடையோர்எங்களிடமில்லை. இந்தநிலைதொடர்கின் றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# பொலிஸார் காக்கி உடையை மட்டுமே அணிய வேண்டும்

## பொலிஸ்மா அதிபர் இலங்கக்கோன்

(கொழும்பு)

பொலிஸ் காக்கி நிற சீருடையைத் தவிர வேறு எந்தவொரு காக்கி நிற உடையையும் அணிய வேண்டாம் என பொலிஸ்மா அதிபர் என். கே.இலங்கக்கோன் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் தைத்துக் கொள்ளப்படும் சீருடைகள் காக்கி நிறத்தில் இருந்த போதிலும் அவற்றின் நிறத்தில் மாற்றம் உள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் இந்நிறத்தினாலான சீருடைகளை மாத்திரம் உபயோகிக்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பொலிஸுக்குமாற்றம்பெற்றுவரும்பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கான சீருடையில் கடமையாற்றுவது பொலிஸ்மா அதிபரின் சுற்றறிக்கையின் பிரகாரம் தடை செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்சீருடையின்நிறம்மற்றும்பொலிஸ் சீருடையை முறையாகப் பயன்படுத்தாமை தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனால் பொலிஸ் சீருடை தொடர்பில் தொடர்ந்தும் அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸ் உயரதிகாரிகளுக்கு பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (அ-2)

# இன்புளுவென்ஸா வைரஸ் தாக்கம்; கர்ப்பிணி தாய் ஒருவர் மரணம்

புதிதாக பரவிவரும் இன்புளுவென்ஸா ஏஎச்1என் 1 வைரஸ் தொற்றுக் காரணமாக மொனராகலை மாவட்டத்தில் உயிரிழப்பு இடம் பெற்றுள்ளது.

மொனராகலை பிபில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவரே ஏஎச்1என்1 வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவரது பிரேத பரிசோதனை அறிக்கையின்படி கர்ப்பிணித்தாய் புதிதாக பரவிவரும் இன்புளுவென்ஸா வைரஸ் தாக்கத்தின் காரணமாகவே உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வைரஸ் தாக்கத்தில் மொனராகலை வைத்தியசாலையில் வேறு எந்த நோயாளர்களும் பாதிக்கப்படவில்லை என வைத்தியசாலையின் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன் தாக்கத்தால் 10 கர்ப்பிணி தாய்மார்கள் கொழும்பு சேய் வைத்தியசாலையில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் [illegible] துள்ளமை [illegible]. (அ-2)

# வட மாகாணசபைத் தேர்தலா! எனக்கு எதுவும் தெரியாது

## தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல்குறித்து எனக்கு எதுவுமே தெரியாது. அதுகுறித்த அறிவித்தல் எதுவும் இதுவரை விடுக்கப்படவில்லை என்று தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கட்சிகளின் செயலாளர்களை நேற்று முன்தினம் தேர்தல் திணைக்களத்தில் சந்தித்து தேர்தல் ஆணையாளர் கலந்துரையாடினார்.

எதிர்வரும் 15 அம் திகதி முதல் காட்சிப் படுத்தப்படவுள்ள 2013 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர் பட்டியல் தொடர்பில் இதன் போது ஆராயப்பட்டது. கட்சி பெயர் மாற்றம், கட்சி சொத்து விபரங்களைச் சமர்பித்தல், 2013 வாக்காளர் இடாப்பு திருத்தம் மற்றும் நடைமுறை பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இந்த சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் உறுப்பினர்களான சுரேஸ் பிரேமசந்திரன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் வடமாகாண சபைத் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையாளர், வடமாகாண சபை தேர்தல் குறித்து எனக்கு எதுவுமே தெரியாது. அது குறித்த அறிவித்தல் எதுவும் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று பதிலளித்தார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த கூட்டமைப்பு எம்.பி சுரேஸ் பிரேமச்சந்திரன், வடக்கு மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்தே சர்வதேச கண் காணிப்பாளர்களை வடக்கில் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். இந்த கலந்துரையாடலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி உட்பட பதிவு செய்யப்பட்ட சகல கட்சிகளின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். (அ-2)

# அசாத் சாலி கைது குறித்து கனடா கண்டனம்

இலங்கையின் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியான முஸ்லிம் தமிழ் தேசிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமையை கனடா கண்டித்துள்ளதுடன் அவரை விடுவிக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது.

கனடாவின் மத சுதந்திரம் தொடர்பான தூதர் அன்ரூ பேனாட் இந்தக் கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் மனிதவுரிமைகள் மீறல் மற்றும் மத சுதந்திரம் தொடர்பில் குரல் கொடுத்து வந்த அசாத் சாலியை உடனடியாக விடுவிக்க வேண்டும்.

அதன்மூலம் இலங்கையில் மதங்களுக்கான சுதந்திரத்தை இலங்கை அரசாங்கம் நிலைநாட்ட வேண்டும் எனவும் அன்ரூ பேனாட் கோரியுள்ளார். (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழ்மையின் குதூகலிப்பு

ஓலைக்குடிசையில்
ஒழுகும் மழைத்துளிகள்
இரவு வானை ரசிப்பதற்காய்
இடையிடையே துவாரங்கள்
வெயிலும் மழையும்
அழையா விருந்தாளிகளாய்
அடிக்கடி வந்து போக
அவஸ்தைகளை
தடுக்கும் முயற்சிகளில்
கிடுகுகளின் மேலே
தறப்பாள்கள் ஏறிக்கொள்ளும்
சில நாளில் அவையும் சலிப்படைய
திரும்பவும் பாத்திரங்கள்
அடுக்கப்படும்
மழை வரும் ஓர்நாளில்
இரவு வானின் அழகை
முற்றத்தில் நின்று
ஒருபோதும் ரசிப்பதில்லை
படுத்துக்கொள்ளும்போது
என்னைத்
தரிசனம் செய்கின்றன
ஆஹா.
யாழ்ப்பாணம்.

## ஒரு.. தாயின் புலம்பல்

நீ..
காணாமல் போனவன்தான்
ஆனாலும்
உன்னைத்தான் தேடுகிறேன்
அமாவாசை கடந்த
இரு..
பௌர்ணமி திகதியில்
உன் நினைவுகள்...
வேட்கை கொண்ட
நீ
தீர்ந்துபோ..
காத்திரு..
ஆயிரமாயிரமும்
சிரியாவிலும்
அமைதிநாடுகளிலும்
இயலத்தான்..
அவலமாயடமல்
உன்னைப்போல்
எத்தனையோ
இழப்புக்களும் இம்சைகளும்
ஆனாலும்..
என்..
தேடல்களில்
நீ..
காணாமல் போன
நீ
கடமையன்றோ
க.நாகேஸ்வரி
நகிலடிப்பாய்

## கண்ணீரில் தள்ளாடும் மேகங்கள்

வானின் கண்ணீர் மழையாகி
மண்ணில் விழுகிறது
வறியவனின் கண்ணீர்
வற்றாத வெள்ளமாக
ஊரையே அலைக்கிறது
கடலின் கண்ணீர் அலையாகி
கரையை முட்டுது
காற்றின் கண்ணீர் பனித்துளியாய்
காலையில் வழிகிறது
மலரின் கண்ணீர் மதுவாகி
வண்டை அழைக்கிறது
இயற்கையின் கண்ணீர் வெப்பமாகி
உலகையே அச்சுறுத்துது
கண்ணகியின் கண்ணீரால் மதுரையும்
சீதையின் கண்ணீர் பெருகியதால்
அன்று இலங்கையும் எரிந்தது
ஆனால் நம் அகதிகளின்
கண்ணீர் மட்டும் இன்னும் ஏனோ-இந்த
அக்கரை அழிக்கவில்லை..!
கண்ணீரில் தள்ளாடும் மேகங்கள்
கரைசேரும் நாள் வருமா?
கனவுகள் யாவும் மெய்ப்படும்
காலம் வாய்க்குமா?
குறிஞ்சிக்கவி, குப்பிளான்


## இமயம் தொட...



உன் இதயத்தின் வலிகளை
இன்னொருவர்
புரிந்திடவேண்டுமெனும்
எண்ணங்களை விட்டுவிடு
வலிகளில் பட்டு நொந்து எழு
உன் மனதாலேயே
வலிகளுக்கு மருந்து கொடு
உன்னை நிலை நிறுத்த
உன்னால் மட்டுமே முடியும்
மாவை நா.கஜேந்திரன்

## காற்றே தூது செல்

விண் தொட்டு...
மண்தொட்டு வரும்
விலையில்லா தென்றலே-நீ
வயலோடு விளையாடி
வழியெல்லாம் கதைபேசி
வளைபோல வருகின்றபோது... என்
இதயவீதியில் காதலியாய்
இருதயத்தில் வாழும் ஒருத்தியாய்
இவள் உடலில் உயிரானவள்
இன்றும் வாசம் வீசும் என்
அவளைக் கண்டாயா....?
இத்திக்காய் அவளிருக்க
இத்திக்காய் நானிருக்க...
திக்கற்றுப் போகும் என் காதல்
திறந்த வயல்...
இறுதியாய் ஓர்வலம்போயே
உன்னை தென்றலே
என் அவளைக் கண்டு-நீ
ஒரு தூது சொல்லி வருவாயோ...?
தெல்லிப்பளை ம.ஜனேந்திரன்





# கவிதைக் கலசம்

# மௌனத்தின் தேடல் - 152



### மனிதமற்ற உலகம்

இனவெறியால் தன்னினமான
மனிதனை மனிதன் கொன்று
மகிழ்ச்சி கொள்ளும் மனிதமற்ற
உலகமடா இன்றைய உலகம்
ஆறாம் அறிவை ஆண்டவன்
தந்தும் என்ன பயன் ஏனெனில்
ஐந்தறிவுள்ள விலங்கு போன்றே
தன்னினத்தையே அழிக்கின்றான்
கொற்றையூர் பா.அனு

### பலம்

மனிதனே
உன் பலத்தை
மனிதரில் காட்டாதே
மனிதனை நல்ல
மனிதனாகக் காட்டும்
பண்பான செயல்களில்
உன் பலத்தைக் காட்டு
அ. மேரி அல்போன்சா குருநகர்

### கடவுள் இருக்கிறான்

மானிடம் தனி வெறும்
மரக்கட்டையா- பாவிகளே
ஏனித்த கொடூரக் காலம் ஒருநாள்
பதி வாங்கியே தீரும்
அரசன் அன்று கொல்வான்- தெய்வம்
நின்று கொல்லும் இது நியதி!
க.முத்துராசா கட்டைக்காடு

### வருமோ?

கத்தி இன்றி
இரத்தம் இன்றி
யுத்தம் இன்றி
ஒன்றே குலம்
ஒருவனே தேவன் என்ற
சமரசமான நிலை
எம் மனித ஜாதிக்கு
என்றுதான் வந்திடுமோ?
லீலா செல்வவடிவேல் இணுவில் மேற்கு

### புரிந்துகொள்

உலகில் விலை மதிக்க முடியாத
உயிரை நீ ஒரு நிமிடத்தில்
எடுக்கிறாயே என்ன அநியாயம்
எந்த மனிதனுக்கும் தவறு
செய்யாதவன் அல்ல
சாதிக்கப்பிறந்த மனிதனை வாழவிடு
சாவதற்காக எவனும் பிறக்கவில்லை
செ.நிஷா தம்பசிட்டி

### இது நீதியா?

நிராயுத பாணியான
அப்பாவி இளைஞனை
ஆயுததாரி ஒருவன்
கூரிய ஆயுதத்தால் குத்திக்
கோரக் கொலை ஒன்றை
நடுவீதியில் வைத்து
அரங்கேற்றுகின்றான்
இது தர்மமா, நீதியா
ஆராதனா மட்டுவில் தெற்கு

### மனிதம் எங்கே?

ஏ! மனிதா இதயத்துள் இருந்து
எழுவதுதான் மனிதம்
பாதக மனிதா!! ஏன் இந்த வெறி?
பாவி மனிதத்தை ஏன் கொன்று
புதைக்கின்றாய்??
பொ.புவிதன் வரியப்புலம்

### காத்திருப்பு

ஏய் அசுரனே!
கத்தி எடுத்தவன்
கத்தியாலே சாவான்
என்பது ஆன்றோர் வாக்கு
என் உயிரைப் பறித்த
உனக்கு சாவு நிச்சயம்
காத்திரு உனக்கான
மரணத்திற்காய்
வி.நர்சிகா நல்லூர்

### ஒற்றுமையே பலம்

தொழில்நுட்ப காலத்தில்
ஐந்தறிவு ஜீவன்கள்கூட
ஒற்றுமையாக வாழ்கின்றன
மானிடராகிய எமக்கு
ஏன் இந்த அகோரம்

### நம்பியவன் கதி

துரோகம் செய்தவனை
தோழனாகக் கொண்ட காலமிது
என்றுதான் நம்பிக்கையில்
நம்பிக்கை வருமே
பதில் சொல் மனமே
பிறரை விட உன்னில்
நம்பிக்கை வை
நீ பிழைத்துப்போவாய்
ஆர்.ஜொனட் பிரசாத் கொய்யாத்தோட்டம்

### மனிதனாக மாற

மெய்ஞ்ஞானம் தொடக்கம்
விஞ்ஞானம் வரையும்
மாற்றங்கள் பல
காணத்துடிக்கும்- நீ
இன்னும் ஏன்
மனிதனாக மாற
நினைப்பதில்லையே...?
ம.தருண் மானிப்பாய்

### முடிந்து விட்டது

வாய்ச்சண்டை
அதிகரிக்க அதைமீறி
கைகலப்பு ஏற்பட்டு
வாளெடுத்து மற்றவனின்
வாழ்வினை அழிக்கும்
மனித இனம்
இன்னும் வாழ்ந்து
கொண்டு
இருக்கின்றதா...?
செ.நிவேதா யாழ்ப்பாணம்

### சோகம்

ஒருமுறை போனால்
மறுபடியும் விரும்பினாலும்
திரும்பிவராதது உயிரென்று
போதிமாதவரென்று
ஓதியதின்று அகோரத்தால்
ஓரம்போனது
சு.நாகராசா நுணாவில்

### கொடுமையின் உச்சம்

வெறி மனம் படைத்த
கொடுங்கோல் ஆட்சியில்
அதர்மம் பிடித்த
அரக்கர் செய்யும்
இவ் அராஜகச் செயல்களில்
படிவதெல்லாம்
ஏதும் அறியா அப்பாவிகளின்
துயரம் நிறைந்த
இரத்தத்துளிகளே

### பாதகச்செயல்

ஆயுதபலத்தால் எதையும்
சாதிக்கலாம் என்றெண்ணி
கொலைவெறி கொண்ட
கயவர்கள் மக்களைக்
கத்திக்குதற ஆயுதத்தால்
குத்திக்கொலை செய்யுமிப்
பாதகச் செயலை இனியும்
பார்த்திருக்க முடியுமா?
துலா தெல்லிப்பழை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் -153



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 09.05.2013 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாமன்னன் சங்கிலியன்

35



## விதிய பண்டாரன்

சங்கிலி தன் பரிவாரத்துடன் விதியபண்டாரனைச் சந்திக்க வீரமகாகாளி அம்மன் கோவிலுக்குச் சென்றான். மன்னனைச் சந்திக்கும் ஆவலில் இருந்த விதியபண்டாரன் ஆர்வத்தோடு வரவேற்றான்.

"சகல விபரங்களையும் நான் 'கேள்விப்பட்டேன்"

"மன்னா... புத்த தந்ததாது புனிதமானது. அதனை எவன் வைத்திருக்கிறானோ அவனே நாட்டின் அரசனாவான் என்பது எம்நாட்டவர் நம்பிக்கை... இப்போது அந்தப் புனித புத்ததந்ததாது என்னிடம் உள்ளது. அதனால் கோட்டை இராச்சியம் என்னுடையது" என்ற விதியபண்டாரனை மன்னன் நோக்கினான்.

"கோட்டை இராச்சியம் இப்போது போர்த்துக்கேயர் வசம்... அவர்களோடு பொருந்துவதா?"

"அவர்கள் இங்கிருந்து துரத்தப்பட வேண்டியவர்கள்; அந்நியர். அடுத்த இலக்கு யாழ்ப்பாணம்."

"உறங்கும் புலியை எழுப்புவதா? மன்னார் சம்ஹாரத்திற் காகவே அவர்கள் பொறுமையைக் கடைப்பிடிக்கிறார்கள்."

"அவர்கள் துரத்தப்பட வேண்டியர்வர்கள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதற்காகக் காரணமின்றி அவர்கள் மீது படையெடுப்பதா?"

விதியபண்டாரன் தயக்கமின்றிக் கூறினான்:


"நீங்கள் படையுதவ மறுத்தால் இங்கு தங்கி, படைதிரட்ட அனுமதியுங்கள். எனது ஏராளமான திரவியங்களைப் பயன்படுத்தி தென்னிந்தியர்களை கூலிக்கு அமர்த்திக் கொள்கிறேன்."

***

சங்கிலி மன்னன் சிந்தனைவயப்பட்டு உழன்றான். மன்னார்ப் படுகொலைகளுக்குப் பின்னர் நல்ல உறக்கத்தை அவன் இழந்தான். இப்போது வீரமகாகாளியம்மன் கோயில் முன்றலில் நிறைவேறி முடிந்த துயரச்சம்பவங்கள் அவனின் எஞ்சிய உறக்கத்தையும் பறித்துவிட்டன. அந்தச் சம்பவம் கண்முன் நிழலாடியது.

விதியபண்டாரன் தம்முடிவில் திடமாக இருந்தான்.

அந்த நேரம்பார்த்து பரநிருபசிங்கனிடம் தூதுவனாக வந்த காக்கைவன்னியனின் ஆள், வெடிப் பொருட்களை ஏற்றிவந்த வண்டில் ஒன்றிற்கு தீ வைத்தான். சொல்லி வைத்தாற்போல படபடவென வெடிச் சத்தம் எழுந்தது. பேசிக்கொண்டிருந்த இரு தலைவர்களும் தப்பாகப் புரிந்து கொண்டார்கள். சங்கிலி மேல் ஏற்கனவே சந்தேகம் கொண்டிருந்த விதியபண்டாரன் முதலில் தன் உறைவாளை உருவிக்கொண்டான். அதனைக் கண்ணுற்ற சங்கிலியும் உருவிக்கொண்டான். மோதிக் கொண்டார்கள். இரு தலைவர்களும் மோதிக் கொண்டதைக்கண்ட இருதரப்பினரும் தத்தமது ஆயுதங்களை எடுத்துக்கொண்டனர். அப்பிரதேசம் சில கணங்கள் யுத்தகளமாயிற்று. வீரமகாளியம்மன் ஆலயத்தின் முன் வீதி மண் இரத்தத்தால் குளித்தது.



தற்போது புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள வீரமகாகாளியம்மன் ஆலயம்-நல்லூர்

"அவசரப்பட்டுவிட்டாயே விதியபண்டாரா..."

செய்தியறிந்து சேனாதிபதி சண்பகப்பெருமாள் வீரர்களிடம் ஓடிவந்தான்.

"விதியபண்டாரனை அரசமரியாதைகளுடன் தகனம் செய்து, அவனது அஸ்தியை செப்புக்குடத்திலிட்டு எடுத்து வருக. ஏனைய வீரர்களை அவர்கள் தகுதிக்கேற்றவாறு தகனம் அல்லது அடக்கம் செய்துவிடுக. திரவியங்களை அரண்மனைக் களஞ்சியத்திலும் குதிரைகளையும் யானைகளையும் உமது படையணியிலும் சேர்த்துவிடுக. விதியபண்டாரத்தின் புகழ்பெற்ற உறைவாளை வீரமகாகாளியம்மன் கோயிலுக்குக் கொடுத்துவிடுக" என்று கட்டளையிட்டான் மன்னன்.

அரசமாதேவி அந்தரப்புரத்துக்கு வந்தாள். மன்னனின் ஏக்க நிலையை அவதானித்தாள்.

"என்ன சிந்தனைவசப்பட்டுள்ளீர்கள்? எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை சுவாமி?"

"தேவி, சில காலமாக என் அமைதி கலைந்துவிட்டது. மன்னார் சம்ஹாரம் ஏற்படுத்திய தாக்கத்தோடு இப்போது விதியபண்டாரனின் அவலச்சாவும் சேர்ந்து கொண்டது."

"விதியபண்டாரத்தின் மரணத்திற்கு நீங்கள் காரணமல்ல. அவன் தானாகத் தேடிக்கொண்டது. அவன் அவலச்சாவு உங்களைப் பாதிக்கக்கூடாது எனச் சோதிடர் கூறியதற்கு இணங்கப் பரிகாரமாக அவனது அஸ்தியை வைத்து பூதவராயர் கோயிலைக் கட்டி வருகிறீர்கள். பிறகென்ன?"

ஆமாம். விதியபண்டாரனின் நினைவாக பூதவராயர் ஆலயத்தை சங்கிலி கட்டுவித்தான். நினைவாக என்பதிலும் பார்க்க, அவன் அகால மரணத்தினால் ஏற்பட்ட பயத்தினால் அமைப்பித்தான் என்பதே பொருத்தம்.

செங்கை ஆழியான்

(தொடரும்)

# எல்லைகளும் சுதந்திரமும்

தென்சூடானின் சுதந்திரம் நிகழ்கால வரலாற்றில் மிக நீண்டகாலம் நீடித்த உள்நாட்டுப் போர்களின் இறுதிப் போராகக் கருதப்படுகிறது. இந்தப் போரில் இருபது இலட்சம் மக்கள் இறந்து போனார்கள் என மதிப்பிடப்படுகிறது. இலட்சக் கணக்கில் மக்கள், இடம்பெயர்வு மற்றும் வன்மை அதிர்ச்சிக்கு உள்ளானார்கள். இறந்தவர்களின் எண்ணிக்கை உலகில் அண்மைக்காலமாக றூவான்டா, பாரசீக வளைகுடா, போல்க்கன்ஸ் மற்றும் செச்சீனியா போன்ற நாடுகளில் நடந்த மோதல்களில் கொல்லப்பட்ட கூட்டுத்தொகையை விஞ்சிவிட்டதாகச் சொல்லப்பட்டது. கொசோவோ மற்றும் தென்சூடான் நாடுகளில் நடந்த சுதந்திரப்போர் பற்றிய கதைகளில் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஒன்று, வடக்கு - தெற்கு போரானது பழைய நச்சுறவுகளை அடிப்படையாகக் கொண்டது. கொசோவோ, சேர்பிய ஆண்டகைக்கும் அல்பேனிய ஏவலாளிகளுக்கும் இடையில் நடந்த போர். தென்சூடான், அரேபிய ஆண்டகைக்கும் ஆபிரிக்க

## கொசோவோ, தென்சூடான் இரண்டினதும் பட்டறிவு

ஏவலாளிக்கும் இடையில் நடந்த போர். இரண்டாவது, இந்த உள்நாட்டுப் போர்கள் இரண்டும் விதிவிலக்கானது. காரணம் இரண்டும் பெரிதும் எதிர்பாராத சுதந்திரத்திற்கு இட்டுச்சென்றது. மூன்றாவது, குடியேற்ற நாடுகளால் வரையப்பட்ட எல்லைக்கோடுகள் புனிதமானது அல்ல என்ற உண்மை. அந்த எல்லைக்கோடுகள் குடியேற்ற நாடுகளின் சொந்த நலன்களுக்காக வரையப்பட்டவை. உள்நாட்டு மக்களின் தனியியல்பு, உணர்வுகள் மற்றும் இனநலன் கணக்கில் எடுக்கப்படவில்லை. நான்காவது, கொசோவோ மற்றும் தென்சூடான் இரண்டும் ஏற்கனவே தன்னாட்சி உரிமை வாய்ந்த பகுதிகள் ஆகும்.

அதேசமயம் வேறுபாடுகளும் உள்ளன. கொசோவோவின் சுதந்திரம் ஒருதலைப் பட்சமான, ஆனால் பின்னர் பன்னாட்டு நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்ட பிரகடனமாகும். தென்சூடானைப் பொறுத்தளவில் அதன் சுதந்திரம் அமைதி உடன்படிக்கையின் மூலம் பெறப்பட்டது. அதாவது, மணமுறிவு இருபக்கத்தினரும் விருப்பப்பட்டு எடுத்த முடிவு. இரண்டாவது, யூகோசிலாவியா 90களின் தொடக்கத்தில் சிதையுண்டு போனது. தென்ஐரோப்பாவின் போல்க்கன் குடாநாட்டில் மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒரே நாடு கொசோவோ. தென்சூடான் இதற்கு மாறானது. தென்சூடானின் பிரிவினையை மத்தியகிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகள் எதிர்விளைவுகள் காரணமாக வழிமொழியவில்லை. ஆபிரிக்க நாடுகளின் எல்லைகள் குறிப்பிடத்தக்க அளவில் உறுதியாக இருந்தன. சுதந்திரத்தின் விடியல் காலம் தொட்டு எரித்திரியாவின் சுதந்திரம் நீங்கலாக ஆபிரிக்கக் கண்டத்தின் எல்லைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்படவில்லை. இப்போது, சோமாலிலாந்தின் இறைமை பற்றி கீச்சொலி கேட்கிறது.



அண்மைக்கால அரசியல் நகர்வுகள், சேர்பியாவும் கொசோவோவும் தங்களது உறவுகளை சிறிது [illegible] இயல்பு நிலைக்கு கொண்டுவர முயற்சிப்பதைக் காட்டுகின்றன. இந்த நாடுகள் இரண்டும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைய ஆர்வமாக இருப்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து போகவேண்டியுள்ளது. Economist என்ற சஞ்சிகை சேர்பியா, கொசோவோவிலுள்ள சேர்பியர்களுக்கு தன்னாட்சி உரிமையை எதிர்பார்க்கிறது எனக் கூறுகிறது. கொசோவோ மிட்றோவிக்காவில் வாழும் சேர்பியர்கள் மீதான பெயரளவு கட்டுப்பாட்டை மீளநிலை நாட்டும் பொருட்டு ஒரு உடன்படிக்கையை எழுத விரும்புகிறது. அவர்கள் இப்போது கெசோவோ அரசின் கட்டுப்பாட்டுக்கப்பால் இருக்கிறார்கள். இவை யாவும் எப்படியும் ஒருநாள் நடக்கக்கூடும்.

ஆபிரிக்க ஒன்றியத்தின் குழந்தை நாடான தென்சூடான் இதுவரை ஒன்றுபட்டு இருந்து வருகிறது. அதன் வாழுமை பற்றி சொல்லப்பட்ட எதிர்வுகூறல்களை பிழையாக்கிக் கொண்டு வருகிறது. இருந்தும் சூடான்-தென்சூடானுக்கு இடையில் வன்முறை நீடிக்கிறது. காரணம், இருதரப்பும் பன்னாட்டு எல்லை பற்றி இன்னும் ஒரு உடன்பாட்டுக்கும் வரவில்லை. எல்லைப் பகுதிகளில் இருந்து பெறப்படும் எண்ணெய் வருவாயை பங்கிட்டுக் கொள்வதிலும் இழுபறி தொடர்கிறது. தென்சூடானின் பெறுமதிமிக்க சொத்து அதன் எண்ணெய் வயல்களாகும். எண்ணெய் தான் இவ்விரண்டு சூடான்களது முக்கிய வருவாய் மூலமாகும்.

கொசோவோ மற்றும் தென்சூடான் இரண்டினதும் சுதந்திரம் குடியேற்ற நாடுகள் வரைந்த எல்லைக் கோடுகளது புனிதத்தன்மை பற்றிய கேள்விகளை எழுப்புகின்றன. எதிர்கால நகர்வுகள் பற்றி எதிர்வுகூறல் சொல்வதற்கு இன்னும் காலம் இருக்கிறதென்றாலும் ஒவ்வொரு நாட்டின் இறைமை மற்றும் ஆட்புல ஒருமைப்பாடு இரண்டுக்கும் உரிய மதிப்புப் பற்றி அரசியல் எதிர்வு கூறுவது பாதுகாப்பானது அல்ல.

-நக்கீரன்-

-முற்றும்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வின் நிழல்கள்







யாழ்.எயிட் நிறுவனத்தினால் யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதன்போது மாணவிக்கு கல்லூரியின் பிரதி அதிபர் எஸ்.சண்முகேஸ்வரன் உதவிப் பொருட்களை வழங்கி வைப்பதைப் படத்தில் காணலாம்.



கோண்டாவில் சமுர்த்தி வங்கியினால் நடத்தப்பட்ட புத்தாண்டு விளையாட்டு விழா அண்மையில் கோண்டாவில் சமுர்த்தி வங்கி முன்றலில் இடம்பெற்றது. இவ்விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நல்லூர் பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அ.இரவீந்திரதாசன் வெற்றி பெற்ற மாணவிக்கு பரிசில் வழங்குவதையும் விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)






முன்னாள் யாழ்.நகரபிதா அமரர் எஸ்.எஸ்.நவரட்ணம் நினைவாக யாழ்.கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையின் அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணம் வழங்கும் நிகழ்வு அண்மையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வலிகாம வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவகுமாரன் உரை நிகழ்த்துவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வாழ்வக நிறுவனத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் மாணவிக்கு கற்றல் உபகரணம் வழங்குவதையும் படங்களில் காணலாம்.



வவுனியா நகர முதியோர் சங்கத்தின் புதுவருட விழா அண்மையில் வவுனியா வெளிவட்ட வீதி பலநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள், முதியோர்கள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- குருமன்காட்டுச் செய்தியாளர்)



முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான பாரம்பரிய முறையிலான சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படும் செயலமர்வு அண்மையில் கிளி.சிவநகர் அ.த.க.பாடசாலை வளாகத்தில் நடைபெற்றபோது...

(படம்:- சிவநகர் செய்தியாளர்)





வலிகாம வலய 19 வயது பிரிவு பெண்களுக்கான கபடிப் போட்டி அண்மையில் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றிக்கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்ட இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலய அணியினரை முதலாவது படத்திலும் இரண்டாம் இடத்தைப் பெற்ற பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க. பாடசாலை அணியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம் வேண்டும்

## வசந்த பண்டார நிபந்தனை



(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக தொடர்ச்சியாக போர்க்கொடி ஏந்தி வந்த கடும்போக்குடைய சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் தற்போது வடக்குத் தேர்தலுக்காக முக்கிய ஐந்து நிபந்தனைகளை விதித்துள்ளதுடன், அந்த நிபந்தனைகளை அரசு ஏற்கும் பட்சத்தில் தேர்தலுக்கு ஆதரவு வழங்கவும் தயார் என அறிவித்துள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை சிங்கள் தேசிய அமைப்புகள் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி வசந்த பண்டார நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசமைப்பில் மாற்றம் கொண்டுவருவார் என தாம் நம்புவதாகவும் கலாநிதி வசந்த ப்ண்டார கூறினார்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் நீக்கப்பட வேண்டும், மாகாண சபைகள் இணைக்கப்படும் வகையில் மாகாணக்களுக்கிடையில் தீர்மானம் நிறைவேற்றப்படும் முறை இரத்துச் செய்யப்படுதல் அவசியம், பிரதேச சபைகளை மத்திய அரசு தனது கண்காணிப்பில் வைத்திருக்க வேண்டும், விசேட பாதுகாப்புச் சட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்பன உட்பட ஐந்து நிபந்தனைகள் இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிபந்தனைகளுக்கு அரசு சாதகமான பதிலை வழங்காத பட்சத்தில் அரசுக்கு எதிராக செயற்படவும் மேற்படி அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், நாம் முன்வைத்துள்ள ஐந்து நிபந்தனைகளை ஏற்று அவற்றைச் செய்து முடித்த பின்னரே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்குத் தேர்தலுக்கு கட்டளை பிறப்பிக்க வேண்டும். இந்த விடயத்தை ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

மேற்படி நிபந்தனைகளை ஏற்று அதற்கேற்ற வகையில் திருத்தங்களைக் கொண்டுவராது அரசு வடக்குத் தேர்தலை நடத்துமானால் பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிவரும். அது தனிஈழத்துக்கு வழிகோலும். ஜனாதிபதி எமது எதிர்பார்ப்பை வீணடிக்க மாட்டார் என நாம் நம்புகின்றோம். அந்த அடிப்படையில் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் அரசமைப்பில் மாற்றம் கொண்டுவரப்படும் என உறுதியாக நம்புகின்றோம்.

யுத்தத்தை வெற்றி கொண்டதனால்தான் ஜனாதிபதிக்கு மக்கள் செல்வாக்கு அதிகரித்தது. பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் அதிகாரங்களை நீக்காது ஜனாதிபதி வடக்குத் தேர்தலை நடத்துவாரானால் அது யுத்த வெற்றியைக் காட்டிக்கொடுக்கும் செயலாகும். இந்தப் பொறிக்குள் ஜனாதிபதி விழமாட்டார் என நம்புகின்றோம். இது ஜனாதிபதிக்கும் நன்கு தெரியும். இவ்வாறு கலாநிதி வசந்த பண்டார தெரிவித்தார். (2)

## இலங்கையர் ஒருவர் துருக்கியில் கடத்தல்

கொழும்பை வசிப்பிடமாகக் கொண்ட இலங்கையர் ஒருவர் துருக்கியில் கடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜோர்தானுக்கு வேலை வாய்ப்பு பெற்றுச் சென்ற குறித்த இலங்கையர் கூடுதல் ஊதியத்தை பெற்றுக் கொள்ளும் நோக்கில் அங்கிருந்து துருக்கி சென்றுள்ளார்.

இவ்வாறு துருக்கி நாட்டுக்குச் சென்ற போதே குறித்த இலங்கையர் கடத்தப்பட்டுள்ளார்.

இக் கடத்தல் சம்பவத்தின் பின்னணியில் பங்களாதேஷ் பிரஜையொருவர் செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் துருக்கிய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ-2)

## வடமாகாண சபை தேர்தலுக்கு முன் காணி, பொலிஸ் அதிகாரங்களில் மாற்றம் ?

வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களில் மாற்றம் செய்யப்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அரசாங்கத் தகவல்கள் தெரி விக்கின்றன.

அரசியல் சாசனத்தில் திருத்தங்களை செய் வதன் மூலம் காணி மற்றும் பொலிஸ் அதி காரங்கள் தொடர்பில் மாற்றங்கள் செய்யப் படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

காணி அதிகாரங்களை முழுமையாக மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் பொலிஸ் அதிகாரங்களின் முக்கியமானவற்றை மத்திய அரசாங்கத்தின் கீழ்கொண்டு வரவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான நகல் வரைவுத் திட்ட யோசனைகளைத் தயாரிக்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நகல் வரைவுத் திட்டம் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனை பெற றுக்கொள்ளப்படவுள்ளது.

மோட்டார் போக்குவரத்து தொடர்பான பொலிஸ் அதிகாரங்கள் தவிர்ந்த ஏனையவற்றை மத்திய அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் வகையில் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும் பிரதம நீதியரரின் பதவிக் காலத்தையும் ஐந்து ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதுவரை காலமும் பிரதம நீதியரசின் பதவிக் காலம் நிர்ணயிக்கப்படாததுடன் ஓய்வு பெற்றுக் கொள்ளும் வயதெல்லை 65 என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது பதவி வகிக்கக் கூடிய கால எல்லை நிர்ணயிக் கப்படவுள்ளது. (2)

## க.பொ.த. உயர்தர பாடத்திட்டத்தில் தொழில்நுட்பக்கல்வி ஆரம்பம்

க.பொ.த. உயர்தர புதிய பாடத்திட்டத்துக்கு அமைய அறிமுகமரகும் தொழில்நுட்பப் பிரிவு நாடெங்கிலும் உள்ள 200 பாடசாலைகளில் இவ்வருடம் ஜுலை மாதம் ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி தகவல் தொழில்நுட்பம், இலத்திரனியல், சிவில் மற்றும் இயந்திர பொறியியல், உணவு விஞ்ஞானம் , விவசாயம் என்பன இந்தப் புதிய பிரிவுக்கான பாடங்களாகும்.

மாணவர்கள் இவற்றிலிருந்து இரண்டு பாடங்களையும் வேறு பிரிவிலிருந்து ஒரு பாடத்தையும் தெரிவு செய்யமுடியும்.

தொழில்நுட்ப பிரிவு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் குறைந்தபட்சம் ஒரு பாடசாலையிலாவது அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதற்கான பாடத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுவிட்டதோடு ஆசிரியர்களுக் கான பயிற் சிகளையும் வழங்கி வருவதாக அமைச்சு அறிவித்துள்ளது. (2-5)

## சர்வதேச நியமங்களை பின்பற்றுவதற்கு இலங்கைக்கு பிரி.அழுத்தம் கொடுக்கவேண்டும்

### அமை. டக்ளஸ் அலெக்சாண்டர் தெரிவிப்பு

சர்வதேச நியமங்களைப் பின்பற்றுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு பிரித்தானியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென பிரித்தானியாவின் வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் அலெக்சாண்டர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் சர்வதேச வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ள அவர், பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் அமர்வுகளை கருவிகளாகப் பயன்படுத்தி பிரித்தானியா இலங்கைக்கு அழுத்தங்களை பிரயோகிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் சகல தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற சுயாதீன சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டுமென பிரதமர் கமரூன் வலியுறுத்த வேண்டுமெனவும் இதன்போது தெரிவித்துள்ளார்.


மனித உரிமை நிலைமைகளில் மேம்பாடு ஏற்படாவிட்டால் அமர்வுகளில் பங்கேற்கப் போவதில்லை என அறிவிப்பதன் மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-5)

## வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படும்

இலங்கை பல்கலைக்கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் புதிய திட்டத்தின் மூலம் பல்கலைக் கழகங்களைப் பிரபலப்படுத்தவும் உலகத்தர கணிப்பில் உயரிய இடங்களை பிடிக்கவும் முடியும் என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டு புலமைப்பரிசில் திட்டத்தில் 30 ஆயிரம் ரூபா மாதாந்த கொடுப்பனவும் விமானக் கட்டணமும் வழங்கப்படவுள்ளது எனவும் வெளிநாட்டு மாணவர்களில் தேவையானோருக்கு ஆங்கிலப் பயிற்சி அளிக்க நிதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை பல்கலைக்கழகங்களில் உள்ள பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடநெறிகளை வெளிநாட்டு மாணவர்கள் பெரிதும் விரும்புகின்றனர் எனவும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (2-5)



சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மனின் பூங்காவன நிகழ்வின் போது...

## அரசை விட்டுவிலக நேரிடும் ஜாதிக ஹெல உறுமய எச்சரிக்கை

அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

திட்டமிட்டவாறு வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் அரசாங்கத்தை விட்டு விலக நேரிடும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி அறிவித்துள்ளது.

எவ்வாறெனினும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக தங்களது கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் சட்டங்களில் சில மாற்றங்களை ஏற்படுத்தியதன் பின்னரே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென் வலியுறுத்தியுள்ளார்.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் புலிகளால் விரட்டியடிக்கப்பட்ட சிங்கள மக்களை மீள்குடியேற்றும் நடவடிக்கைகளில் அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாக குறிப்பிட்டுள்ளார். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம் என்ற போர்வைக்குள் சதிவலை...



## அன்று கிழக்கில் நடந்தது வடக்கிலும் சாத்தியமா?

வடக்கு மாகாண சபைத்தேர்தலை வரும் செப்ரெம்பரில் நடத்தும் முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று உறுதிப்படுத்தியுள்ளார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச. புத்தாண்டுக்குப் பின்னர் கூட்டப்பட்ட முதலாவது அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா மற்றும் றிச்சட் பதியுதீனுடன் வடக்கு மாகாண சபைத் தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆராய்ந்ததாக தகவல்கள் வெளியாகியிருந்தன. கடந்த வாரம் வெலிஓயாவில் 3000 சிங்களக் குடியேற்றவாசிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்விலும், ஊடக ஆசிரியர்களுடன் நடத்திய சந்திப்பிலும் கூட செப்ரெம்பரில் தேர்தல் நடத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

செப்ரெம்பரில் தேர்தல் நடக்கும் என்றாலும், அது ஜோதிடர் குறித்துக் கொடுக்கும் நல்ல நாளில்தான் நடத்தப்படும் ஏன்றும் அவர் தெரிவித்திருந்தார். வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகள் வலியுறுத்தி வந்த ஒரு விடயத்தை, அரசாங்கம் நிறைவேற்றத் தயாராகி வருகிறது.

வடக்கில் முதல்முறையாக நடத்தப்படவுள்ள மாகாணசபைத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் நடத்தப்படுமா என்று கேள்வி எழுந்துள்ள அதேவேளை, இந்தத் தேர்தலில் போட்டி எவ்வாறு அமையப்போகிறது என்ற எதிர்பார்ப்பும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இன்றைய நிலையில், இலங்கையில் ஒன்பது மாகாண சபைகள் இருந்தாலும், வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் தான், அதியுச்ச கவனத்தைப் பெற்றதாக இருக்கும்.

சில மாதங்களுக்கு முன்னர், கிழக்கு மாகாண சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலின் போது, அதற்கு கிடைத்த சர்வதேச முக்கியத்துவத்தை விடவும் கூடுதலான முக்கியத்துவமும் கவனமும் வடக்கு மீது இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால், போர் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கில் ஒரு நிர்வாகத்தை உருவாக்குவதற்காக நடத்தப்படவுள்ள முதல் தேர்தல் இது. அதைவிட, வடக்கிலுள்ள தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு என்ன, அவர்களின் தெரிவு என்ன என்று நாடி பிடித்து அறிந்து கொள்வதற்கு பல்வேறு நாடுகளும் ஆர்வத்துடன் உள்ளன.

2009 இல் போர் முடிவுக்கு வந்த பின்னர், ஜனாதிபதி தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் என்று மூன்று தேர்தல்கள் வடக்கில் நடத்தப்பட்டுள்ளன. ஆனாலும், அவையெல்லாவற்றிற்கும் இல்லாத ஒரு முக்கியத்துவம் இந்த மாகாணசபைத் தேர்தலுக்கு இருப்பதாக கருதப்படுகிறது. சமஸ்டி ஆட்சி, தன்னாட்சி, கோரிய தமிழர்கள் வடக்கில் அதிகாரம் குறைந்த மாகாணசபைக்கான தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறார்கள் என்ற கேள்விக்கான விடை அதில் உள்ளது.

ஆளும் தரப்புக்கு ஆதரவு அளித்து, மாகாணசபைகளுக்கு இப்போதுள்ள அதிகாரங்களே போதும் என்று வெளிப்படுத்தப் போகின்றனரா?

அல்லது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவளித்து கூடுதல் அதிகாரங்கள் தேவை என்பதை மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப் போகின்றனரா?

இதில் எதைத் தமிழர்கள் விரும்புகின்றனர் என்பதை, வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுதான் பிரதிபலிக்கவுள்ளது.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டுவிட்டபோதும், அரசாங்கம் சொல்வது போன்று தமிழர்கள் தமது முன்னைய நிலையில் இருந்து எந்தளவுக்கு வி[illegible] அறியும் ஆர்வம் [illegible] இருக்கவே செய்கிறது. இந்தத் தேர்தல் வெறுமனே வடக்கிலுள்ள மக்களுக்கு ஒரு நிர்வாகத்தை அளிப்பதாக மட்டும் இருக்கப்போவதில்லை. தமிழர் நிர்வாகப்பிரச்சனை தொடர்பான வெளிநாடுகளின் நிலை என்னவென்பதை தீர்மானிக்கும் ஒன்றாகவும் அமையவுள்ளது. போர் முடிவுக்கு வந்து நான்கு ஆண்டுகளாகிவிட்ட நிலையிலும் இலங்கை தொடர்பாக, இனப்பிரச்சினை தொடர்பாக பல்வேறு நாடுகளும் பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன. சில நாடுகள் நேரடியாகவே தலையிட்டு, நிறைவேற்ற வேண்டிய விடயங்களை சுட்டிக் காட்டுகின்றன. இன்னும் சில நாடுகள், பட்டும்படாமலும், நின்று கொள்கின்றன. அவை இலங்கைக்கு சில விடயங்களை வலியுறுத்தினாலும், உள் விவகாரங்களில் தலையிட மாட்டோம் என்று ஒதுங்கி நிற்கின்றன. இன்னும் சில நாடுகள், இலங்கையில் என்ன நடந்தாலும் அதைப் பற்றி கவலைப்படவோ, அதுபற்றி கேள்வி எழுப்பவோ மாட்டோம் என்கின்றன. அவற்றிற்கு உள்ள ஒரே பிரச்சினை தமது உறவுகளையும், வர்த்தக நலன்களையும் விரிவுபடுத்திக் கொள்வதுதான்.

முதலாவது தொகுதிக்கு அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

இரண்டாவது தொகுதிக்கு இந்தியா போன்ற நாடுகளை எடுத்துக்கொள்ளலாம்.

மூன்றாவது பிரிவுக்கு சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

இலங்கை விவகாரத்தில், குறிப்பாக இனப்பிரச்சினை விவகாரத்தில்- இந்த மூன்று வகையான நிலைப்பாடுகள் உலகில் உள்ளன.

வடக்கு மாகாணசபைத் தேர்தலில் மக்கள் அளிக்கப்போகும் வாக்குகளை இந்த மூன்று வகையான நாடுகளுமே உன்னிப்பாக அவதானிக்கப் போகின்றன. அதுமட்டுமன்றி போருக்குப் பிந்திய இலங்கையுடன் தமிழர் விவகாரம் தொடர்பாக தாம் கொண்டுள்ள நிலைப்பாடு சரியானதா என்று, இந்தத் தேர்தல் முடிவுகளுடன் பொருத்திப் பார்க்கவும் இந்த நாடுகள் தயங்கப் போவதில்லை. கடந்த காலங்களில் தேர்தல் புறக்கணிப்பு என்ற ஆயுதம், தமிழர் தரப்பினால் பயன்படுத்தப்பட்ட போதிலும், அது வெளியுலகில் எதிர்மறையான [illegible] விளைவையே ஏற்படுத்தி [illegible] குறிப்பாக 2005 ஜனாதிபதித் தேர்தலில், வடக்கு கிழக்கில் வாக்களிப்பை புறக்கணிக்க விடுதலைப்புலிகள் விடுத்த அழைப்பு, பெரும் சர்ச்சையை உருவாக்கியது. அது நாட்டின் வரலாற்றையே மாற்றியமைத்து விட்டதாக அண்மையில் ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார். அந்த முடிவு விடுதலைப்புலிகளின் அழிவுக்கும் கூட ஒரு காரணியாகியது என்பதை மறுக்க முடியாது.

2008 ஆம் ஆண்டு கிழக்கில் மாகாணசபைக்கு நடத்தப்பட்ட தேர்தலை, அங்கிருந்த பாதுகாப்பற்ற சூழலைக் காரணம் காட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புறக்கணித்தது. அது கிழக்கு மக்களின் சுதந்திரமான கருத்தை வெளிப்படுத்திய தேர்தலா என்று பார்க்கப்படவில்லை. மாறாக புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட பகுதியில் ஒரு நிர்வாகத்தை நிறுவுவதில் இலங்கை அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளது என்ற கண்ணோட்டத்திலேயே வெளிநாடுகளால் நோக்கப்பட்டது.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் புறக்கணிப்பு குறித்து முக்கிய கட்சிகள் ஏதும் சிந்திக்காத நிலையிலும், சுதந்திரமான தேர்தல் என்பது சவாலான விடயமாகவே இருக்கப் போகிறது. இந்த தேர்தலில் எப்படியாவது ஆட்சியைப் பிடித்துவிட வேண்டும் என்பதற்காக ஆளும் கட்சி, அரசாங்கத்தின் எல்லா வளங்களையும் பயன்படுத்திக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. இது கடந்த காலங்களில் இலங்கைத் தேர்தல் வரலாற்றில் கிடைத்த அனுபவங்கள் தான்.

ஒன்பது மாகாணங்களிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான அரசாங்கமே அமையவேண்டும் என்பதே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின் கனவு. அதனை நிறைவேற்றுவதற்காக, வடக்கின் பிரதான அரசியல் சக்தியாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எல்லா வழிகளிலும் அரசதரப்பு அசைத்துப்பார்க்கவே முனையும். இது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை, உறுதித்தன்மை போன்றவற்றுக்குக் கூட சவாலாக அமையலாம்.

ஆனால், ஒன்றுமட்டும் உறுதியானது, இந்தத் தேர்தலில் கிழக்கைப் போன்று குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க அரசாங்கம் மேற்கொள்ளக் கூடிய எத்தகைய முயற்சிகளும், சர்வதேச அளவில் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.

-தொல்காப்பியன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங். குழு தலைவர் நியமனம்

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான குழுவின் புதிய தலைவராக டேவிட் டலி நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அவர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் ஐரோப்பிய ஒன்றியத்துக்கான தலைவராக செயற்பட்டு வருகிறார்.

முன்னதாக அவர் குரோசியாவில் ஐரோப்பிய ஆணைக்குழுவின் பணிப்பாளராக செயற்பட்டார்.

இந்நிலையில் டலி நேற்று முன்தினம் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து டலியின் நியமனம் தொடர்பான அறிவிப்பு இலங்கை அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இலங்கை அரசாங்கம் அவரின் நியமனத்தை ஏற்றுக் கொள்ளுமாக இருந்தால் இலங்கையில் தற்போது பணியாற்றும் பேனாட் சேவேஜுக்கு பதிலாக டலி கடமைகளைப் பொறுப்பேற்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பிள்ளையார் ஆலயத்தில் உண்டியல் அபகரிப்பு

(ஆனையிறவு)

பிரமந்தனாறு கல்லாறுப்பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் திருடர்களால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, மேற்குறித்த பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்துக்கு மக்கள் மறுநாள் காலை சென்று பார்த்த போதே ஆலயத் திருப்பணி உண்டியல் திருடர்களால் அபகரித்து செல்லப்பட்டமை தெரிய வந்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-3-264)

# மாணவர் கௌரவிப்பு நிகழ்வும் பரிசூதிய சீட்டிழுப்பு நிகழ்வும்

(தும்பளை)

புலோலி பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்படும் சாதனை மாணவர் கௌரவிப்பு விழாவும் பரிசூதிய சீட்டிழும்பு நிகழ்வும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைத் தலைவர் இ.பூரணச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.நந்தகுமார், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளர் ஐ.ஶ்ரீரங்கேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வின்போது கடந்த வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சாதனை நிகழ்த்திய மாணவர்களும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (அ)

# கண்டி மக்கள் இரவு நேர கார்ப் பந்தயத்தை விரும்பவில்லை

## *லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கை*

(கொழும்பு)

கண்டி மக்கள் இரவுநேர கார்ப் பந்தயத்தை நடத்த வேண்டும் என்று கோரிக்கை எதுவும் விடுக்கவில்லை.மேலும் கண்டி நகரில் இரவு நேர கார்ப் பந்தயத்தை நடத்த வேண்டாம் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த கார்ப்பந்தயத்தை நடத்துவதனால் கண்டியின் வரலாற்று பெறுமதிக்கு பாதிப்பு ஏற்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டி மக்கள் இரவு நேர கார்ப் பந்தயம் நடத்தப்பட வேண்டும் என்று ஒருபோதும் கோரிக்கை விடுக்கவில்லை.

எனவே, இந்த மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இவ்வாறானபந்தயங்களைநடத்துவதைக் காட்டிலும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெற்றுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (2)

# இளவாலையில் மனித எலும்புக்கூடு மீட்பு

இளவாலை சீனிப்பந்தல் பிரதேசத்தில் தனியார் காணியொன்றிலிருந்து எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலசலகூடம் அமைப்பதற்கான குழியொன்று வெட்டும் போதே இந்த எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-1)

# விசேட கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

தேசிய கல்வி நிறுவக கல்வித் துறையினால் நடத்தப்பட்ட விசேட கல்வி / சைகை மொழி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்து சித்தியடைந்தவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 6 ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு மகரகம தேசிய கல்வி நிறுவக பிரதான கேட்போர் கூடத்தில் கல்விமேற்பார்வைக்கு பொறுப் பான பாராளுமன்ற உறுப்பினர் மொகான்லால் கிறேரோ தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்தவர்கள் டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்வதற்காக அன்றைய தினம் குறித்த நேரத்திற்குள் வருகை தந்து மண்டபத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)




- 1260-மங்கோலியப் பேரரசின் மன்னனாக குப்ளாய் கான் முடிசூடினான்.
- 1762-ரஷ்யாவும் புரூசியாவும் அமைதி உடன்பாட்டை எட்டின.
- 1916-டொமினிக்கன் குடியரசை அமெரிக்கக் கடற்படையினர் கைப்பற்றினர்.
- 1916-தென்னாபிரிக்காவில் ஆபிரிக்கான் மொழி அதிகாரபூர்வ மொழியானது.
- 1936-எதியோப்பியாவின் அடிஸ் அபாபா நகரை இத்தாலியப் படைகள் கைப்பற்றின.
- 1940-இரண்டாம் உலகப் போர்: நாடு கடந்த நிலையில் நோர்வேயின் அரசு லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1941-எதியோப்பியாவின் மன்னார் ஹைலி செலாசி அடிஸ் அபாபா திரும்பினார். இந்நாள் அங்கு விடுதலை நாளாகக் கொண்டாடப்படுகின்றது.
- 1942-பிரித்தானியப் படையினர் மடகஸ்காரைத் தாக்கினர்.
- 1944-மகாத்மா காந்தி சிறையிலிருந்து விடுதலையாளார்.
- 1945-இரண்டாம் உலகப் போர்: ஜேர்மன் படைகள் கனடா மற்றும் பிரித்தானியப் படைகளினால் நெதர்லாந்து, டென்மார்க் நாடுகளில் இருந்து விரட்டப்பட்டனர்.
- 1945-இரண்டாம் உலகப் போர்: நாசிகளை எதிர்த்து பிராக் நகரில் கிளர்ச்சி ஆரம்பித்தது.
- 1945-இரண்டாம் உலகப் போர்: ஆஸ்திரியாவின் நாசிகளின் மோதோசென் வதைமுகாம் விடுவிக்கப்பட்டது.
- 1950-தாய்லாந்தின் ஒன்பதாவது ராமா மன்னராக பூமிபால் அடுள்யாடெ முடிசூடினார்.
- 1955-மேற்கு ஜேர்மனி முழுமையான விடுதலை அடைந்தது.
- 1961-மேர்க்குரி திட்டம்: அலன் ஷெப்பார்ட் விண்வெளிக்குச் சென்ற இரண்டாவது மனிதரும் முதலாவது அமெரிக்கரும் ஆனார்.
- 1980-ஆறு நாட்களாக தீவிரவாதிகளினால் முற்றுகையிடப்பட்டிருந்த லண்டனின் ஈரானியத் தூதரகத்தின் மீது வான்படையினர் தாக்குதலை ஆரம்பித்தனர்.
- 1981-ஐரிஷ் புரட்சியாளர் பொபி சான்ட்ஸ் சிறையில் உண்ணாவிரதமிருந்து இறந்தார்.
- 1991-ஈழத்துப் பெண் கவிஞர் சிவரமணி தனது 23 ஆம் வயதில் தற்கொலை செய்து கொண்டார்.
- 2006-சூடான் அரசுக்கும் சூடான் விடுதலை இராணுவத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.


**பிறப்புக்கள்**

- 1818-கார்ல் மார்க்ஸ், ஜேர்மனிய மெய்யியலாளர் (இ.1883)
- 1916-பி.யு.சின்னப்பா, தமிழ்த் திரைப்பட நடிகர், பாடகர் (இ.1951)
- 1916-ஜெயில் சிங், இந்தியாவின் 7 ஆவது குடியரசுத் தலைவர் (இ.1994)
- 1922-டி.ஆர்.ராஜகுமாரி, தமிழ்த் திரைப்பட நடிகை
- 1922-பி.ஏ.ராஜாமணி, நடிகை
- 1933-இரத்னசிறி விக்ரமநாயக்க, இலங்கையின் 11 ஆவது, 14 ஆவது பிரதம மந்திரி
- 1948-பிச்சுமணி கைவல்யம், தமிழ்க் கவிஞர்
- 1964-ஆறுமுகம் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர்

**இறப்புக்கள்**

- 1821-நெப்போலியன் பொனபார்ட், பிரெஞ்சு மன்னன் (பி.1769)
- 1948-புதுமைப்பித்தன், நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடி (பி.1906)
- 1957-ஆர்.மகாதேவன் (தேவன்), நகைச்சுவை எழுத்தாளர் (பி.1913)
- 1981-பொபி சான்ட்ஸ், ஐரிஷ் புரட்சியாளர் (பி.1954)
- 1991-சிவரமணி, ஈழத்துக் கவிஞை

**கார்ல் மார்க்ஸ்**



கார்ல் என்ரிச் மார்க்ஸ் 1818 ஆம் ஆண்டு மேமாதம் 5ஆம் திகதி பிறந்தார். இவர் ஜேர்மனிய மெய்யியலாளர்களுள் ஒருவராவார். அறிவியல் சார்ந்த பொதுவுடைமைக் கருத்துக்களை வகுத்தவர்களுள் முதன்மையானவர் இவர். மெய்யியலாளராக மட்டுமல்லாது அரசியல், பொருளாதார வரலாற்றியல் வல்லுநராக, தலைசிறந்த ஆய்வறிஞராக, எழுத்தாளராக, சிந்தனையாளராக, புரட்சியாளராக இவர் அறியப்படுகின்றார்.

பல்வேறு துறைகளில் ஏராளமான விவகாரங்கள் பற்றிய ஆய்வுகளையும் கருத்துக்களையும் வெளியிட்டுள்ளார். என்றாலும் இவரது ஆய்வுகளும் கருத்துக்களும் பெரும்பாலும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையில் வரலாற்றை ஆராய்வதாகவே அமைந்தன. பொதுவுடைமை கொள்கைகளின் மூலவர்களுள் ஒருவராக கார்ல் மார்க்ஸ் கருதப்படுகிறார்.

மார்க்சிச கோட்பாட்டை வகுத்த இவர் 1883 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி நுரையீரல் நோயினால் மரணமடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூறியதை செயலில் காட்டும் படி வீரவன்சவுக்கு ரவி சவால்

(கொழும்பு)

**கட்டுமான பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச நடத்திய தனது மே தின கூட்டம் அவரது பேச்சு ஆகியவை குறித்து கருத்து தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க விமல் வீரவன்ச கூறியதை செய்து காட்டுமாறு சவால் விடுத்துள்ளார்.**

மே தின கூட்டத்தில் உரையாற்றிய விமல் வீரவன்ச தனக்கு அமைச்சுப் பதவி பெரிய விடயமல்ல. அரசாங்கம் தனது மனச் சாட்சிக்கு எதிராக நடக்குமாயின் தான் எந்த நேரத்திலும் பதவி துறப்பேன் என கூறியிருந்தார்.

அமைச்சர் வீரவன்ச இதுபோல பல அறிக்கைகளை முன்னரும் விடுத்துள்ளார். ஆனால் அவர் அவற்றை செயற்படுத்தியது கிடையாது. இவர் வேலை வாய்ப்புக்களை உருவாக்கப் போவதாகவும் வாழ்க்கைச் செலவுகளை குறைக்கப்போவதாகவும் கூறியே 2005 ஆம் ஆண் டில் பதவிக்கு வந்தார்.

பான் கீ மூன் தனது நிபுணர் குழுவை கலைக்காது விடின் சாகும் வரை உண்ணா விரதம் இருக்கப்போவதாக கூறியவர் இவர் தான். ஆனால் நடந்தது ஒன்றுமில்லை என ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். அமைச்சர் வீரவன்ச நகைச்சுவையாக அறிக் கைகளை விடுவதில் வல்லவர். இவர் ஒரு போதும் அரசாங்கத்தை விட்டு விலக மாட்டார். பொது மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக பல்வேறு கூத்துக்களைக் காட்ட வேண்டிய தேவை அமைச்சர் வீரவன்சவுக்கு உண்டு. இவர் கவனத்தை ஈர்ப்பதற்காக அழும் குழந்தை போல நடிப்பார். இவர் தனது வங்கு ரோத்து அரசியலின் நிர்வாணத்தை மறைக்க தாய் நாடு என்ற பதத்தை பயன்படுத்துகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

## மலையக மக்கள் ஒன்றியத்தின் ஆடுகளம் நிகழ்வு

ஐக்கிய இராச்சியத்தில் மலையக மக்கள் ஒன்றியத்தினால் முதன்முதலாக ஆடுகளம் 2013 என்ற பெயரில் விளையாட்டு போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை குரோலி ஹசில்விக் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விளையாட்டு போட்டிகள் மட்டுமல்லாது எல்லா வயதினரையும் மகிழ்வுபடுத்தும் நிகழ் வுகளுடன் அணிக்கு ஆறுபேர் கொண்ட மென் பந்து கிரிக்கெட் போட்டியும் இடம் பெறவு ள்ளது.

இலங்கையில் உள்ள சிறார்களின் கல்வி நடவடிக்கைகளுக்கான மலையக மக்கள் ஒன்றியம் பல்வேறு தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## கருத்தடை ஊசிகளைக் கடத்திய பாக். பிரஜை மீது விசாரணை

(கொழும்பு)

உருளைக்கிழக்கு கொள்கலன்களில் மறைத்து வைத்து கருத்தடை ஊசிகளை கடத்திய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபரான பாகிஸ்தான் பிரஜையை சுங்கப் பிரிவின் விசேட புலனாய்வுக் குழு கைது செய்துள்ளது.

கோட்டை புகையிரத நிலையத்துக்கு அருகிலுள்ள மறைவிடமொன்றில் மறைந்திருந்த போது விசேடசுங்க புலனாய்வுப் பிரிவின் அத்தியட்சகரான ஜி.பீ ஞானராஜ் தலைமையிலான குழுவினர் இவரை கைது செய்தனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் குறித்த இடத்தை சுற்றிவளைத்த சுங்கப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் தற்போது மேலதிக விசாரணைக்காக அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் வாக்கு மூலம் பதிவு செய்து கொண்ட சுங்கப் புலனாய்வுப் பிரிவு மேலும் மூன்று சந்தேக நபர்களை தேடி வலை விரித்துள்ளது.

கடந்த வாரம் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டிருந்த மூன்று உருளைக்கிழங்கு கொள்கலன்களிலிருந்து 30 ஆயிரம் கருக் கலைப்பு ஊசி மருந்து போத்தல்களை சுங் கப் பிரிவினர் கைப்பற்றியிருந்தனர். குறித்த மருந்துகளின் பெறுமதி சுமார் 30 மில்லியன் என சுங்கப் பிரிவினரால் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிலையில் தப்பிச் சென்ற சந்தேக நப ரான பாகிஸ்தானியரே நேற்று முன்தினம் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சட்டவிரோத கருக்கலைப்பு மருந்து ஊசிகள் உள்நாட்டில் யாருக்காக கடத்தி வரப்பட்டன. பின்னணியில் யார் உள்ளனர் என்பது தொடர்பிலான விசாரணைகளை சுங்க அத்தியட்சர் மாலி பியசேயசேனவின் வழிநடத்தலில் விசேட சுங்க புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைக்கவில்லை

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காத காரணத்தினால் மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்பார்க்கப்பட்ட கடனுதவி கிடைக்காத காரணத்தினால் உள்நாட்டிலேயே நிதியை திரட்டும் நோக்கில் இவ்வாறு மின்சாரக் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்தியாவிற்கு மின்சாரத்தை விற்பனை செய்யவுள்ளதாக அரசாங்கம் பிரசாரம் செய்திருந்தது.

இந்த அரசாங்கம் தற்போது மிகவும் அதிகளவில் மின்சாரக்கட்டணங்களை உயர்த்தியுள்ளது.

இதனால் வறிய மற்றும் நடுத்தர மக்கள் பெருமளவு பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ளது.

மின்சாரத்தை சேமிக்குமாறு மக்களுக்கு ஆலோசனை வழங்கும் அரசாங்கம் எதிர் வரும் 15 ஆம் திகதி கண்டியில் இரவு நேர கார்ப்பந்தய போட்டிகளை நடத்தவுள்ளது.

கண்டியில் இரவு நேர கார்ப்பந்தயப் போட்டிகளை நடத்துமாறு மக்கள் எவரும் கோரவில்லை.நாட்டில் பாரியளவு வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது.

இவ்வாறான முக்கிய பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வுத் திட்டங்களையும் முன்வைக்க அரசாங்கம் தவறியுள்ளது என லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பட்டுள்ளார். (2-5)

## நாடு கடத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தியுள்ளது பிரிட்டன்

இலங்கை புகலிடக்கோரிக்கையாளர்களை நாடு கடத்தும் பணிகளை பிரித்தானியா துரிதப் படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடுகடத்தப்பட்ட விபரங்கள் வெளியிடப்படாத போதிலும் யுத்த நிறைவினைத் தொடர்ந்து கிரமமான முறையில் இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் பலவந்தமாக நாடு கடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 2009 ஆம் ஆண்டில் 504 பேரும் 2010 ஆம் ஆண்டில் 608 பேரும் 2011 ஆம் ஆண்டில் 865 பேரும் 2012 ஆம் ஆண்டு இதுவரையில் 717 பேரும் நாடு கடத்தப்பட்டுள்ளனர். 2013 ஆம் ஆண்டு இறுதியில் நாடு கடத்தப்பட்டவர்கள் தொடர்பான முழு விபரங்கள் வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2)

## நாட்டின் பொருளாதாரத்தை குற்றவாளிகளே கட்டுப்படுத்துகின்றனர்


### சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

நாட்டின் பொருளாதாரத்தை குற்றவாளிகளே கட்டுப்படுத்தி வருவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

நர்ட்டின் பொருளாதாரத்தை எவ்வாறு முன்னெடுப்பது எனத் தெரியாத, போதிய புத்தி சாதுரியமற்ற குற்றவாளிகளிடம் நாட்டின் பொருளாதாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இந்த கனவான் குற்றவாளிடமிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க வேண்டும் மற்றும் மின்சாரக் கட்டண உயர்வானது ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் அதிகாரத்தை யார் இவர்களுக்கு கொடுத்தனர் என மின்சார தேவையை சரியான முறையில் அறிந்து கொண்டு உரிய தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் பாரிய பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-5)





வலிகாமம் வலய 15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கபடிப் போட்டிகளில் சம்பியனாகிய பண்டத்தரிப்பு யசிந்தா றோ.க.த.க பாடசாலை அணியினரையும் 2 ஆம் இடத்தை பெற்ற இளவாலை கன்னியர்மட மகாவித்தியாலய அணியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோயிலில் படப்பிடிப்புக்கு தடை

பாலிவுட் நடிகர் ஷாருக்கான் நடிக்கும் 'சென்னை எக்ஸ்பிரஸ்' என்ற புதிய இந்திப் படம் ரூ.100 கோடி செலவில் தயாரிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் இந்த படத்தின் படப்பிடிப்பு நடந்தது. இது குறித்து சென்னை எக்ஸ்பிரஸ் படகுழுவினரிடம் கூறுகையில், காதல் சொல்லும் காட்சி. திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அருகே வட்டமலை முருகன் கோவிலில் ஷாருக் கான். தீபிகாபடுகோன் ஆகியோர் நடிக்கும் சில காட்சிகள் எடுக்கப்பட்டது.

தீபிகாவிடம் ஷாருக்கான் தனது காதலை கூறும் காட்சி கோவிலின் உட்புறபகுதியில்படமாக்கப்பட்டது. படப் பிடிப்பு நடத்த இந்து அறநிலையதுறையின் அனுமதி பெறாமல் கோவிலில் படப்பிடிப்பு நடத்தப்பட்டதால் அதிகாரிகள் படப்பிடிப்பை நடத்த தடை விதித்தனர்.

# ஏன் அமெரிக்காவில்...?



ஒரு வருடத்தில் பாதி நாட்கள் தான் அமெரிக்காவில் இருப்பதற்கான காரணத்தை இசைப்புயல் ஏ.ஆர். ரஹ்மான் தெரிவித்துள்ளார். இது குறித்து ரஹ்மான் செய்தியாளர்களிடம் கூறுகையில், நான் அமெரிக்காவில் செட்டிலாகப் போவதாக செய்திகள் வருகின்றன. நான் இங்கு செய்யும் வேலையைத் தான் அங்கும் செய்கிறேன். அமெரிக்காவில் எனக்கு சொந்தமாக ஒரு வீடு, ஸ்டுடியோ இருக்கிறது. அமெரிக்கா எனக்கு வசதியாக இருக்கிறது. அங்கு நான் சாலையில் சுதந்திரமாகத் திரிய லாம். சாலையோரம் இருக்கும் கடைகளில் கோப்பி சாப்பிடலாம். என்னை யாரும் தொந்தரவு செய்வதில்லை. எனக்கு அது தான் வேண்டும். அதனால் தான் ஒரு வருடத்தில் பாதி நாட்கள் அமெரிக்காவிலேயே இருக்கிறேன். மற்றபடி வேறு காரணம் எதுவும் கிடையாது. நான் மலையாளப் படத்தில் நடிக்கப் போவதாக செய்திகள் வந்துள்ளன. இருக்கின்ற வேலையைப் பார்க்கவே நேரம் இல்லை. இதில் எங்க போய் நடிக்க என்றார்.

# கோடியா... எல்லாம் சும்மா....



சமந்தா

தெலுங்கில் தற்போது கொடிகட்டிப் பறக்கும் சமந்தா, தனது சம்பளத்தை 1கோடி 75 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக எழுந்த விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார். இதுகுறித்து அவர் கூறுகையில்,

சம்பளம் விடயத்தில் எனக்கு எதிராக வதந்திகள் பரப்பப்பட்டு உள்ளன. நான் ரூ.1 கோடியே 75 இலட்சம் சம்பளம் கேட்பதாக செய்திகள் பரவியுள்ளன. இது தவறான தகவல். நான் யாரிடமும் அவ்வளவு தொகை கேட்கவில்லை. எனக்கு கூச்ச சுபாவம் உண்டு. இவ்வளவு சம்பளம் வேண்டும் என்று தயாரிப்பாளர்களிடம் நிபந்தனை விதிக்கும் அளவுக்கு தைரியம் இல்லை. சம்பளத்தை திருப்பித் தருவேன் ஆறு படங்களில் நடித்துக் கொண்டு இருக்கிறேன். இந்த படங்களின் தயாரிப்பாளர்களிடம் விசாரித்து நான் ரூ.1 கோடியே 75 இலட்சம் சம்பளம் வாங்கியதாக நிரூபித்தால் வாங்கிய சம்பளம் அனைத்தையும் திருப்பி தந்துவிட தயாராக இருக்கிறேன். நான் தமிழ், தெலுங்கில் நடித்த அநேக படங்களும் ஹிட்டாகியுள்ளது. மேலும் அரை டசின் படங்கள் கைவசம் இருக்கிறது. தெலுங்கில் நடித்த ஆட்டோ நகர் சூர்யா படத்தின் படப்பிடிப்பு முடிந்து விரைவில் ரிலீசாக உள்ளது. ரூ.1 கோடி கூட வாங்கலை என் அதிர்ஷ்டத்தால் படங்கள் நன்றாக ஓடுகின்றன. அதில் சந்தோஷம் அடைகிறேன். ஆனால் என்னுடைய சம்பளம் இன்னும் ரூ.1 கோடியை எட்டவில்லை என்றார்.

## பொன்மாலைப் பொழுதில்

# அஜித் - விஜய் சந்திப்பு


தலைவா படப்பிடிப்பிற்கு வந்து விஜய்க்கு இன்ப அதிர்ச்சி கொடுத்திருக்கிறார் அஜித். விஜய்யின் தலைவா, அஜித்தின் வலை படப்பிடிப்புகள் ஒரே நேரத்தில் மும்பையில் நடந்துகொண்டிருக்கிறன. அப்போது ஒரு பொன்மாலைப் பொழுதில் இருவரும் சந்தித்துக் கொண்ட சம்பவம் நடந்திருக்கிறது. தன்னை சந்தித்த அஜித்திடம் பேசிக்கொண்டிருந்த விஜய், தலைவாவுக்காக ஜி.வி. பிரகாஷ் இசையமைப்பில் அமைந்த பாடலைப் போட்டுக் காட்டி இருக்கிறார். அதில் ஒரு பாடலை விஜய்யே தன் சொந்தக் குரலில் பாடியிருந்தார்.

படத்தில் ஹைலைட்டாக வரும் மாஸ் பாடல் அது. அதைக் கேட்ட அஜித், மிகவும் மகிழ்ந்து போய், பாடிய விஜய்யைப் பாராட்டியதோடு, இந்த வருடத்தின் சுப்பர் ஹிட் பாடலாக இது இருக்கும் என்று விஜய்யிடம் புகழ்ந்திருக்கிறார். மனம் திறந்து அஜித் பாராட்டியதில் விஜய்யும் பெருமையில் விம்மி இருக்கிறார்.

# 3 ஆவது மொட்டை

தெலுங்கு படத்திற்காக நடிகர் சத்யராஜ் 5ஆவது முறையாக மொட்டை போட்டிருக்கிறார். 100ஆவது நாள் படத்தில் நடித்தபோது முதன் முறையாக மொட்டை போட்ட சத்யராஜ் அடுத்தடுத்து மூன்று முறை படங்களில் மொட்டை போட்டு நடித்திருக்கிறார். கடைசியாக இவர் மாறன் படத்திற்காக மொட்டை போட்டிருந்தார். அதன் பிறகு வேறு எந்த படங்களிலும் மொட்டை போட்டு நடிக்கவில்லை. படத்திற்காக அவர் முறையான குதிரையேற்றம், வாள் சண்டை போன்ற பயிற்சிகளை கற்று வருகிறார். சுமார் 150 கோடி பட்ஜெட்டில் சரித்திர படமாக இது தயாராகிறது.


# காதலை மறுத்தார்!



படம்: போங்கடா நீங்களும் உங்க காதலும்

நடிகை ஆன்ட்ரியாவும், நானும் காதலிக்கிறோம் என்று மலையாள நடிகர் பகத்பாசில் சமீபத்தில் அறிவித்திருந்தார்.

இவர் இயக்குநர் பாசிலின் மகன் ஆவார். இருவரும் அன்னயும் ரசூலும் என்ற மலையாள படத்தில் ஜோடியாக நடித்தனர். இதில் ஆன்ட்ரியாவுடன் நெருக்கம் ஏற்பட்டதாகவும் விரைவில் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்துள்ளோம் என்றும் பகத் பாசில் கூறினார். இதற்கு ஆன்ட்ரியா கண்டனம் தெரிவித்து, அவரது காதலையும் ஏற்க மறுத்து விட்டார். இருவரையும் இன்னொரு படத்திலும் ஜோடியாக நடிக்க வைக்க முயற்சி நடந்தது. அந்த படத்தில் இருந்தும் ஆன்ட்ரியா விலகிவிட்டார்.



ஆன்ட்ரியா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ராஜீவ் கொலையாளிகளை விரைந்து காப்பாற்றுங்கள்

## மன்மோகனிடம் தி.மு.க. எம்.பிக்கள் மனு




தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றைய தினம் பிரதமர் மன்மோகன்சிங்கை நேரில் சந்தித்து மனு அளித்துள்ளனர்.

அந்த மனுவில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது,

மரண தண்டனை என்பது மனிதவுரிமைகளை மறுப்பதாகும். மரண தண்டனை இந்தியா கையொப்பமிட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச மனிதவுரிமை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள வாழ்க்கை வாழ்வதற்கே என்ற உரிமையை மீறுவதாகும்.

உண்மையில் மரண தண்டனை நடைமுறையில் உள்ள உலகின் ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்று.

ஆம்னெஸ்டி இன்டர்நஷனல் அமைப்பின் தகவல்படி உலகில் 140 நாடுகள் மரண தண்டனையை ஒழித்து விட்டன. 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக வாக்களித்தன.

இதனை 2010 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெற்ற 65 ஆவது ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டம் ஏற்றுக் கொண்டது.

தமிழ்நாட்டில் தலைவர் கருணாநிதி தலைமையிலான ஆட்சியின் போது மரண தண்டனை அங்கீகரிக்கப்படவில்லை. மரண தண்டனைகள் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்ட பல நிகழ்வுகளை சுட்டிக் காட்ட முடியும்.

இம்மாதம் முதல் திகதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றில் மகேந்திரநாத் தாஸ் என்பவரது மரண தண்டனை ஆயுள்தண்டனையாகக் குறைத்து உத்தரவிடப்பட்டுள்ளது.

மகேந்திரநாத் தாஸ் மரண தண்டனை குறித்த கருணை மனு பதினொரு ஆண்டுகளுக்குப் முன் குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக் காட்டிய உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டது.


முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரது வழக்குகளையும் மகேந்திரநாத் தாஸ் வழக்கு அடிப்படையில் பரிசீலிக்க வேண்டும் என்று எங்களது தலைவர் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

22 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாழ்க்கையை கழித்து விட்ட இவர்களது தண்டனையை ஆயுள்தண்டனையாகக் குறைக்க மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி குடியரசுத் தலைவருக்கு அனுப்ப வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

மனுவைப் பெற்றுக் கொண்ட பிரதமர் மன்மோகன்சிங் நாகரிக சமுதாயத்தில் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வந்து கொண்டிருக்கிறது.

இந்தப் பிரச்சினையில் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பிறகு அரசு உரிய முடிவெடுக்கும் என்றும் கூறியதாக டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார். (அ-5)







இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அசர்பைஜான் நாட்டு வெளியுறவுத்துறை மந்திரி எல்மார் மம்மாத்யோரோவுடன் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி சல்மான் குர்ஷித் டில்லியில் சந்தித்தபோது...

# குர்ஷித்துக்கு விசா வழங்க இழுத்தடிக்கின்றது சீனா

(புதுடில்லி)

இந்திய எல்லைக்குள் ஊடுருவிய விவகாரத்தில் சீனாவின் பிடிவாதம் தொடர்வதால் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தனது சீன பயணத்தை இரத்து செய்வார் என கூறப்படுகிறது.



முன்னதாக எதிர்வரும் 9 ஆம் திகதி சல்மான் குர்ஷித் சீனா செல்ல உள்ளதாக இருந்தது.

காஷ்மீரின் லடாக் பகுதியில் உள்ள டேப்சாங் பள்ளத்தாக்கில் சீன வீரர்கள் கடந்த மாதம் ஊடுருவி முகாம் அமைத்துள்ளனர். முதலில் 10 கிலோமீற்றர் தூரம் ஊடுருவியதாக கூறப்பட்டது. தற்போது அவர்கள் 19 கிலோமீற்றர் தூரம் ஊடுருவி ஐந்தாவது கூடாரத்தை அமைத்துள்ளனர்.

இது தொடர்பாக இந்தியா தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டும் அவர்கள் இந்த இடத்தை விட்டு நகர மறுக்கின்றனர். இந்தச் சம்பவம் பாராளுமன்றில் எதிரொலித்தது. இந்திய தளபதி பிக்ரம்சிங் பிரதமர் மன்மோகன்சிங்கை சந்தித்து நிலைமையை விளக்கியுள்ளார்.

ஆனால் சீனா இதனை மறுத்தது. சீனா இராணுவத்தினர் தங்களது எல்லைக்குள்தான் இருப்பதாக கூறி வந்தனர். மேலும் இதனால் இந்தியாவுடனான உறவு பாதிக்கப்படாது எனவும் கூறியிருந்தது.

சீன ஊடுருவல் தொடர்பாக இரு நாட்டு இராணுவ அதிகாரிகளும் பலமுறை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினர். இதில் எந்தவித முடிவும் எடுக்கப்படாமல் தோல்வியில் முடிந்தது.

இந்நிலையில் சீன இராணுவத்தினரின் ஊடுருவல் குறித்து விவாதிப்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் வரும் 9 ஆம் திகதி சீனா செல்லத் திட்டமிட்டிருந்தார்.

இதற்கு எதிர்க்கட்சிகள் பலத்த எதிர்ப்பு தெரிவித்தன. சல்மான் தனது சீன பயணத்தை இரத்து செய்ய வேண்டும் என பா.ஜ. உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின.


இந்நிலையில் சல்மானுக்கு விசா வழங்காமல் சீனா இழுத்தடித்து வருவதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இதனையடுத்து சல்மான் குர்ஷித்தின் சீனப் பயணம் தொடர்பாக மத்திய அரசு இரு மனநிலையில் இருப்பதாகவும் தகவல் வெளியாகியிருந்தது.

ஆனால் எல்லை விவகாரத்தில் சீனா தனது பிடிவாதத்தை தொடர்வதால் சல்மான் குர்ஷித் தனது பயணத்தை இரத்து செய்வார் என புதிய தகவல்கள் வெளியாகியுள்ளது.

எல்லை விவகாரம் தொடர்பாக சீனாவுடன் நடந்து வரும் பேச்சு வார்த்தை மத்திய அரசுக்கு திருப்தி தரவில்லை எனவும் சல்மான் கூறியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ-2)

# ஏலத்திற்கு வருகின்றன காந்தியின் உடைமைகள்



தேசபிதா மகாத்மா காந்தி பயன்படுத்திய 50 நினைவு பொருட்கள் லண்டனில் உள்ள முல்லோக் மையத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஏலம் விடப்படவுள்ளது.

இவற்றில் காந்தியின் தோல் செருப்புகள் மிகவும் விரும்பி அணியும் மேலாடை, பெட்சீற், கோப்பை, கரண்டி, முள்கரண்டி மற்றும் கப் உள்ளிட்டவையும் அடங்கும். இவை தவிர காந்தியின் இரத்தத் துளியும் கூட இந்த ஏலத்தில் விடப்படவுள்ளன.

மேலும் கடந்த 1924 ஆம் ஆண்டு சுமதி முகர்ஜி என்பவருக்கு காந்தி இரத்ததானம் செய்தார். அப்பொழுது அவரது இரத்தம் ஒரு கண்ணாடி சிலேடில் எடுத்து மைக்ரோஸ்கோப்பில் வைத்து பரிசோதிக்கப்பட்டது.

அந்த இரத்த துளிகளே தற்பொழுது ஏலத்துக்கு வரவுள்ளன. அது மட்டும் 10 இலட்சத்துக்கு ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-2)

## பத்திரிகை சுதந்திரத்தில் சக்தி வாய்ந்த நாடு இந்தியா

உலக அளவில் பத்திரிகை சுதந்திரத்தில் ஆசியாவில் முக்கிய சக்தி வாய்ந்தநாடான இந்தியா 140 ஆவது இடத்திலும்மற்றுமொருஆசியநாடான சீனா 173 ஆவது இடத்திலும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2002 ஆம் ஆண்டில் இந்தியா மிகக் குறைந்த தரவரிசையிலேயே இருந்துள்ளதாக 2013 உலக பத்திரிகை சுதந்திர புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

2012 இல் இந்தியவில் 4 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் காஷ்மீர் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் அதிகரித்துள்ளதாகவும் அந்த புள்ளி விபரம் தெரிவித்துள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசமான நெருக்கடிக்குள் தமிழர்கள் சிக்கியுள்ளனர்

## *சிறிதரன் எம்.பி தெரிவிப்பு*

தமிழர்கள் ஆயுதம் தூக்கிப்போராடிய காலத்தைவிட மிகத் தற்போது மிக மோசமான காலத்திற்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

நிலப்பறிப்பு, மொழிபறிப்பு, கலாசார சிதைப்பு போன்றவை தமிழர் பிரதேசங்களில் பேரினவாதிகளினால் அரங்கேற்றப்படும் வேளையில் ஒரு இனத்தின் மிகப்பெரும் பலமான இளைஞர் சமூகத்தினை சீரழிக்கும் திட்டமும் தற்போது தீட்டப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கு நாம் தயங்குகின்றோம். உளரீதியாக எம்மை இராணுவம் பயம் காட்டி வைத்திருக்கின்றது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் நாம் அவர்களின் மிரட்டல்களுக்குப் பயந்து குரல் கொடுக்கத்தயங்கினால் எமது இழப்புக்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி வியாழக்கிழமை இராணுவத்தினரின் காணி அபகரிப்பு தொடர்பில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பிரதேச, நகர சபைகள் உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள், உறுப்பினர்களுடான கலந்துரையாடல்களின் போது கலந்துரையாடலுக்கு தலைமை வகித்த கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் மேமாத நாட்கள் பல உயிரிழப்புக்களையும் சொத்திழப்புக்களையும் வன்முறைச் சம்பவங்களையும் உள்ளடக்கிய வரலாற்றுப்பதிவுகளாக நினைவுகூர வேண்டியுள்ளன.

மக்களையும் தேசத்தையும் இழந்தும்கூட நாம் நிம்மதியாக வாழமுடியவில்லை.

யுத்தம் நிறைவடைந்தும் நான்கு வருடங்கள் ஆகின்ற நிலையிலும் எதனையும் எமக்கு வழங்காத நிலையில் நாம் வாழும் நிலங்கள் கூட தற்போது பறிக்கப்பட்டு வருகின்றன.

எமது தனித்துவங்கள் அனைத்தும் சிதைக்கப்பட்டு வருகின்றன. மேலும் தமிழர்கள் தவறானவர்கள் என்று நிரூபிக்க தமிழர் தாயகங்களில் குற்றங்கள் அதிகம் இடம் பெறுவதாக பொய்ப்பிரசாரம் செய்யப் படுகின்றது.

இதற்குச் சாதகமாக இங்கு தந்தை தனது மகளை சீரழிக்கும் கொடூரம், பல்கலை மாணவ, மாணவிகள் தற்கொலை மரணங்கள் என்பவை அதிகரித்துச் கொண்டே செல்கின்றன.

இவையெல்லாம் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்புதான் தலைதூக்கியுள்ளன என்பதையும் எமக்குப் பின்பு ஏதோ ஒரு மர்மம் உள்ளது என்பதையும் நாம் உணர வேண்டும்.

எமது இனக்கட்டமைப்பு சீரழிக்கப்படுவதை நாம் அறிதல்வேண்டும். நாம் மக்களுக்காகத்தான் அரசியலில் இறங்கியுள்ளோம். ஆகவே ஏனையவர்களுக்காக பயந்து கொண்டு எமது குடும்பங்கள் சீரழிக்கப்படும் போது நாம் வாய்மூடி மௌனமாக இருக்க முடியாது.

பிரதேச, நகரசபை உறுப்பினர்கள் , உள்ளூராட்சி உறுப்பினர்கள் அனைவரும் மக்களின் உரிமைகளுக்காக இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வதோடு ஒருவர் ஐந்து பேரையாவது அழைத்து வந்து பங்குபற்றவேண்டும்.

எமக்குள் ஒற்றுமை அவசியம். எம்மை நாம் புரிந்துகொள்ளாவிட்டால் அந்நியப்பட்டு அஸ்தமித்துப் போய்விடுவோம். வடக்கில் அபிவிருத்தியை இராணுவம் செய்ய முடியாது. நாம் தான் அபிவிருத்தி பற்றி தீர்மானிக்கவேண்டும் என்றார் அவர். (அ-4)

# கண்டாவளை ப்குதிக்கு நூலகங்கள் வேண்டும்

கண்டாவளை பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் ஒரே ஒரு நூலகம் மட்டுமே இயங்கி வருவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் 18 கிராமங்கள் உள்ள போதும் முரசுமோட்டை பகுதியில் மட்டுமே ஒரு நூலகம் இயங்கி வருகின்றது.

இதனால் தூர இடங்களில் உள்ள மாணவர்கள், பொதுமக்கள் புத்தகங்களை பெறுவதற்கும் பத்திரிகைகளை வாசிப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

ஆகவே மேற்குறித்த பிரதேச சபைக் குட்பட்ட கிராமங்களில் நூலகம் அமைத்து வாசிப்புத்திறனை வளர்க்க இத்துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டுமென்பதே அப்பகுதி மக்களின் வேண்டுகோளாகும். (அ-263)

# பொ.சு.பரிசோதகர் விண்ணப்ப திகதி நீடிப்பு

2013 ஆம் ஆண்டு வடமாகாண சுகாதார அமைச்சின் கீழ் பொது சுகாதார பரிசோதகர் பயிற்சிக்காக பயிலுநர்களை இணைத்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சுகாதார அமைச்சு எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்க முடிவு செய்துள்ளதாக வடமாகாண சுகாதார அமைச்சின் செயலா ளர் இ.ரவீந்திரன் அறிவித்துள்ளார். (அ-2)

## *சிறிதரன் எம்.பி. மீது மீண்டும் விசாரணை*

# சர்வதேச பாராளுமன்றத்திடம் முறையிடுவோம்-மாவை எம்.பி

காணி அபகரிப்புக்கு எதிராக குரல் கொடுத்ததை பின்னணியாகக் கொண்டு யாழ்.மா வட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மீண்டும் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருக்கும் நிலையில் சிறிதரனைத் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தி வருவதைக் கண்டித்து சர்வதேச பாராளுமன்ற தலைமைக் கூட்டமைப்பிடம் முறையிடவுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுத் துணைத்தலைவர் மாவை. எஸ்.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மீண்டும் விசாரணைஎன்ற பெயரில் அரசின் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். எந்த விசாரணைக்கும் அவரோ, நாமோ அஞ்சி ஒளிந்து கொள்ளத்தேவையில்லை.

என்றாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினரை நாளும் பொழுதும் விசாரணை என்ற பெயரில் அழைப்பதானது ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் கடமையைச் செய்வதைத் தடுப்பதற்கு ஒப்பானதாகும். பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு மனிதர் என்ற முறையில் தொடர்ச்சியான மனஉளைச்சலை ஏற்படுத்துவது மட்டுமல்ல அவரையும் ஜனநாயக ரீதியில் அவரைத் தெரிவு செய்த மக்களின் ஜனநாயக உரிமைகளையும்- ஜனநாயக அடிப்படை உரிமைகளையும் மீறும் செயலாகும்.

அரசின் உளவுத்துறை மக்களை மட்டுமல்ல ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களது கடமையைச் செய்வதைத் தடுப்பதற்கு பயன்படுகிறதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

கிளிநொச்சியில் மட்டுமல்ல வடக்கு கிழக்கு முழுவதும் காணிச்சட்ட திட்டங்களுக்கு விரோதமாகவும் ஜனநாயக அடிப்படை உரிமை சட்டதிட்டங்களுக்கு மாறாகவும் மக்களின் காணிகளை பட்டவர்த்தனமாக பகற் கொள்ளை போல் அபகரித்து வருவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய அந்தக்காணி உரித்துள்ளவர்களுக்கும் அவர்களைப் பிரதிநித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் உரித்தான பொறுப்பும் கடப்பாடுமாகும்.

அந்த உரிமையில் உளவுத்துறையினர் தலையிடுவது என்ன நியாயம். இதற்குக்கட்டளையிட்டது யார். இச்செயலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

இத்தகைய செயலை கண்டித்து நாம் எதிர்வரும் பாராளுமன்றத்தில் குரலெழுப்புவோம். சர்வதேச பாராளுமன்றத் தலைமைக் கூட்டமைப்பிடம் முறையிடவுள்ளோம். சர்வதேச மனிதஉரிமைப் பேரவைக்கும் அறிவிக்கவுள்ளோம் என குறிப்பிட்டுள்ளார். (அ-5)

# மின்சார தட்டுப்பாட்டை நீக்குவதற்கு நீர்மின் நிலையம் நிர்மாணிக்கப்படும்

(கொழும்பு)

மின்சார தட்டுப்பாட்டை தவிர்க்கும் முக்கிய திட்டமான தேசிய மின்விநியோக இணைப்பிற்கு 35 மெகாவோட் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் ப்ரோட்லண்டஸ் நீர்மின் உற்பத்தி நிலையம் ஒன்றை உடனடியாக நிர்மாணிக்கவுள்ளதாக மின்வலு,எரிசக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்துள்ளார்.

'சீன நிதியுதவியுடன் 82 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள மேற்படி மின் உற்பத்தி நிலையத்துக்கான பிரதேசத்தை நேற்று முன்தினம் பார்வையிட்டுள்ள அமைச்சர், இந்த மின்சார உற்பத்தி நிலையத்துக்கான நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மஹிந்த சிந்தனை அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ள நீர் மின் உற்பத்தி நிலையம், களனி கங்கை சுற்றாடலில் நிர்மாணிக்கப்படும் கடைசி மின் உற்பத்தி நிலையமாக அமைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இப்பிரதேசத்தில் மின் உற்பத்தி நிலைய நிர்மாண நடவடிக்கை காரணமாக இடம்பெயரும் 48 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு பொருத்தமான காணிகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார்.

இந்நீர் மின் திட்டத்திற்கென 114 மீற்றர் நீளமும் 24 மீற்றர் உயரமும் கொண்ட நீர் வாய்க்கால் நிர்மாணிக்கப்பட்டு 3.5 கிலோ மீற்றர் நீளமான சுரங்க வழியினூடாக நீர் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதுடன் 82 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் மேற்படி நீர் மின் உற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப் படவுள்ளது.

இதற்காக சீன அரசாங்கம் கடனாக 85 வீத நிதியையும் தேசிய ரீதியில் ஹற்றன் நஷனல் வங்கி 15 வீத நிதியையும் வழங்கவுள்ளது. சீன கடனுதவிக்கான உடன் படிக்கை யொன்று சீன ஐ.சி.பி.ஏ வங்கியுடன் கைச்சாத்திடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (அ-5)

# பிரதேச வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை

முல்லைத்தீவு பிரதேச வைத்திய சாலையில் வைத்தியர் போதாமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த வைத்தியசாலை பல கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள போதும் ஒரு வைத்தியர் மட்டுமே இங்கு சேவையில் அமர்த்தப்பட்டுள்ளமையால் நோயாளர்கள் பல மணி நேரம் வரை காத்திருக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கிளினிக் இடம் பெறும் நாட்களில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் வைத்தியரைச்சந்திப்பதற்குமேலும்பலமணிநேரங்கள் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் இதனால் மேலும் நோயாளர் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வைத்தியசாலைக்கு 10 கிலோ மீற்றர் தொலைவில் இருந்தும் நோயாளர் வருகை தரும் நிலையில் வைத்தியர் பற்றாக்குறையால் மக்கள் பல அசௌகரியங்களை எதிர் நோக்குவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.எனவே நோயாளர்களின் நலன் கருதி இவ் வைத்தியசாலைக்கு மேலும் வைத்தியர்களை சேவையில் அமர்த்த உரியவர்கள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-5)




வலிகாமம் வலய பாடசாலை அணிகளுக்கிடையிலான 15 வயது க் குட்பட்ட ஆண்களிற்கான கபடிப் போட்டியில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்து கொண்ட ஹென்றியரசர் கல்லூரி அணியினரை படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வின்சென்ட் சர்ச்சின் கார் ஏலத்துக்கு வந்தது




பிரிட்டன் முன்னாள் பிரதமர் வின்சென்ட் சர்ச்சில் பயன்படுத்திய கார் ஏலத்திற்கு வந்தது. இதை ஜேர்மன் நாட்டை சேர்ந்த தொழிலாதிபர்3.32 கோடி விலை கொடுத்து வாங்கியுள்ளார்.இக் காரை வாங்கியதன் மூலம் தான் மிகுந்த பெருமை அடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏலம் விடப்பட்ட இந்தக் காரை சர்ச்சில் கடந்த 1944 தொடக்கம் 49 ஆம் ஆண்டுகளில் பயன்படுத்தினார்.சிறிய வேலைப்பாடுகளால் புதுப்பிக்கப் பட்ட இந்தக் கார் இன்னும் பழைய நிலையில் கம்பீரமாக காட்சி அளிக்கின் றது. (அ-2)

# எம்.ஜி.ஆரின் பாடல்களுடன் தேர்தல் பிரச்சார பணி



(கோலாபம்பூர்)

மலேசியாவில், இன்று பாராளு மன்ற தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் ஆளும் பாரி சான் நஷனல் கூட்டணியும், எதிர்க் கட்சிகளின் கூட் டணியும் மோதுகின்றன.

இவ்வாக்குப்பதிவு நடைபெறு வதை யொட்டி அங்கு தீவிர தேர்தல் பிரசாரம் நடத்துவதற்கு நிலையில் வாக்கா ளர்களை கவர அரசியல் கட்சிகள் பல்வேறு உத்திகளை கையாண்டு வரு கின்றன.

ஆளும் பாரிசன் நுஷனல் கூட்டணியில் மலாய் கட்சி, மலேசியன் சைனீஸ் அமைப்பு, மலேசியன் இந்தியன் காங்கிரஸ் உள்ளிட்ட கட் சிகள் இடம் பெற்றுள்ளன.

மலேசியாவில் இந்தியர்கள் அதிக அளவில் உள்ளனர். அவர்களில் தமிழர்கள் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். எனவே அவர்களைக் கவரந்து வாக்குகளை பெற ஆளும் கட்சி கூட்டணி தமிழக முன்னாள் முதல் அமைச்சர் எம். ஜி.ஆரின் சினிமாப் பிரசாரம் செய்து வருகின்றது.

இது வாக்களர்களைப் பெரிதும் க்வர்ந்துள்ளது.

எம்.ஜி.ஆர் மறைந்து சுமார் பல வருடங்கள் ஆகிவிட்டன.தமிழகம் மட் டுமின்றி மலேசியவிலும் இன்னும் அவரது புகழ் மங்கவில்லை. (அ-5)




# 80 வயதை எட்டிய இளைஞர்கள் எவரெஸ்ட் சிகரம் நோக்கி பயணம்



இமயமலையின் எவரெஸ்ட் சிக ரத்தை 1953 ஆம் ஆண்டு எட்ம ண்ட் ஹில்லாரியும் டென்சிங் நார் கேயும் அடைந்து சாதனை புரிந்த பின் கிட்டத்தட்ட 4 ஆயிரம் பேருக்கு மேல் அந்த சிகரத்தை அடைந்து ள்ளனர்.என்றாலும் 80 ஆவது வயதை தொட்டுள்ள இரண்டு முது பெரும் இளைஞர்களும் இந்தச் சாதனையை செய்ய தற்போது களத்தில் இறங்கியுள்ளனர்.

நேபாள நாட்டைச் சேர்ந்த 81 வயதான மின் பகதூர் செர்ச்சன் கடந்த 2008 ஆம் ஆண்டில் எவரெஸ்டை அடைந்து அந்த சிகரத்தை அடைந்த அதிக வயதானவர் என்ற பெருமையைப் பெற்றார். தற்போது மீண்டும் நேற்று முன்தினம் எவரெஸ்ட் சிகரத்தை நோக்கி மலையேற ஆரம்பித் துள்ளார்.சென்ற வருடமே தான் இதனைச் செய்ய விரும்பியதாகவும் ஆனால், அரசின் அனுமதி தனக்குக் கிட்டவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.இம்முறை வெற்றியடையாமல் போனால் அதற்குத் தனது உடல்நிலை காரணமாக இருக்கும் என்றும் இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த 80 வயதான யுச்சிரோ மிராமருத்துவரான தனது 44 வயது மகன் கவ்தா உடன் இந்தச் சாதனை முயற்சியில் இறங்கியுள்ளார். இது அவருக்க மூன்றாவது முயற்சியாகும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு விபத்தில் இடுப்பு எலும்பு உடைந்தது. அதற்கு சிகிச்சை பெற்று பின் குணமானார். ஜனவரி மாதம் இதய அறுவை சிகிச்சை செய்துகொண்டுள்ளார். தான் நல்ல உடல்நலமுடன் இருப்பதாகவும் தன்னால் இந்த சாதனையைப் புரிய முடியும் என்றும் தன்னம்பிக்கையுடன் இந்த 80 வயது இளைஞர் தெரிவித்துள்ளார். (அ-5)

# துருக்கியில் அணுமின் நிலையம் அமைக்க ஜப்பானுடன் ஒப்பந்தம்



(அங்காரா)

துருக்கியின் கருங்கடல் பகுதி யில் ஜப்பான் அரசின் உதவியு டன் ஒரு அணுமின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தத்தில் நேற்று முன்தினம் இரு நாடுகளும் கையொப்பமிட்டுள்ளன.

22 பில்லியன் டொலர் மதிப் புள்ள இந்த ஒப்பந்தம் நீண்ட நாட் களாக பேச்சுவார்த்தையில் இருந்து வந்துள்ளது.

மேலும் 2011 ஆம் ஆண்டு ஜப்பானின் புகுஷிமா மின் நிலைய பிரச்சினைகளில் இருந்து மீண்ட ஜப்பானுக்கு இது மைல்கல்லாக அமையும் என தெரிவிக்கப்படும் நிலையில் துருக்கியின் பிரதமர் ரிசெப் தையிப் எர்டோகன், இரு நாடுகளுக்கும் இடையேயான வர்த் தக நல்லுறவில் இந்த ஒப்பந்தம் ஒரு முக்கிய முயற்சியாகும் என தெரிவித்துள்ளார்.

இத் தலைமுறையின் மோசமாக அனுபவித்ததாக கருதப்பட்ட புகுஷிமா அணுமின் நிலைய விபத் திற்குப் பின் ஜப்பானும் பிரான்சும் இணைந்து கடற்பகுதியில் அமைக்க இருக்கும் துருக்கியின் இரண்டா வது அணுமின்நிலையம் இதுவா கும்.

ஜப்பானின் பேரழிவு குறித்த விமர் சனம் எழுந்த போதிலும் துருக்கி பிரதமர் எர்டோகன் இந்த முடிவை எடுத்துள்ளார். புகுஷிமாவில் நடந்த விடயங்கள் அனைவரையும் வருத் தத்தில் ஆழ்த்தியது. ஆனால் புதிய தொழில்நுட்பங்களுடன் தற்போது வெற்றிகரமான நடைமுறைகள் செயற்படுத்தப்படும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஐக்கிய அரபுக் குடியரசுடன் அணு ஒப்பந்தம் ஏற்படுத்திய மறுநாள் துருக்கியுடனான இந்த ஒப்பந்த மும் ஜப்பானுக்கு கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் தனது அனுபவத்தை யும் அழிவுகளில் இருந்து தான் கற் றுக்கொண்ட பாடங்களையும் புதிய அணுமின்நிலையத்தின் வெற்றி கரமான வளர்ச்சிக்கு உபயோகப டுத்திக் கொள்ளும் என்று ஜப்பா னிய பிரதமர் ஷிண்ட்சோ அபே தெரிவித்துள்ளார். (2)

# வியட்நாமின் குழந்தைகளை மீள ஒப்படைத்தது சீனா

வியட்நாமில் இருந்து கடத்தி வர ப்பட்ட 10 குழந்தைகள் சீன அரசால் மீட்கப்பட்டு மீண்டும் வியட்நாம் வசம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்ச்சி நேற்று முன்தினம் இரு அரசு அதிகாரிகளும் ஒன்று கூடிய இடத்தில் நடைபெற்றதாக சீனாவின் பொதுமக்கள் பாதுகா ப்புத்துறை அமைச்சகம் தெரிவித் துள்ளது.

நாடு விட்டு நாடு கடத்தப்படுவது பற்றி அறிந்த பின் கடந்த 2011 ஆம் ஆண்டு இந்தக் குழந்தைகள் காப்பாற்றப்பட்டதாகக் கூறப்படு கின்றது. அவர்கள் காப்பாற்ற ப்படும் போது பிறந்து பத்து நாட் களே ஆன குழந்தையில் இருந்து 7 மாதக் குழந்தைகள் வரை இருந் தார்கள். இதுதொடர்பாக வியட்நாம் நாட்டவர் உட்பட 43 பேர் சந்தேக த்தின் பேரில் கைது செய்யப்பட்டுள் ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டிலி ருந்து இதுவரை 41 குழந்தைக ளும் 804 வியட்நாமியப் பெண்களும் திரு ப்பி அனுப்பப்ட்டுள்ளதாக சீன அமைச்சகம் தெரிவித்துள்ளது. (அ-2)

# உலகின் முதல் சூரிய சக்தி விமானம்

அமெரிக்காவில் வாழும் சுவிட்சர் லாந்து நாட்டு விமானிகள் இருவர் சூரிய சக்தியினால் இயங்கும் ஒரு விமானத்தை வடிவமைத்துள்ளனர்.

10 வருட கடின உழைப்பிற்குப் பின் இந்த விமானத்தை வடிவமை த்துள்ளதாக ஆண்ட்ரே போர்ச் பெர்க் பெட்ராண்ட் பிக்கார்ட் என்ற அந்த இரு விமானிகளும் தெரி வித்தனர்.

சூரிய ஒளியில் இருந்து கிடை க்கும் சக்தியினால் இந்த விமானம் இயக்கப்படுவதால் இதற்கு எரிபொருள் தேவையில்லை.

இந்த விமானம் நேற்று முன்தி னம் சான் பிரான்சிஸ்கோ நகரின் தெற்கே உள்ள மொப்பெட் இரா ணுவ தளத்தில் இருந்து தனது முதல் பயணத்தை தொடங்கியது.

இவ்விமானம் கலிபோர்னியா , டல்லாஸ், வோஷிங்டன் ஆகிய மாகாணங்கள் வழியாக நாடு முழுவதும் பறக்க உள்ளது.

தட்பவெப்பம் சரியாக இருந்தால் விமானம் இந்தப் பயணத்தை 2 மாதகாலத்தில் நிறைவு செய்யும் என்று விமானம் வடிவமைப் பாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

# பறக்கும் ரோபோ கண்டுபிடிப்பு

மிக சிறிய பூச்சி போன்று பறக் கும் ரோபோவை அமெரிக்க நிபு ணர்கள் தயாரித்துள்ளனர்.

ஹார்டுவேர்டு என்ஜினியரிங் கல் லூரிகளைச் சேர்ந்த நிபுணர்கள் கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக கடுமையாக உழைத்து இதை உரு வாக்கியுள்ளனர்.

பொதுவாக ரோபோக்கள் எலெக் ட்ரோ மேக்னடிக் மோட்டார்கள் மூலம் இயக்கப்படும். ஆனால் மிக சிறிய அளவிலான பறக்கும் ரோபோ வுக்கு அதற்கு தகுந்தார் போன்ற மேக்னடிக் மோட்டார் தயாரித்து பொரு த்தினர். மேலும் பூச்சி போன்று பறப்பதற்கு ரோபோவுக்கு மிகவும் மெல்லிய செயற்கை இறக்கைகள் பொருத்தப்பட்டன.

இந்தப் பறக்கும் ரோபோ இயக்கி சோதனை ஒட்டம் நடத்தப்பட்டது. அப்போது நல்ல முறையில் பறந்து சாதனை படைத்தது. (அ-2)



சிங்கப்பூரிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள சீன வெளியுற வுத்துறை அமைச்சர் வாங் யி சிங்கப்பூரில் பிரதமர் லீ ஷியன் லியாங்கை சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் எதை உறுதியாக நினைக்கிறானோ அதுவாகவே அவன் மாறிவிடுவான்.
- புனித பைபிள்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## இராப்பொழுதில் குதிரைக்குக் காவல் இருந்தவன் வானத்து நட்சத்திரத்தை கணக்கெடுக்கலாமோ!

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிரிட்டனில் நடந்த தேர்தலில் வின்சன் சேர்ச்சில் தோற்றுப் போனார். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் வெற்றிக்குக் காரணமாக இருந்த வின்சன் சேர்ச்சில் தேர்தலில் தோற்றதும் பிரிட்டனிலுள்ள பத்திரிகைகளில் ஒரு பகுதி,

இந்த உலகில் நன்றி மறந்தவர்கள் பிரிட்டன் மக்கள் எனக் கடுமையாகச் சாடின. இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனின் பெயரையும் புகழையும் காப்பாற்றிய வின்சன் சேர்ச்சிலுக்கு பிரிட்டன் மக்கள் வாக்களிக்காதது நன்றிமறந்த செயல் என்றும் அவை குறிப்பிட்டன.

அதேநேரம் பிரிட்டனிலுள்ள பத்திரிகைகளில் மறு பகுதி வின்சன் சேர்ச்சிலுக்கு வாக்களிக்காததன் மூலம், தாம் மிகவும் புத்திசாலிகள் என்பதை பிரிட்டன் மக்கள் வெளிப் படுத்தியுள்ளனர் எனப் புகழாரம் சூட்டின.

போர் விருப்பும், போர் வெறியும் கொண்ட வின்சன் சேர்ச்சிலை பிரித்தானிய மக்கள் மீண்டும் தமது பிரதமராக்கினால், அவர் மீளவும் போரைத்தான் விரும்புவார்.

எனவே இரண்டாம் உலகப் போர் முடிபுற்ற பின்னர் பிரித்தானிய மக்கள் அமைதியாகவும் சமாதானமாகவும் வாழ விரும்பினர். இதன் காரணமாகப் போர் விருப்புக்கொண்ட சேர்ச்சிலை மக்கள் ஒதுக்கினர் என அந்தப் பத்திரிகைகள் வியாக்கியானப்படுத்தின.

இந் நிலைமை தொடர்பில் இலங்கை குறித்துச் சிந்தித்தால், பல கருத்துக்கள் வெளிப்படலாம். அதுபற்றிய கருத்துக்களை முன்வைத்து குந்தகத்தை ஏற்படுத்த விரும்பவில்லை.

மாறாகப் போருக்குப் பின்பான, வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் மீள் எழுகை குறித்து நாங்கள் யாரேனும் சிந்தித்தோமா என்பது குறித்து ஒருகணம் நிதானிப்பது சாலச் சிறப்புடையது.

இன்று வடபுலத்தில் இருக்கக் கூடிய தமிழ் வர்த்தகர்கள் பொருளாதார ரீதியில் பெரும் பாதிப்பைச் சந்தித்து வருகின்றனர்.

இத் துர்ப்பாக்கிய நிலைகுறித்து ஆராய்ந்தால்; முகாமைத்துவம், தலைமைத்துவம், நிதி முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், பொது சனத் தொடர்பு, தீர்மானம் எடுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் உள்ள தாமதம் போன்ற சிக்கல்களே இவர்களின் விழுக்காட்டிற்கான காரணங்கள் எனக் கண்டறிய முடியும்.

போர்ச் சூழலில் அதி உச்ச லாபத்தில் வியாபாரம் நடத்தியவர்கள் சாதாரண இலாபத்தின் போது தலை கீழாக விழுகின்ற பரிதாபத்தைச் சந்திக்க நேரிடுகிறது.

போர் முடிபுற்றவுடன் அதிரடி நடவடிக்கையாக முகாமைத்துவ அறிவியல் எங்கள் வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்டிருந்தால் அவர்கள் நிச்சயம் தங்களைப் பாதுகாத்திருப்பர்.

என்ன செய்வது! இராப்பொழுதில் காவல் செய்வதற்காக வானத்தின் நட்சத்திரங்களை கணக்கெடுக்க, கட்டியிருந்த குதிரைகள் களவாடப்பட்டது போன்ற நிலைமையில் தான் எங்கள் இருப்பு உள்ளது. இது தான் எங்களின் பெருங்கேடு.

# அசாத் சாலியை விடுவிக்கும்வரை தொடர் போராட்டத்திற்குத் திட்டம்

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அசாத் சாலியை கைது செய்தமைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ள பொது எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் அவரை விடுதலை செய்யும் வரை தொடர் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

அசாத் சாலியை கைது செய்த மைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொது எதிர்க்கட்சிகள் நேற்று நண்பகல் கொழும்பு ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கப் பணிமனையில் ஏற்பாடு செய்திருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தமது எதிர்ப்பை வெளியிட்டன.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கருத்துத் தெரிவிக்கையில் அசாத் சாலியை கைது செய்ததன் மூலம் இந்த அரசு நீதியாக செயற்படவில்லை என நிரூபித்து விட்டது.

அவர் அரசு செய்கின்ற மோசமான செயல்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார் என்ற ஒரே காரணத்துக்காக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார். (எ-11)



## விபத்துக்குள்ளானவர் சிகிச்சை பலனின்றி பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள்-துவிச்சக்கர வண்டி மோதிய விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.


சம்பவம் குறித்து தெரியவருவது, கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி தேவையின் நிமித்தம் அரைக்கும் ஆலைக்கு துவிச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த நபருடன் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் கந்தரோடை 10ஆம் கட்டைப்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் தலையில் படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தில் சுன்னாகம் கந்தரோடை கல்லூரி வீதியை சேர்ந்த செல்லப்பா தியாகராஜா (வயது 78) என்பவரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவராவார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமாரினால் மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-3,6)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



### கண்டேன்

நில்லாத நீர்சடைமேல் வைத்த நிமலனை
நினைக்கு மடியவர் மனக்கோயில் கொண்டானை
எல்லாமு மல்லவு மாயிருப் பானை
என்னா ரமுதினை எளிவந்த பிரானை
கொல்லானை யின்னுரி போர்த்துகந் தானைக்
சுடலிற் பரியெல்லாம் நரியாக்கி னானை
செல்லார் வரைகளும் அருவியும் பொழில்களும்
தேங்கும் இலங்கை மாநக ரானை

# இறைவனோடு நல்லுறவு கொள்வோம்; உலகம் தரமுடியாத அமைதியை பெற்றுக்கொள்வோம்

இயேசு "அமைதியை உங்களுக்கு விட்டுச்செல்கிறேன் என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத்தரும் அமைதி உலகம் தரும் அமைதிபோன்றது அல்ல" எனக்கூறும் வேதாகமப் பகுதியை நாம் காண்கின்றோம்.

எங்கே நிம்மதி, அங்கே எனக்கோர் இடம் வேண்டும் என்பது மனிதனின் தனக்கு அமைதிதேடும் முயற்சியின் பின்னணிப்பாடல் என்று கூறிவிடலாம். துன்ப வாழ்வில் பொன் இருந்தும் பொருள் இருந்தும் பெண் இருந்தும் பெயர் இருந்தும் மனதிலும் குடும்பத்திலும் அமைதி இல்லாது இந்தப் பாடலை அன்று தொட்டு இன்று வரை முனகிக்கொண்டிருக்கிறான் மனிதன்.

அமைதியைத்தேடி மதுவிலும் மாதுவிலும் புகையிலும் போதையிலும் மூழ்கிக்கொண்டிருக்கிறான் மனிதன்.

### பரமபிதா காட்டிய பாதை


வாழப்பிடிக்காமல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருக்கக் கூடாது நம்முடைய வாழ்க்கை. தவறான, அர்த்தமிழந்த நம் வாழ்வுக்கு அர்த்தம் கொடுக்க நம்மால் முடியும்.எப்படி? இயேசுவின் அன்பு நம் வாழ்வில் கடந்து வரும்போது உருக்குலைந்து நம் வாழ்வு உயிர் பெறும். அந்த இறையன்பை நாம் சுவைத்து அவரை வழியும் உண்மையுமாக ஏற்று வாழத் தொடங்குவதே அர்த்தமுள்ள வாழ்வுக்கான ஒரே வழி.

வாழ்க்கைப்போராட்டங்களிலும் வறுமையின் கோரப்பிடியிலும் கைதிகளாக இருந்த சூழ்நிலைகளிலும் அமைதியை இழக்காமல் வாழ்க்கையின் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியோடு வாழ்ந்து இவ்வுலகிலிருந்து விடைபெற்றவர்கள் ஏராளம். [illegible]யம் யார்? இயேசுதான். எங்கள் வாழ்விலும் நிறைவான, முழுமையான அமைதியைத்தர அவரால் மட்டுமே முடியும். இயேசு கூறுகிறார். "நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்னிடமும் நம்பிக்கை கொள்ளுங்கள்"

அமைதிதேடி அலைமோதி நிலைகுலையும் மனித சமுதாயத்திற்கு இயேசு பதிலாக, தீர்வாக இருக்கிறார். "என் அமைதியையே உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் தரும் அமைதி உலகம் தரும் அமைதிபோன்றது அல்ல" இவ்வாறு தன் தெய்வீக அமைதியில் நமக்குப் பங்கு தருகிறார். எதைப்பற்றியும் கலங்கவோ மருளவோ அவசியம் இல்லா அமைதி இந்த இறை அமைதி. இறைவன் தரும் இந்த அமைதி சற்று வித்தியாசமானது. முற்றிலும் புதுமையானது. இது வேதனையில் கிடைக்கும் அமைதி, இழப்பில் குவியும் அமைதி, பாரங்கள் சுமப்பதில் புதைந்திருக்கும் அமைதி, குழப்பங்களின் ஆழத்தில் அமிழ்ந்திருக்கும் அமைதி. உள்ளுக்குள் இருந்து உயிரூட்டி, உரமூட்டி உற்சாகப்படுத்தி வாழ வைக்கும் அமைதி. இந்த அமைதியைத் தேடுவாம்.

உயிர்த்தஆண்டவர்தருகின்றஅமைதி உலகு சார்ந்த அமைதி அல்ல, போர்களுக்குப்பின் வருகின்ற அமைதி அல்ல, இயற்கைச் சீற்றங்களுக்குப் பின் வருகின்ற அமைதி அல்ல, நமது உள்ளம் சார்ந்த அமைதி. அதையே இறைவன் நமக்கு கொடையாக வழங்குகிறார். ஆண்டவர் கொடுத்த அமைதியின் மூலம் நமது வாழ்வை அச்சங்களற்றதாக ஐயங்களற்றதாக வாழ முனைவோம்.

ஆயுதங்களால் உண்மையான அமைதியைக் கொண்டுவர முடியாது. உறவால்தான் முடி யும். குடும்பங்களிலும் இன்று அமைதியற்ற சூழல். கணவன்-மனைவிக்கிடையே பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையே அமைதியின்றிவாழும் நிலைகாண்கின்றோம். பணமோ பொருட்களோ அமைதியைத் தர இயலாது. உறவு தான் அமைதியைத் தரும். முதலில் இறைவனோடு நல்லுறவு கொள்வோம். அப்போது உலகம் தர இயலாத அமைதியை அவர் நமக்குத் தருவார்.



ஹெலன்கெல்லர் என்பவர் புகழ் பெற்ற எழுத்தாளராகவும் சிறந்த பேச்சாளராகவும் அரசியல் ஆர்வலராகவும் விளங்கிய ஓர் அமெரிக்கப்பெண். பிறந்து 19 மாதங்களில் ஏற்பட்ட கடும் காய்ச்சல் காரணமாக கண்பார்வை, கேட்கும் திறன், பேசும் திறன் ஆகியவற்றை இவர் இகழ்ந்தார். எனினும் உலகில் இளங்கலைப்பட்டம் பெற்ற பார்க்கவும் கேட்கவும் முடியாத முதல் மாற்றுத் திறனாளி என்ற பெருமைக்கு உரித்தானவர் இவர். ஒருநாள் ஹெலன் கெல்லரைப் பார்க்கச் சென்ற அவரது நண்பர் ஒருவர் அவரிடம் "உங்களுக்கு விருப்பமான ஒன்று தரப்படுகிறது என்றால் அது என்னவாக இருக்க வேண்டும்?" என்று கேட்டார். பார்க்கும் திறனும் கேட்கும் திறனும் தனக்குத்தேவை என்று சொல்வார் என அந்த நண்பர் எதிர்பார்த்தார். ஆனால் ஹெலன் கெல்லரோ அமைதியாகப் பதில்சொன்னார். "இந்த உலகத்தில் அமைதி மலர வேண்டுமென்று கேட்பேன்" என்று இயேசு எங்களுக்குத் தரும் அமைதியை உலகிற்கு அள்ளி வழங்குவோம்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னச் சின்ன ஆசை....



சென்னை சிதம்பரம் விளையாட்டரங்கில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் அணிகள் மோதிய ஆட்டத்தில் சென்னை வீரர்களுக்கு ஆதரவாக களமிறங்கிய பிஞ்சுகள்.

# மினி உலகக் கிண்ணம் - 2013

## இந்திய அணியிலிருந்து கம்பீர் - யுவராஜ் நீக்கம்

ஐ.சி.சி. மினி உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி ஜூன் 6ஆம் திகதி -23ஆம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இந்த போட்டிக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி நேற்று அறிவிக்கப்பட்டது. முன்னணி வீரர்களான கம்பீர், யுவராஜ்சிங் அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அறிவிக்கப்பட்டுள்ள இந்திய அணி விவரம் வருமாறு:-

டோனி (தலைவர்), முரளி விஜய. வீராட்கோலி, இர்பான்பதான். உமேஷ் யாதவ், வினய்குமார். தவான், ரெய்னா, ரோகித் சர்மா. தினேஷ் கார்த்திக், ரவீந்திர ஜடேஜா. அஸ்வின், புவனேஷ்வர்குமார். இஷாந்த் சர்மா, அமித்மிஸ்ரா.

## இங்கிலாந்து அணியும் தயார்

இங்கிலாந்தில் இடம்பெறவுள்ள மினி உலகக் கிண்ணப் போட்டிக்கு அலஸ்ரெயர் குக் தலைமையிலான 15 பேர் கொண்ட குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.


அவ்வணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் உபாதை காரணமாக இத்தொடரில் பங்குபற்ற முடியாத நிலையிலேயே இவ்வணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

அலஸ்ரெயர் குக், ஜேம்ஸ் அன்டர்சன், ஜோனி பெயர்ஸ்ரோ, இயன பெல், ரவி போப்பாரா, ரிம் பிரெஸ்னன், ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜொஸ் பட்லர், ஸ்டீவன் ஃபின், ஒய்ன் மோரகன், கிறேம் ஸ்வான், ஜேம்ஸ் ட்ரெடவெட், ஜொனதன் ட்ரொட், கிறிஸ் வோக்ஸ்

## சென்னையின் வெற்றிக்கு தோனியின் சாதுரியமே காரணம்

– பீற்றர்சன் புகழாரம்



சென்னை சுப்பர் கிங்ஸின் வெற்றிக்கு தோனியின் சாதுரியமான தலைமைத்துவமே காரணம் என்று இங்கிலாந்தின் அதிரடி துடுப்பாட்ட வீரர் கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

டில்லி டேர்டெவில்ஸ் அணியில் இடம்பெற்றுள்ள பீட்டர்சன், காயம் காரணமாக இந்த ஐபிஎல் போட்டியில் விளையாடவில்லை. இந்நிலையில் டில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க வந்த அவர் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியினுடைய வெற்றியின் ரகசியத்தை எடுத்துரைத்தார்.

தோனியின் சாதுரியமான தலைமைத்துவம்தான், அந்த அணியின் வெற்றிக்கு காரணம். அந்த அணி மிக வலுவான துடுப்பாட்டத்தை கொண்டிருப்பதோடு, தரமான சுழற்பந்து வீச்சாளர்களையும் கொண்டுள்ளது. அவர்கள் அனைவரும் இந்திய ஆடுகளங்களில் நல்ல அனுபவம் பெற்றவர்கள் என்றார்.

பீட்டர்சன் இடம்பெறாததே டில்லி அணியின் தொடர் தோல்விக்கு காரணம் என்ற கருத்துக்கு பீட்டர்சன் கூறுகையில், இதை கேட்பதற்கே மகிழ்ச்சியாக உள்ளது. எனினும் நான் இடம்பெறாதது மட்டுமே தோல்விக்கு காரணமில்லை.

தொடக்க ஆட்டங்களில் சேவாக், மோர்ன் மோர்கல், வான் டெர் மெர்வ ஆகியோர் விளையாடவில்லை. ஜெஸ்ஸி ரைடர் தாக்குதலுக்குள்ளானதால் பங்கேற்க முடியாமல் போனது. இதுபோன்ற காரணங்களாலேயே ஆரம்பத்தில் தொடர தோல்விகளை சந்திக்க நேர்ந்தது" என்றார்.

## புதிய பயிற்சியாளர்

சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் புதிய தலைமைப் பயிற்றுவிப்பாளராக அந்த அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் அன்டி வெலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் பங்களாதேஷ் உடனான தொடருக்கு பின்னர் அணியின் பயிற்றுவிப்பாளர் பொறுப்பினை அவர் ஏற்கவுள்ளார்.

இந்நிலையில், தற்போது சிம்பாப்வே தேசிய அணியின் பதில் பயிற்றுவிப்பாளராக செயற்படும் ஸ்ரிபன் மன் கொன்கோ உதவிப் பயிற்றுவிப்பாளராக பணியாற்றவுள்ளார்.

### இன்றைய ஆட்டங்கள்

CHENNAI SUPER KINGS Vs MUMBAI INDIANS — பி.ப 4 மணி

RAJASTHAN ROYALS — PUNE WARRIORS INDIA — இரவு 8 மணி



பங்களாதேஷ் அணியின் அதிரடி வீரர் முஹமட் அஷ்ரபுல் பந்தொன்றை பறக்க விடும்போது....

சிம்பாவே அணியுடனான முதலாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 121 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சிம்பாப்வேயிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணிக்கும், சிம்பாப்வே அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டி புலவாயோவில் இடம்பெற்றது. இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைப் பெற்றது. முதலாவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன்பின்னர் 4 விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றுத் தடுமாறியபோதிலும், மத்தியவரிசை வீரர்களின் சிறப்பான துடுப்பாட்டத்தால் பலமான நிலையை அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணி சார்பாக நசீர் ஹொசைன் 67 பந்துகளில் 68 ஓட்டங்களையும், மொமினுல் ஹக் 66 பந்துகளில் 38 ஓட்டங்களையும், மகமதுல்லா 38 பந்துகளில் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக ஷிங்கி மஸகட்ஸா 4 விக்கெட்டுக்களையும், டென்டாய் சத்தர 2 விக்கெட்டுக்களையும், டினாஷே பனி யங்கர ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

270 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே அணி 32.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 148 ஓட்டங்களைப் பெற்று 121 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களை இழந்த அவ்வணியால் வெற்றி இலக்கை நோக்கி முன்னேற முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக ஹமில்ற்றன் மஸகட்ஸா 53 பந்துகளில் 38 ஓட்டங்களையும், பிரென்டன் டெய்லர், ஷிங்கி மஸகட்ஸா ஆகியோர் தலா 33 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் பங்களாதேஷ் அணி சார்பாக ஷியவூர் ரஹ்மான் 5 விக்கெட்டுக்களையும், ஷபீல் இஸ்லாம் 2 விக்கெட்டுக்களையும், றொபியுல் இஸ்லாம், அப்துர் ரஷாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.


இப்போட்டியின் நாயகனாக ஷியவூர் ரஹ்மான் தெரிவானார்.

# முதல் வெற்றியை சுவைத்தது பங்களாதேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்காவிடம் அடங்கினார் மஹேல






டெல்லி அணிக்கெதிரான போட்டியில் சன்ரைசர்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் 48வது லீக் நேற்று இரவு 8 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சன்ரைசர்ஸ் ஐதராபாத்–டெல்லி டேர்டெவில்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டில்லி அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. தொடக்க ஆட்டக்காரர்களாக ஜெயவர்த்தன – சேவாக் களம் இறங்கினார்கள்.

இருவரும் நிதானமாக விளையாடினார்கள் என்றாலும் அவர்களது விக்கெட்டை காப்பாற்ற முடியவில்லை.

ஜெயவர்த்தன 12 பந்தில் 11 ஓட்டமும் சேவாக் 17 பந்தில் 8 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

அதன் பின் வந்த வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 19.1 ஓவரில் 80 ஓட்டம் எடுப்பதற்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இந்த ஐ.பி.எல் தொடரில் இதுதான் குறைந்தபட்ச ஓட்டங்கள் ஆகும்.

ஐதராபாத் அணி சார்பில் ஸ்ரெயின், பெரேரா, சமி ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

81 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் ஐதராபாத் அணி களம் இறங்கியது தவான் –பார்த்தீவ் படேல் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்கு 33 ஓட்டங்கள் எடுத்து நல்ல தொடக்கம் அமைத்தது.

தவான் 22 ஓட்டங்களும் படேல் 14 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தார்கள்.

அதன்பின் வந்த சங்கக்கார 8 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார். சமி ஆட்டமிழக்காமல் 18 ஓட்டடங்கள் எடுக்க ஐதராபாத் அணி 4 விக்கெட்டை மட்டும் இழந்து 13.5 ஓவரில் 81 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐதராபாத் அணி 11 போட்டிகளில் 7 இல் வெற்றி பெற்று புள்ளிப் பட்டியலில் 3வது இடத்தை பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக சன்ரைசர்ஸ் அணியின் சமி தெரிவானார்.



## காலநிலையில்

அவதானமாகச் செயற்படுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் காலையிலும் பிற்பகலிலும் மழை பெய்யும் அதேவேளை நாட்டின் ஏனைய பகுதிகளில் பிற்பகலில் இடியுடன் கூடிய மழையுடன் காற்றின் வேகமும் அதிகரிக்கும்எனதிணைக்களம்குறிப்பிட்டுள்ளது.

மாற்றமடைந்துள்ள இந்தக் காலநிலை ஓரிரு தினங்களுக்கு நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ–11)

## வடக்கு தேர்தலுக்கு...

[illegible]வரையில் மீள்குடியேற்றப்படவில்லை.

இதன்மூலம் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு மீள்குடியேற்றப்பட்ட பலரின் சத்தியக் கடதாசிகள் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளன.

வெளியேற்றப்பட்ட சிங்களவர்களுக்காக ஐக்கிய தேசியக் கட்சி ஆணைக்குழு ஒன்றை நிறுவியது. அந்த ஆணைக்குழுவில் நானும் சாட்சியமளித்தேன்.

சிங்களவர்கள் வெளியேற்றப்பட்டமைக்கு எதிராக தேசப்பற்றுடைய அமைப்புக்களுடன் இணைந்து போராடப் போவதாக அல்லே குணவன்ச தேரர் தெரிவித்தார். (எ– 11)

## அரசு–மூஸ்...

வழங்கவில்லை. அரசு எமது கட்சியை உதாசீனம் செய்துள்ளது.

இதனால் ஆளும் கட்சியை விட்டு வெளியேறி எதிர்க் கட்சியில் அமர வேண்டுமென கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் தலைமைத்துவத்தை வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் ஆளும் கட்சியில் இணைந்திருப்பதனால் எவ்வித பயனும் கிடையாது என கட்சி உறுப்பினர்கள் வலிறுத்தியுள்ளனர். (எ–11)

## பொதுநலவாய...

உட்பட்ட நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்று கோரிக்கைகளும் வலுப்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் குறித்த கோரிக்கைகள் மற்றும் அழுத்தங்களை சவாலாகக் கொண்டு டேவிட் கமரூன் இலங்கையில் இடம்பெறும் மாநாட்டில் பங்குபெறவுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு ஏற்கெனவே எடுத்த முடிபுக்கு மதிப்புத் தந்து அந்த அமைப்பின் கொள்கைகளை வலுப்படுத்தும் முகமாகவே இந்த முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையில் இடம்பெறும் மாநாட்டில் பங்கேற்காமல் இருப்பதன் மூலம் இலங்கையின் மனித உரிமைமீறல் சம்பவங்களை கட்டுப்படுத்த முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கு மாறாக இலங்கைக்கான விஜயத்தை அந்த நாட்டின் மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் உரிய வகையில் பயன்படுத்திக் கொள்ள டேவிட் கமரூன் எண்ணியுள்ள[illegible] பிரித்தானிய ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது. (எ–11)


**வேலையாட்கள் தேவை**

நவாலி சீலன் பேக்கவுசிற்கு பிஸ்கட் போடத் தெரிந்தவர்கள் (ஆண், பெண்) தேவை.

**சீலன் பேக்கரி**
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
Tel.No.077 4766294

(C-3219)

NORTH LEAD EDUCATIONAL CENTER

**ஆங்கில, சிங்கள, கணனி வகுப்புகள்**
**புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன**

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் புரிபவர்கள், அரசமொழி பரீட்சைக்கு தோற்றவுள்ளவர்களுக்கும், மற்றும் மொழியை கற்க ஆர்வமுள்ள அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மொழியை இலகுவாக பேச, எழுத, வாசிக்க, அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களினால் கற்பித்துக் கொடுக்கப்படும். (Duration 4 Month)

328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel: 021-222 4459, 0772533390, Fax: 222 4460

*காலத்தை வீணடிக்காதீர்கள்....*



- மிகவும் வித்தியாசமாகவும், இலகுவான முறையிலும் கற்றுத் தரப்படும் தையல் வகுப்புக்கள். (காலத்திற்கு ஏற்ப நவீன முறையிலான கட்டிங்குகள்)
- வெளிநாடு செல்ல இருக்கும் பெண்களுக்கு மிகவும் உகந்தது. (அதிக வருமானத்தை பெற்றுத்தரக் கூடியது)
- குறுகிய காலத்திற்கு நிறைவான பலன்கள் (3 மாதங்கள் மட்டுமே)

**ஒரு பிரிவில் 10 விண்ணப்பங்கள் மட்டுமே**

உடனே அழையுங்கள்:–
**சஞ்சிஜா ரெயிலரிங்**
5 ஆம் ஒழுங்கை, கலட்டிச்சந்தி, திருநெல்வேலி
தொடர்புகளுக்கு:–077 1882507, 077 0421662

(சி-3230)

union assurance **வேலைவாய்ப்பு**

**இலங்கையில் முன்னணி வகிக்கும் கம்பனிகளில் ஒன்றானதும் மற்றும் 25 வருடங்களை பூர்த்தி செய்துள்ள யூனியன் அசூரன்ஸ் கம்பனியின் புதிய சுன்னாக பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்**

☆ முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் (A.D.O)
☆ முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (A.D.M)
☆ சிரேஷ்ட முகவர் அபிவிருத்தி முகாமையாளர் (S.A.D.M)

- மேற்படி பதவிக்கான Basic Allowance 20500/= தொடக்கம் 39000/= வரை.
- ORC மற்றும் மேலதிக நன்மைகளும்
- Brilliant Starter Advisar Allowance
- மோட்டார் வாகனக் கடன் 1500000 வரை
- மடிக்கணனி (Laptop)
- வீட்டுக் கடன் 1000000/= தொடக்கம் 10000000/= வரை

**மேற்படி பதவிக்கான தகைமை**

- எந்தவொரு காப்புறுதி நிறுவனத்திலும் குறைந்தது ஒரு வருட காலம் அல்லது அதற்கு மேல் வேலை செய்தவர்கள், செய்து கொண்டிருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.
- சந்தைப்படுத்தல் துறையில் (Marketing) முன்அனுபவம் இருப்பவர்கள் நேர்முகத் தேர்வுக்குத் தோற்றலாம்.

காலம் : வியாழக்கிழமை (09.05.2013)
நேரம்: முற்பகல் 10 மணி
இடம்: யூனியன் அசூரன்ஸ்
இல. 160 1/6 K.K.S வீதி,
சுன்னாகம் (சம்பத் வங்கிக்கு மேல்)

தொடர்புக்கு: 0773664160

(C-3227)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி திருத்தும் பாடநெறி
*Computer hardware repairing*

- குறுகிய காலத்தில் 100% தொழில் உத்தரவாதத்துடன் உயர் வருமானம் தரும் சான்றிதழ் பயிற்சி பாடநெறி
- உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் வருமானம் தரும் தொழில்துறைக்கு இட்டுச் செல்லும்
- கணனி பழுதுபார்ப்புத் துறையில் DIPLOMA பாடநெறி. [சர்வதேச தரத்திலான சான்றிதழ்] அனுபவம் வாய்ந்த ஆசிரியரின் வழி காட்டல்.
- பாடநெறி முடிவின்போது எந்தவொரு கணினியையும் 100% பழுதுபார்க்கும் இயலுமை

computer booting, assembling, trouble shooting (wxp, w7, w 8, linux,) etc.

புதிய பிரிவுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு முந்திக் கொள்ளவும்.

IiSEEES NALLUR CAMPUS
762, Point Pedro Road, Nallur. 021 222 4728/ 077 7444225

(c-3194)



## STUDY in LONDON
June/July Intake started now

- G.C.E O/L தகைமை போதுமானது.
- மிகக்குறுகிய காலத்தில் பயணிக்க கூடிய அரிய சந்தர்ப்பம்.(3/4 வாரங்களில் வீசா)

City&Guilds Approved centre

**City&Guils B1 or IELTS பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களா நீங்கள்...? உங்களுக்காக, "கல்லூரிக்கட்டணம்"மற்றும் "Sponsor" ஏற்பாடுகளிற்கு எமது நிறுவனமே பணத்தை செலவு செய்கின்றது.**



கடந்த வாரங்களில் வீசா கிடைக்கப்பெற்ற மாணவர்கள்

வீசா கிடைப்பதற்கு முன்னதாக எவ்விதமுற்பணமும்உங்களிடத்திலிருந்து அறவிடப்படமாட்டாது.

பெற்றோரின் நம்பிக்கையையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் அடிப்படையாகக்கொண்டே எமது நிறுவனம் இவ்வாறான வீசா-ஆலோசனை நடைமுறையை மேற்கொண்டுவருகின்றது.

இந்த பொன்னான அரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது எம்முடன் இணைந்து உங்கள் கனவை நனவாக்குங்கள்.

City&Guilds English (A1,B1/B2), IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

Gov.Reg No: TN/DS/UC/0324

WORLD EDUCATION & CONSULTANCY(PVT)LTD
No:377,Sangaththanai, Chavakachcheri.
T.P: 021 7200 989 Mob: 0779 265447 (சி-3213)



## Direct Marketing International Pvt (Ltd)
### வேலைவாய்ப்பு

(Management Trainees-2013) 25 People Needed Imediatly

சர்வதேச ரீதியில் இயங்கும் நிறுவனத்திற்கும் அதன் வடமாகாண கிளைகளுக்கு(யாழ்ப்பாணம்,வவுனியா,கிளிநொச்சி,முல்லைத்தீவு, மன்னார்) ஆகியபிரதேசங்களிலிருந்து O/L, A/L படித்தவர்கள் தொடர்புகொள்ளலாம்.

- Trainee Marketing Executive,
- Sales Representatives.
- Innvontary Customer Service.

பயிற்சியின்போது fixed income Package ஆக 12,000–15,000 பெறலாம்.

குறிப்பு: தங்குமிட வசதிகள் உண்டு; வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0775566224, 0217200867, 0755049038

(C-3206)



## IMMEDIATE VACANCIES

33 வருடங்களாக இயங்கிவரும் எமது கனேடிய நிறுவனத்தின் புதிய பிரிவுக்கான தொழில் வாய்ப்புக்கள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது.

- Administration
- Management Trainee
- Marketing
- Accountant

**எமது கம்பனி மூலமாக பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்கள்**

- குறுகிய காலத்தில் பதவியுயர்வு
- வெளிநாடு செல்லும் வாய்ப்புக்கள்
- மற்றும் பல விசேட சலுகைகள்
- தேவையாயின் தங்குமிட வசதியும் செய்து தரப்படும்.

பயிற்சியின்போது 12, 000/-
பயிற்சியின் பின்னர் 40, 000/- + Commission

**தகைமை :** O/L, A/L அனுபவம் தேவையில்லை

For Interview: 0779297992

வயதெல்லை : 19-30

(2519)



## கார் விற்பனைக்கு

65-XXXX எனும் தொடரிலக்கத்தையுடைய Toyoto corolla wagon டீசல் கார் உடன் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:-0714275724**

(2530)


## லயன் எயார்...

ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

இந்நிலையில் வடபகுதி கடற்பரப்பின் இரணைத்தீவுக்கு அண்மையில் கடலுக்கு அடியிலிருந்து இந்த விமானத்தின் சிதைவடைந்த பாகங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் 11.30 மணியளவில் குறித்த கடற் பிரதேசத்துக்குச் சென்ற பயங்கரவாத புலனாய்வுப் பிரி வின் தலைவர் பொலிஸ் அத்தியட்சர் அசங்க கரவிட்ட, பொலிஸ் ஊடக பேச்சாளர் புத்திக சிறிவர்தன உள்ளிட்ட பொலிஸ் மற்றும் முப்படையைச் சேர்ந்த 250க்கும் மேற்பட்டவர்கள் மேற்படி விமானத்தின் பாகங்களை மீட்டனர்.விமானத்தின் என்ஜின் மோட்டர் மற்றும் விமானத்தின் பின்புறப் பகுதிகள் சில இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

இலங்கை கடற்படைக்குச் சொந்தமாக கப்பலொன்றின் உதவியுடன் இந்த விமானத்தின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. குறித்த விமானத்தின் பாகங்கள் கடலுக்கு அடியில் மிகவும் ஆழமான பிரதேசத்தில் இருப்பதால் அவற்றை மீட்பதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மேற்குறிப்பிட்ட சில பாகங்களை மாத்திரமே தற்போதைக்கு மீட்க முடிந்ததாகவும் கடற்படையினர் அறிவித்தனர்.

இந்த விமானத்தின் பாகங்கள் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் அவற்றை கரைக்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தொல்பொருள் அகழ்வாராய்ச்சி திணைக்கள அதிகாரிகள், நாரா நிறுவனத்தின் அதிகாரிகள், அரச பகுப்பாய்வு பிரிவு அதிகாரிகள், சட்டமா அதிபரின் ஆலோசனைக் கமைய சிரேஷ்ட சட்டத்தரணிகள், அரசாங்க அளவைத் திணைக்கள அதிகாரிகள் மற்றும் பயங்கரவாதபுலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோரே விமானத்தின் பாகங்கள் விழுந்து கிடப்பதாகத் தெரிவிக்கப்படும் பகுதிக்கு சென்றனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட விமானத்தின் பாகங்கள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட நீதவான் எம்.வை. மஹறூப்தீன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்.

கடந்த 1998 செப்டம்பர்மாதம் 29ம் திகதி 48 பயணிகளுடன் 8 விமான சிப்பந்திகளுடனும் பலாலியில் இருந்து இரத்மலானை நோக்கிப் பயணித்த லயன் எயார் விமானம் விடுதலைப் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலில் வீழ்த்தப் பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது. (எ-11)


## AHAVOLI

**Institute for Higher Studies offers a Diploma Course in Peace Building & Community Development Practice**

The Applications are called for this course. This is a one year, week – end (Saturday & Sunday) Course that consists of 240 hours. The applicants should have the following prerequisites to apply for this course:

1. Knowledge of English as to read, write and speak.
2. A Pass in Advanced Level.
3. Interested in social activities.

The candidates will have to buy special form from our office and submit it before the 19th of May 2013.

N.B. The Diploma Certificate would be given by the National University of Ireland, Galway.

For further details please contact:
AHAVOLI
Institute for Higher Studies
Affiliated to National University, Galway
St. Patrick's Road, Jaffna. Contact No 021 222 2856

(2527)



## வாடகைக்கு விடப்படும்



உடையார்கட்டு தெற்கு
யூதா கோயில் முன்பாக
A-35 வீதியில் அமைந்துள்ள
கடைத்தொகுதி
வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0779477870
0777192798
0779479894

(C-3220)



## ஒருநாள் அழகுக்கலை பயிற்சிப் பட்டறை

- சருமம் பற்றி விளக்கம்
- சருமத்தை கண்டுபிடிக்கும் முறை
- சருமத்தை பராமரிக்கும் முறை
- அழகு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கூறுதல்
- Facial

**செயல்முறை விளக்கத்துடன் சிறப்பான முறையில் விரிவுரை வழங்கப்படும்**

**திகதி : 11.05.2013 (சனிக்கிழமை)** **நேரம் : 10.30 மணி**
**இடம் : அறியத் தரப்படும்**
**கட்டணம் : ரூபா 750.00**
**பதிவுக்குரிய இறுதித் திகதி : 08.05.2013**
**தொடர்புகளுக்கு : 0727712604/021 5888000/01**

உங்கள் பதிவுகளை கீழ்வரும் விலாசத்திற்கு எதிர்வரும் 08 ஆம் திகதிக்கு முன் வருகை தந்து கட்டணத்தை மேற்கொள்ளவும்.

**187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

முதல் 50 பதிவுகளுக்கு ஒறிபிளேம் சுவீடன் நாட்டு நிறுவனத்தில் இலவசமாக அங்கத்துவத்தை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு உண்டு.

பயிற்சியில் கலந்துகொள்ளும் அனைவருக்கும் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.

(சி-3215)



## Immediately Work In Qutar Petroleum Corporation

Oil and Gas Clening Labour -50 பேர்

800 + Food + 8 Hour duty + overtime

அதி உயர் சம்பளத்துடன் இன்னும் பல சலுகைகளையும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு வாரத்தில் பயணம்

தொடர்பு: Air Trust - 0772393165

(C-3211)



## ஓடுகள், செங்கற்கள் விற்பனைக்குண்டு



தரமான ஓடுகள், செங்கற்கள் யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களுக்கு குறைந்த செலவில் விநியோகம் செய்துதரப்படும்.



(C-3214)

பிரணவன் என்ரபிறைசஸ் 0773818799
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(சங்கிலியன் சிலைக்கு முன்பாக)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org